REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 பெப்ரவரி 28 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්

வரு. 91 இல. 51 | Wednesday 28, February, 2024 | 20பக்கங்கள் | 50/-

## உஷ்ண காலநிலை தொடரும் நடமாட்டங்களை தவிர்க்கவும்

நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் தற்போது நிலவும் கடும் வெப்பத்துடன் கூடிய காலநிலை, அடுத்த மாத நடுப்பகுதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்றும் அதிக வெப்ப நிலை காணப்பட்டதுடன் குருநாகல் மாவட்டத்தில் அதிகூடிய வெப்பநிலையாக 35. 5 பாகை செல்சியஸ் பதிவா கியுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம்

06

## காஸா சிறுவர் நிதியம்: ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)



காஸாவில் மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு மருத்துவ உதவி மற்றும் நிவாரணம் வழங்குவதற்காக 'காஸாவிற்கான சிறுவர் நிதியம்' ஒன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அரசாங்கத்தினால் ஒரு மில்லியன் டொலர் நன்கொடையாக வழங்கப்படுவதுடன், ஐக்கிய நாடுகள் உத்தியோகபூர்வ அங்கத்துவ நிறுவனத்தினூடாக அதனை பெற்றுக் கொடுக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களில் இம்முறை

06

## அழுத்தங்கள் அதிகரித்தால் பதவியை துறந்து மக்களுடன் போராடுவேன்

### நாட்டு மீனவர்களின் நலனே எனது முதற் தெரிவு



தமிழக கடற்றொழிலாளர்கள் விடயத்தில் அழுத்தங்கள் அதிகரித்தால், அமைச்சு பதவியை துறந்து யாழ், கடற்றொழிலாளர்களுடன் இணைந்து போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்ற நிகழ்வில்

06

## இஸ்ரேலில் தொழில் தருவதாக சில கும்பல்கள் பண மோசடி

### ஏமாற வேண்டாமென அமைச்சர் எச்சரிக்கை



முறையற்ற வகையில் பணம் செலுத்தி எவரும் இஸ்ரேலில் தொழில் வாய்ப்புகளை பெற முடியாது என்றும், எவரேனும் இவ்வாறு பணம் பெற்றிருந்தால் அவர்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு தெரியப்படுத்துமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

விவசாயத்துறையில் 39 பேர், வீட்டு தாதியர்களாக 32 பேர், இஸ்ரேலில்

06

# சிறு, நடுத்தர தொழில் முயற்சிகளை கட்டியெழுப்ப ரூபா 2000 கோடி நிதி

## ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்

### வணிக வங்கிகள், அனுமதி பெற்ற நிதி நிறுவனங்களுக்கு இலகு வட்டியில் கடன்

### செயலிழக்கும் தொழில் முயற்சிகளுக்கு புத்துயிரூட்ட பாரிய திட்டம்



லோரன்ஸ் செல்வநாயகம்

ஸ்தம்பிதமடைந்துள்ள துறைகள், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி பிரிவுகளை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் 20 பில்லியன் ரூபாவை வணிக வங்கி மற்றும் அனுமதிப்பத்திரம் கொண்ட நிதி நிறுவனங்களுடாக இலகு வட்டி வீதத்தின் கீழ் பெற்றுக் கொடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த திட்டத்துக்காக 20 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளதுடன், அதில் 15 பில்லியன் ரூபாவை தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மற்றும் புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும் மேலும் 5 பில்லியன் ரூபாவை செயலிழந்துள்ள கடன் வகை திட்டத்தின் கீழ் காணப்படும் தொழில் முயற்சியாளர்களுக்கு உதவியாக பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பாரிய கையிருப்புக்கள் இன்றி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது நிறுவனங்களை மூடிவிடும் நிலை காணப்படுகிறது.

மேலும் சில தொழில் முயற்சி நிறுவனங்கள் பகுதிகளாக மூடப்பட்டுள்ளன. இதனால் இது போன்ற பெருமளவு திட்டங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனை கருத்திற் கொண்டு நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச அமைப்புகளிடம் அது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார். இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி இதற்கான கடன் உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க உத்தேச கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் நிதி மற்றும் பொருளாதார மேம்பாடு தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார பின்னடைவு காரணமாக உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, சுற்றுலாத்துறை, ஆடைத்தொழில் மற்றும்

06

## பொதுப் போக்குவரத்துக்கு எதிரான வீதிப்பயங்கரவாதம் ஒழிக்கப்படும்

### சம்பந்தப்பட்டோரின் அனுமதி பத்திரங்களும் ரத்து - அமைச்சர் பந்துல



லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுமக்களின் அத்தியாவசிய சேவையை நிறைவேற்றும் இ.போ.ச ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்த இடமளிக்க முடியாதென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இ.போ.ச மற்றும் தனியார் பஸ் ஊழியருக்கிடையிலான மோதல் தொடர்பாக நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே, அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்: வன்முறையை எவர், பிரயோகித்தாலும் நீதிமன்றத்துக்குச் சென்று நீதியை நிலைநாட்ட வேண்டும். பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சட்டத்தை சரியாக நிறைவேற்றுவது அவசியம்.

இ.போ.ச மற்றும் இ.போ.ச ஊழியர்களை பாதுகாப்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். அவர்களுக்காக காப்புறுதி முறை ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் பஸ் ஊழியர்கள் தாக்குதலுக்குள்ளானமை மற்றும் துன்புறுத்தலுக்கு இலக்கானமையால், இலங்கை போக்குவரத்து சபை பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஊடக அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகை

06

## முறைப்பாடுகளின் உள்ளடக்கத்தை அறிவிப்பதை கட்டாயமாக்க சுற்றறிக்கை

### பொலிஸ் மாஅதிபர் நீதிமன்றத்தில் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

முறைப்பாடு தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்கு பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்படும் தரப்பினருக்கு, முறைப்பாட்டின் உள்ளடக்கம் தொடர்பில் அறிவிப்பதை கட்டாயப்படுத்தும் சுற்றறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மின் சக்தித்துறை தொடர்பான செயற்பாட்டாளர் எம். பி. வி ரெலபனாவவினால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட

06

## நட்டத்தில் இயங்கிய 52 அரச நிறுவனங்கள் இலாபமீட்டும் வகையில் பாரிய முன்னேற்றம்

### அரசின் சிறந்த வேலைத்திட்டமே காரணம்



லோரன்ஸ் செல்வநாயகம்

2022 ஆம் ஆண்டில் 743 பில்லியன் நட்டம் ஏற்படுத்திய 52 அரச நிறுவனங்கள், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 313 பில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற அஸ்வெசும தொடர்பான நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இந்த நிறுவனங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை போன்ற

06

## யாழ். புதிய இந்திய துணை தூதுவர் கடமையேற்றார்



யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத் தூதுவராக செவிதி சாய் முரளி நேற்று முன்தினம் திங்கட்கிழமை (26) கடமைகளை பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதராக

06

## எரிபொருள் விலைச் சூத்திரத்தில் எதிர்காலத்தில் புதிய நிவாரணம்



எரிபொருள் விலை சூத்திரத்திற்கு எதிர்காலத்தில் நிவாரணம் வழங்கப்படும் என, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பூஜ்ஜியத்திலிருந்து 4 சதவீதம் வரையான

06

## சிறைச்சாலை நெரிசல்களை தீர்க்க திறந்தவெளிக்கு கைதிகள் மாற்றம்

### புதிய நிர்மாணப்பணிகளும் துரிதமாகிறது



சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசல்களைக் குறைப்பதில் கவனம் செலுத்தியுள்ள அரசாங்கம்,புதிய சிறைச்சாலைகளை நிர்மாணிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.சில சட்ட சீர்திருத்தங்கள் மற்றும்

06

## சம்பள அதிகரிப்பு விவகாரம் மத்திய வங்கி அறிக்கை



சமீபத்திய சம்பள திருத்தத்தின் மூலம் மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் 50 சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் 70% அதிகரிக்கப்பட்டுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு

06

## உத்திக பிரேமரட்ன எம்.பி இராஜினாமா; சபாநாயகருக்கு நேற்று கடிதம் கையளிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரட்ன நேற்று தமது எம்பி பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இராஜினாமாவுக்கான காரணம் தொடர்பில் எதனையும் வெளிப்படுத்தாத அவர், இராஜினாமா கடிதத்தை சபாநாயகருக்கு கையளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவரது இராஜினாமா கடிதம் தமக்கு கிடைத்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று தெரிவித்தார்.நாடகக் கலைஞரான உத்திக

06

## சுற்றுலாத்துறை: 18 நாட்களில் 138,736 பயணிகள் வருகை

### ரஷ்யா, இந்தியா, சீனாவிலிருந்து அதிகளவு வரவு



நாட்டில், இம்மாதத்தின் முதல் 18 நாட்களில் மாத்திரம் 138,736 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். ரஷ்யாவிலிருந்து 20 ஆயிரத்து 101 பேரும், இந்தியாவில் இருந்து 18 ஆயிரத்து

06

## தீர்வுக்காக நீதிமன்றில் கையேந்தும் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது

### அரியநேந்திரன் ஆதங்கம்



தமிழர்களின் தீர்வுக்காக நீதிமன்றிடம் கையேந்தும் நிலையை இலங்கை தமிழரசுக்கட்சி ஏற்படுத்தியு ள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

06

## உலக சாதனையில் முஹமது சம்லான்



28 மாதங்கள் அதாவது இரண்டு வயதும் நான்கு மாதங்களுமான (28 மாதங்கள்) முஹம்மது சபான் முஹமது சம்லான் என்ற சிறுவன், 35 நாடுகள்,அவற்றின் நாணயங்களின் விபரங்களை 46 வினாடிகளில் கூறி உலக சாதனை படைத்துள்ளார்.

இவர், வத்தளை ஹுனுப்பிட்டியவைச் சேர்ந்த பாத்திமா இபாஷா முஹம்மத் சபான் தம்பதிகளின் புதல்வராவார்.

(அஹ்சன் அப்தர்)

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



# இலங்கையின் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு குவைத் நாட்டினருக்கு அழைப்பு

## நாட்டின் சாதக நிலையை பயன்படுத்துங்கள்; குவைத் தேசிய தின நிகழ்வில் அமைச்சர் மனுஷ நாணயக்கார





இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான சூழலை பயன்படுத்தி குவைத் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரவேண்டுமென தான் அழைப்பு விடுப்பதாகவும் குவைத்தில் பணிபுரியும் 100,000 க்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு குவைத் இரண்டாவது தாயகமாகவுள்ளதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை, குவைத் அரசாங்கத்திற்கிடையில் 2009 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பரஸ்பர பாதுகாப்பு உடன்படிக்கையானது பல வசதிகளை வழங்குகிறது. இதனால் குவைத் நாட்டின் முதலீட்டாளர்கள் அதிகபட்ச பலனைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறுவதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள குவைத் தூதரக ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற குவைத்தின் தேசிய தின நிகழ்வின் போது அமைச்சரால் இந்த விசேட அழைப்பு விடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் வெளிநாட்டு அமைச்சர் அலிசப்ரி உட்பட பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

"இலங்கை-குவைத்துக்குமிடையிலான இராஜதந்திர உறவு ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. இதுவரை இவ்விரு அரசுகளும் பரஸ்பர நெருக்கமான உறவுகளை பேணி வருகின்றன.

அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தின் மூலம் சலுகைக் கடன்களை எமது நாட்டிற்கு வழங்கி, இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு குவைத் அரசாங்கம் வழங்கிய ஆதரவானது இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகுத்துள்ளதை இங்கு குறிப்பாக நினைவுகூரப்பட வேண்டும்.

குவைத்தில் பணிபுரியும் 100,000 க்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு குவைத் இரண்டாவது தாயகமாகவுள்ளது, இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி அவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள குவைத் அரசாங்கத்திற்கு எனது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குவைத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக நிபுணர்களை வழங்குவதன் மூலம் குவைத்தின் வளர்ச்சிக்கு பங்காளியாக இருக்க விரும்புகிறோம்.

2020 பெப்ரவரி மாதம் இலங்கை வர்த்தக சம்மேளனத்திற்கும் குவைத் வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்திற்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இருநாட்டு வர்த்தகப் பிரதிநிதிகள் மேம்படுத்துவதற்காக வருகை தந்தால், அது பெரும் சாதகமான முடிவாக இருக்கும் என்று நான் நம்புகிறேன் எனவும் அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பிலான ஆய்வரங்கம்

## மார்ச் 02ஆம் திகதி கொழும்பில்

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**



எம்.ஐ.எம்.முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம், இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பிலான ஆய்வரங்கமொன்று (Annual Symposium) எதிர்வரும் மார்ச் மாதம் இரண்டாம் திகதி சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை முஸ்லிம்களிடையே வரலாற்றுப் பிரக்ஞை (History consciousness) குறைவாக உள்ளது. அது குறித்த ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் அதிகரித்தல், வரலாறு தொடர்பான அறிவை வளர்த்தல், புதிய ஆய்வறிவை (Research Findings) முன்வைப்பதற்கான களத்தை ஏற்படுத்தல்,. வரலாறு தொடர்பான அறிவைப் பகிர்தல் (Exchange of knowledge) கலந்துரையாடல் ஆகியன, மிக முக்கியமாகவும் வரலாற்று ஆய்வுகளில் ஆய்வு முறையியல், விஞ்ஞானபூர்வ அணுகுமுறை தொடர்பான அக்கறையை அதிகரிக்கச் செய்தல் போன்ற விடயங்களில் முஸ்லிம் எழுத்தாளர்களையும் ஆய்வாளர்களையும் ஊக்குவிப்பதும் அவர்களுக்கு ஓர் உந்து சக்தியைக்கொடுப்பதுமே இந்த ஆய்வரங்கின் முக்கிய நோக்கமாகும்.

நிலையத்தின் ஆளுநர் சபைத்தலைவர் பொறியியலாளர் ஜௌபர் இஸ்மாயில் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கில் நோக்க உரையை வரலாற்றுத்துறை பேராசிரியரும் புரூணை தாருஸ் ஸலாம் பல்கலைக்கழக ஓய்வு நிலைப்பேராசிரியருமான எஸ்.ஏ ஹுசைன்மியா நிகழ்த்துவார்.

# ஜனவரி முதல் நேற்று வரை 83 மனிதப் படுகொலைகள்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள சம்பவங்களில் 83 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வீடுகளை உடைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள 1180 திருட்டு சம்பவங்களும் 310 கொள்ளைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் குற்றச் செயல்களை தடுப்பதற்கான பல்வேறு வகையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நேற்றைய தினம் வரை 20 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் பத்து சம்பவங்கள் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் புரியும் தரப்பினரின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக (26) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெலிகம பெனாட்டியன பிரதேசத்தைச் சேர்ந்த இவர், வீதியைக் கடக்க முற்பட்ட போது மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் வண்டியில் மோதுண்டு பஸ் வண்டியின் சில்லுக்குள் சிக்கியே படுகாயம் அடைந்தார். பஸ் வண்டி சாரதி, வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

## மத்திய அரசு, மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள்

# இணைந்த அபிவிருத்தித் திட்டங்களே நாட்டுக்கான இன்றைய தேவையாகும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



அரச நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகள் காணப்படாத நிலை காரணமாகவே நாட்டின் அபிவிருத்தி சீர்குலைந்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் நாட்டின் அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தலின் போது மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் இணைந்த அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது முக்கியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், மத்திய அரசாங்கம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை நிறுவனங்கள், அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமான யோசனைகளை தயாரிக்கும் போது கிராமிய மட்ட மக்களின் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அந்த வகையில் மாவட்ட இணைப்புக் குழுக்கள் ஊடாக மேற்படி நிறுவனங்களுக்கிடையிலான இணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



உலக சமாதான மாநாடும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவமும் உலகளாவிய மனித உரிமைகள் பணியகத்தின் இலங்கை பணிமனையின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, அஜந்த ரணசிங்க 'தேசத்தின் மனிதர்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, பணிமனையின் இலங்கைத் தலைவர் ஏ.ஆர்.என். அமீர்கான், பொருளாளர் எம். குபேரலிங்கம் உள்ளிட்டவர்கள் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

## தர்காவீதி பெண்கள் அமைப்பு ஏற்பாட்டில்;

# சீனன்கோட்டையில் 25வருட காலம் தொடராக சேவையாற்றிய மருத்துவ தாதி கௌரவிப்பு





பேருவளை, சீனன்கோட்டைப் பகுதியில் கடந்த 1998ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சுமார் 25 வருடகாலமாக குடும்ப நல சுகாதார மருத்துவ தாதியாக (Mid Wife) பணியாற்றிய திருமதி டபிள்யூ.எல். குமாரி நந்தனியை பாராட்டி கௌரவிக்கும் விழா நேற்றைய தினம் (27) சீனன் கோட்டை, தர்கா வீதி பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதனை அமைப்பைச் சேர்ந்த அதிபர் பர்ஸானா ஹில்மி, பஹ்ரியா சர்பான் ஆகியோர் வழிநடாத்தினர். தர்கா வீதியிலுள்ள பௌஸியா இஸாமுதீன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதேசத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், அமைப்பின் அங்கத்தவர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர். இதன்போது 25 வருடகாலம் சேவையாற்றிய மருத்துவ தாதியான குமாரி நந்தனியின் பாகுபாடற்ற சேவையை பாராட்டி இங்கு உரைகள் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் ஏற்பாட்டாளர்களினால் 25வருட காலம் பிரதேசத்துக்கு அர்ப்பணிப்போடு சேவையாற்றிய குடும்ப நல மருத்துவ அதிகாரி திருமதி குமாரி நந்தனிக்கு இதன் போது ஏற்பாட்டாளர்களினால் நினைவுச்சின்னம் மற்றும் பெறுமதியான பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

மேலும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட சீனன்கோட்டை பிரதேசத்தில் பணியாற்றும் பெண் சுகாதார மருத்துவ அதிகாரிகளும் இதன்போது பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தாயின் மரணத்தை தாங்க முடியாத மகனும் மரணம்

## இந்துருவ பகுதியில் சம்பவம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தாயின் மரணத்தையடுத்து கவலை தாங்க முடியாத நிலையில் சில மணித்தியாலங்களில் மகனும் உயிரிழந்த சம்பவமொன்று இந்துருவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தாய் மரணமடைந்ததை தாங்க முடியாத மகன் சில மணித்தியாலங்கள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு அதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்துருவ கல்தரமுல்லே பிரதேசத்தைச் சேர்ந்த மெடில்டா பரனமான்ன என்ற 71 வயது தாய் கடந்த 22ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அவரது ஐந்தாவது மகனான லக்சிறி கொட்டகச்சி என்ற 47 வயது மகன் தாயார் மரணமடைந்ததையடுத்து அவர் மிகுந்த கவலையுடன் காணப்பட்டதாகவும் தாயார் இறந்த அதே தினத்தில் அவர் இறந்து சில மணித்தியாலங்களின் பின்னர் அவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



தர்கா நகர் சமூக சேவையாளர் தேசமான்ய பாஸி ஸுபைரின் முயற்சியினால் பேருவளை மாளிகாஹேன விளையாட்டு மைதானத்திற்கான எல்.ஈ.டீ. மின் குமிழ்கள், மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எஸ்.ஆர். குமாரிடம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். பாஸி ஸுபைர் ஏற்கனவே பேருவளை மஹகொட ஐ.எல்.எம். சம்சுதீன் வித்தியாலயத்திற்கும் மூன்று மின்குமிழ்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# ஊழல் மோசடியில் சொத்துக்கள் சேர்த்தல்; இதுவரை 352 முறைப்பாடுகள் பதிவு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

இலஞ்ச ஊழல் மற்றும் முறைகேடான விதத்தில் சொத்துக்கள் சேர்த்தல் தொடர்பில் இந்த வருடத்தின் முதல் மாதத்தில் 352 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை கமிஷன் ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஊழல்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற புகார்களின் எண்ணிக்கை 65 ஆகும். மேலும் இலஞ்சம் மற்றும் முறைகேடு தொடர்பாக 27 புகார்களும் முறைகேடாக சொத்துக்களை சம்பாதித்தமை தொடர்பில் 14 புகார்களும் கிடைத்துள்ளன.

இந்த வருடத்தின் முதல் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட குழுவினரில் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக அரச பாதுகாப்பு உள்நாட்டு விவகாரங்கள் மற்றும் பேரழிவுகள் முகாமைத்துவ அரசாங்க அமைச்சகத்தின் முகாமையாளர் தொழிலாளர் அலுவலக தொழிலாளர் அதிகாரி உட்பட தனியார் பிரிவின் கணக்காளர் மற்றும் மனிதவளங்கள் முகாமைத்துவ மற்றும் கிராம அலுவலகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது நீதிமன்றத்தில் 03 முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.



மாறை / வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் 2024ம் ஆண்டிற்கான முதலாம் தரத்துக்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வரவேற்பு நிகழ்வு அண்மையில் கல்லூரி வளாகத்தில் இடம் பெற்றது. கல்லூரியின் அதிபர் பத்ஹுர் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்ற இவ் வரவேற்பு நிகழ்வில் பாடசாலை பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மற்றும் மாணவர்கள் புது மாணவர்களை வரவேற்று அழைத்துச் செல்வதை படத்தில் காணலாம். (படம்: வெலிகம தினகரன் நிருபர்)

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 28 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN




# இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது

பாத்ஃபைண்டர் அறக்கட்டளை மன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பு மாநாடு இன்று (28) காலை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இம்மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்துசமுத்திரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டும், உலகப் பாதுகாப்பு மற்றும் விநியோகச் செயற்பாடு ஆகியவற்றில் பிராந்தியத்தின் தாக்கத்தை வலியுறுத்தும் வகையில், இம்மாநாடு நடைபெறுகிறது.

இரு தினங்கள் நடைபெறும் இம் மாநாட்டில், பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள உள்ளதாக பாத்ஃபைண்டர் அறக்கட்டளை மன்றம் அறிவித்துள்ளது. அமெரிக்கா மற்றும் ஜப்பான் தூதரகங்கள் மாநாட்டிற்கு இணை அனுசரணை வழங்குகின்றன.




இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் ஜப்பானின் தென்கிழக்கு, தென்மேற்கு ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவி அமைச்சர் ஹயாஷி மகோடோ ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்துசமுத்திரத்தின் பாதுகாப்பு உச்சி மாநாடு பாத்ஃபைண்டர் அறக்கட்டளை மன்றத் தலைவர் பெர்னார்ட் குணதிலக மற்றும் முன்னாள் இந்திய வெளியுறவு செயலாளரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சிவசங்கர் மேனன் ஆகியோரால் இணைந்து நடத்தப்படும். இந்த மாநாட்டில் இந்தோபசிபிக் மூலோபாயம் உட்பட இந்திய பெருங்கடல் சமூகத்தை பாதிக்கும் முக்கியமான தொனிப்பொருள்கள் குறித்து ஆழமாக ஆராயப்படும். மூன்றாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில் பிராந்திய முக்கியத்துவம். பாதுகாப்பு, பொருளாதார பரிமாணங்கள்,

காலநிலை மாற்றம், கடல் பேரிடர் முகாமைத்துவம் மற்றும் பசுமைப் பொருளாதார ஊக்குவிப்பின் போது எழும் சிக்கல்கள் குறித்தும் கவனம்

செலுத்தப்படும். இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பு மாநாடு, இணைய ஒளிபரப்பாகவும் வெளியிடப்படவுள்ளதால், அதில் பங்கேற்க விரும்புவோர் அல்லது ஒன்லைனில் தொடர்பு கொள்ள விரும்புவோர் அலுவலக நேரத்தில் 0114529952 என்ற தொலைபேசி எண்ணில் விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

## தவக்கால சிந்தனை



### நம்பிக்கையின் மறைபொருள்

“ஆண்டவரே, நீர்மீண்டும் வரும் வரையிலும் உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம், உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.” இதுவே நமது நம்பிக்கையின் மறைபொருளாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகள் இடைவெளியில் இது நமக்கெல்லாம் சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் இயேசுவின் சீடர்களுக்கு,அவருடன் கூடவே வாழ்ந்தவர்களுக்கு இது மாறுபட்டவிடயமாகும். இன்றைய நற்செய்தியில் இயேசுமீண்டு;ம் எருசலேமுக்குசென்று தலைமைக் குருக்களின் கரங்களில் ஒப்படைக்கப்படுவது குறித்து பேசுகிறார்.

அவர்கள் அவரை உரோமையரிடம் ஒப்படைப்பர்,அவர்கள் அவரை சித்ரவதைகள் புரிந்து சிலுவையில் அறைவர், ஆனால், மூன்றுநாட்களின் பிற்பாடுஅவர் சாவிலிருந்து உயிர்த்தெழுவார். இவை எதுவும் சீடர்களுக்கு உண்மையானதாகத் தெரியவில்லை.

சீடர்களுக்கு புரியாத பல விடயங்களைக் குறித்து இயேசு எடுத்துரைத்தார்.

ஆனாலும் சீடர்கள் இயேசுவின் புகழ்,அவர் மக்கள்மீது செலுத்திய சக்திவாய்ந்த தாக்கம் குறித்து கவனம் செலுத்தினர். அவர்கள் அவரால் புரியப்பட்ட நம்பமுடியாத புதுமைகளைக் கண்டனர்.

யாக்கோபு மற்றும் யோவானின் தாயார் தனது பிள்ளைகள் இறையரசில் இயேசுவின் நெருங்கிய ஆலோசனையாளர்களாக இருக்கவேண்டுமென விரும்பினார். யாருமே பாடுகள்,மரணம் குறித்து கேட்க விரும்பவில்லை. அவர்களது கவனமெல்லாம் அதிகாரம்,பதவி,கௌரவத்திலேயே தங்கியிருந்தது.

தனது வாழ்வின் நோக்கமும், முழுக் கவனமும் யாதெனில்,“ பணிவிடைபெறவல்ல, மாறாக பணிபுரியவே என்பதுடன் தன் வாழ்வினை பலருடைய மீட்புக்காக வழங்கவே”என்பதனை இயேசுஅவர்களுக்கு நினைவூட்டுகின்றார். இதனை புனித சனிக் கிழமையின் பாஸ்கா புகழுரையில்,“அடிமையை மீட்குமாறு தம் மகனையே அளித்த அன்புப் பெருக்கே” என்றுபாடுகிறோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

## சுமந்திரன் எம்பியின் தாயார் காலமானார்



யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் எம்பியின் தாயார் புஷ்பராணி மதியாபரணன் (வயது 85) நேற்று கொழும்பில் காலமானார். புகழ்மிகு தமிழறிஞர், கரவெட்டியூர் வித்துவான் சுப்பிரமணியத்தின் மருமகளான இவர் சாமுவேல் சுப்பிரமணியம் மதியாபரணனின் மனைவியாவார். அன்னாரின் இறுதிக் கிரியைககள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் செயற்படுத்தப்பட்ட காக்கைவலிப்பு (epilepsy) மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்கள் திட்டத்தின் நடைமுறைக்குப் பின்னரான மதிப்பீட்டை மேற்கொள்ளும் நோக்கில், இலங்கைக்கு வருகை தந்துள்ள அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் (SFD) தூதுக்குழுவினர் சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியை கொழும்பிலுள்ள தூதரக அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம். இத்திட்டத்திற்கு, அபிவிருத்திக்கான சவூதி நிதியம் 32 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கி உதவியமை தெரிந்ததே.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெள்ளிக்கிழமை விசேட நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உதவிச் செயலாளர் மு.மனோகரன் தலைமையில் (01) வெள்ளிக்கிழமை இடம்பெறும் இலக்கிய களத்தில்,“இடைநிலைக் கல்வியில் தமிழ் இலக்கியத்தின் வகிபாகம்”எனும் தலைப்பில் உரை நிகழ்த்தப்படவுள்ளது.

ஓய்வுநிலை ஆசிரியர் திரு.கு.ஸ்ரீ இராகவராஜன் இவ்வுரையை நிகழ்த்தவுள்ளார். தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெள்ளி மாலை மாலை 5.30 மணிக்கு இந் நிகழ்வு இடம்பெறுமென,பொதுச் செயலாளர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் அறிவித்துள்ளார்.

# பாலியல் கல்வி வெளியீடுகள் மார்ச் 07இல் வெளியிடப்படும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாலியல் கல்வி தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள புதிய கல்வி வெளியீடுகள்,எதிர்வரும் மார்ச் 07இல், வெளியிடப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. சிறுவர் பருவம் முதல் வயதுவந்தோர் வரையிலான சகலருக்கும் பாலியல் கல்வியை வழங்கும் நோக்கில்,இப்புதிய கல்வி வெளியீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த பாலியல் கல்வி வெளியீடுகள் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் முழுமையான மேற்பார்வை மற்றும் அவற்றின் அனுமதியுடன் துறைசார்ந்த நிபுணர்களால் தொகுக்கப்பட்டிருப்பதாகவும் கல்வியமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தலைமையில் அண்மையில் கூடிய பாராளுமன்ற சிறுவர் ஒன்றிய அமர்விலேயே, இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்ட இலங்கையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை மையமாகக் கொண்டு, தனி நபர்களுக்கு பாலியல் கல்வி தொடர்பிலுள்ள குறைந்த அறிவை விருத்தி செய்யும் நோக்கில்,இந்த வெளியீடுகள் தயாரிக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்பள்ளி மாணவர்கள் முதல் 13ஆம் தரம் வரையிலான பாடசாலை மாணவர்கள் வரைக்கும் மற்றும் வயது வந்தவர்களுக்காகவும் இந்த வெளியீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டத்தின் கீழ், பாலியல் கல்வி தொடர்பான வெளியீடுகள் இலத்திரனியல் வெளியீடுகளாக வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சகல வயதினருக்கும் பாலியல் அறிவை முறையாக வழங்குவதன் மூலம், சமூகத்தில் உருவாகி வரும் பல நெருக்கடிகளை களைய முடியும் என்றும், இதன் மூலம் பாடசாலை மாணவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வெள்ளவத்தை துப்பாக்கிச் சூடு எவருக்கும் பாதிப்பு இல்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு அருகில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இனந்தெரியாத இரண்டு நபர்கள் மோட்டார் சைக்கிளில் அப்பகுதிக்கு வந்ததாகவும்,அவர்கள் டி 56 ரக துப்பாக்கியால் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்தது.

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மாவத்தை பகுதியிலேயே, இத்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கிச் சூட்டினால் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் மேற்படி ஹோட்டல் கட்டிடத்திற்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தெற்கு அதிவேக வீதியில் விபத்து ஊழியர்கள் இருவர் உயிரிழப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில்,இருவர் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இவ்வாகன விபத்து, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் குருந்து கஹ ஹெதெக்ம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகவும், அதிவேக நெடுஞ்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் இருவரே இதில் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து குடிநீர் விநியோகிக்கும் லொறியொன்று நேற்றிரவு அதிவேக நெடுஞ்சாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மீது மோதியது.

இதில் இரண்டு ஊழியர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். வேகக் கட்டுப்பாட்டை மீறிய லொறி, கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மீது மோதியதால், விபத்து ஏற்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## 2000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

புதிதாக 2000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ப்ரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் அரச நிர்வாக அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன.

தகுதி பெற்ற சுமார் 4000 பேரை நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். நீண்ட காலமாக கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படாததால், பல வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

பணிபுரிந்த சிலர் ஓய்வு பெற்றுள்ளமையாலும் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பராடே சட்டம்; தற்காலிகமாக இடைநிறுத்த அமைச்சரவை அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அமைச்சரவையின் அனுமதியுடன்,பராடே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் டிசம்பர் (15) வரை பராடே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்தியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ , கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோரால் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளுக்கிணங்க நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

### எதிர்க்கட்சி எம்பிக்கள் கையொப்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வரவுள்ளனர்.

பாராளுமன்றம் மற்றும் அரசியலமைப்பின் நம்பிக்கையை மீறியுள்ளதாக தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் எம்பிக்கள் பலரும் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.இதன் முதற்கட்டமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பாராளுமன்ற

06


## பிசுக்கால் ஏல விற்பனை

### கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில்

லங்கா ஒரிக்ஸ் கம்பனி பீஎல்சி
(முன்னர்: லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி லிமிடெட், என்ற பெயரில் அழைக்கப்பட்டது)
இலக்கம் 100/1-1/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
(நிறுவனத்தின் புதிய இலக்கம் PQ 70)

-மனுதாரர்-

வழக்கு இலக்கம்: HC (சிவில்) 210/2009 எம்.ஆர்
நிறைவேற்றல் இலக்கம்: 37/2019

-எதிராக-

1. ஜெப்ரி நூருல் அமீன்.
இல. 5, 2/3, கந்தேவத்த டெரன்ஸ்,
நுகேகொடை.

புதிய முகவரி
இல. 5/7, கந்தேவத்த டெரன்ஸ்,
நுகேகொடை.

2. கிறிஸ்டின் ஆன் ஜெப்ரி.
இல. 71/ஏ/22, 4ஆவது ஒழுங்கை,
லேக் கிரசன்ட்,
கவுடான வீதி, தெஹிவளை.

-பிரதிவாதிகள்-

2011ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16ஆம் திகதி இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்ட தீர்ப்பு அறிவிப்பின் பிரகாரம் அந்த 01ஆவது, 2ஆவது பிரதிவாதிகளிடம் இருந்து மனுதாரருக்கு ஒன்றிணைந்து மற்றும் / அல்லது வெவ்வேறாக அறவிடும்படி கூறி உத்தரவிடப்பட்ட ரூபா 7,474,492/- தொகை மற்றும் ரூபா 7,160,653/- தொகையை அதன் அடிப்படையில் 2009.04.03ஆம் திகதி தொடக்கம் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட திகதி வரை வருடத்திற்கு 48% வீதம் வட்டி மற்றும் அதன் பின்னர் தீர்ப்பில் முழு தொகை மீது முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை சட்டரீதியான வட்டி மற்றும் வழக்குக் கட்டணத்தை அறவிடுவதற்காகவும் குறித்த 01ஆவது மற்றும் 02ஆவது பிரதிவாதிகளால் ஒன்றாக அல்லது தனித்தனியாக மனுதாரருக்கு அந்த நீதிமன்றத்தின் அதிகாரி ஒருவரினால் நியமிக்கப்பட்ட வழக்குக் கட்டணத்தை அறவிடுவதற்காக குறித்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் நிறைவேற்றல் அதிகாரத்தின்படி மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிவாதியான ஜெப்ரி நூருல் அமீன் என்பவருக்கு சொந்தமான, இங்கு கீழுள்ள அட்டவணையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆதனத்தின் உரிமை, உரித்து மற்றும் அது சார்ந்த எல்லாமான அனைத்தும், கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தின் பாதிவாளரின் பிரதி பிசுக்கால் ஆகிய என்னால் 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 05 ஆம் திகதியன்று செய்யப்பட்ட தடைக்கு உட்பட்டது.

**2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு 01ஆவது பிரதிவாதிக்கு சொந்தமான இந்த ஆதனம் அமைந்திருக்கும் மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை பிரதேச சபை எல்லைக்குள் தெல்துவ வாத்துவ வஸ்கடு தெபெத்த தெல்துவ கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கல்பொத்தஹேன எனும் கல்பொத்தவத்த எனும் பேருவளகேவத்த என்ற காணி என்னால் பிசுக்கால் ஏலத்தில் விற்கப்படும்.**

ஆதனத்தின் அமைவிடம்

இந்தக் காணி காலி வீதி வாத்துவ நகரை தாண்டி வாடியமங்கட சந்தியின் (பண்டாரகம) ஊடாக 2.3 கி.மீ. பயணிக்கும்போது வலது பக்கம் உள்ள தெல்துவ வித்தியாலயத்தை தாண்டிய உடன் வலதுபுறமாக உள்ள வீதியில் 500 மீற்றர் பயணிக்கும்போது ஆதனம் எதிர்ப்படும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை

ஏலம் முடிவுற்ற உடன் வெற்றிகரமான கொள்வனவாளரினால் (i) வாங்கிய விலையில் நூற்றுக்கு இருபத்து ஐந்தும் (25%) (ii) சிவில் வழக்கு கட்டளைச் சட்டத்தின் 258 ஆம் இலக்க பிரிவுக்கு (அ) அறவிடல்களும் (iii) விற்பனைக்காக அனைத்து செலவுகளும் பணமாக செலுத்துதல் வேண்டும். வாங்கிய தொகையில் எஞ்சிய நூற்றுக்கு எழுபத்து ஐந்து (75%) தொகை விற்பனை திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அந்த வழக்கின் கணக்கிற்கு நீதிமன்றத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேலுள்ள அட்டவணை

மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை பிரதேச சபை எல்லைக்குள் தெல்துவ வாத்துவ வஸ்கடு தெபெத்த தெல்துவ கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கல்பொத்தஹேன எனும் கல்பொத்தவத்த எனும் பேருவளகேவத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற அளவையாளர் பீ.டபிள்யு.எஸ்.சி. விதான அவர்களால் அளவிடப்பட்ட 2006-10-25 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 2371 கொண்ட திட்டத்தின் லொட் இலக்கம் 01 ஐ கொண்ட காணித் துண்டின் எல்லைகள் **வடக்கு:** 20 அடி அகலமான வீதி 667 ஏ திட்டத்தின் லொட் 13) மற்றும் லொட் 34 (667/ஏ திட்டம்) உம், **கிழக்கு:** 667/ஏ திட்டத்தின் லொட் 34 மற்றும் லொடவே எஸ்டேட் எனும் கோப்பியவத்த (பீ.பீ. 12845) உம், **தெற்கு:** 845 திட்டத்தின் லொட் 12 மற்றும் 13 உம், **மேற்கு:** 845 திட்டத்தின் லொட் 4 மற்றும் 10 அடி அகல வீதியும், எல்லையாகக் கொண்ட, இரண்டு ரூட் பத்து புள்ளி ஏழு ஐந்து பர்ச்சர்ஸ் (அ:00 ரூ:02, பர்:10.75) அளவைக் கொண்ட பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதற்குள் அமைந்துள்ள எல்லா அனைத்துடனுமாகும். இது பாணந்துறை காணிப் பதிவு அலுவலகத்தின் தொகுதி - இணைப்பக்கம் G 203/23 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு
பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி.

பதிவாளர்/ பிரதி பிசுக்கால்
வணிக மேல் நீதிமன்றம் -கொழும்பு

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 16ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 17

## குறள் தரும் சிந்தனை



ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி

ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.

# பலஸ்தீனத்தில் பாதிப்புற்றோர் மீது இலங்கை அரசின் மனிதாபிமானம்!

காஸா மீதான யுத்தம் 140 நாட்களுக்கும் மேலாக நீடித்து வருகின்ற அதேநேரம், இற்றை வரையும் 29 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்களின் உயிர்களையும் காவு கொண்டுள்ளது. அவர்களில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களாவர். அத்தோடு 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் காயமடைந்துமுள்ளனர்.

காஸா சனத்தொகையில் 85 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் இப்போரின் விளைவாக இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 14 இலட்சம் பேருக்கும் மேற்பட்டவர்கள் காஸாவின் எகிப்து எல்லையில் அமைந்துள்ள ரபாவிலுள்ள முகாம்களிலும் கூடாரங்களிலும் தங்கியுள்ளதாக ஐ.நா. நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி ஹமாஸ் இஸ்ரேலுக்குள் நுழைந்து மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து 23 இலட்சம் பலஸ்தீன மக்களைக் கொண்ட காஸா மீது இஸ்ரேல் போரை ஆரம்பித்தது. அன்று தொடக்கம் தொடராக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த யுத்தம் நவம்பர் 24 ஆம் திகதி முதல் ஏழு நாட்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கையோடு நிறுத்தப்பட்ட போதிலும், அதன் பின்னர் யுத்தம் தொடர்ந்த வண்ணமுள்ளது. மற்றொரு யுத்த நிறுத்தத்திற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த தொடர் யுத்தம் காரணமாக காஸாவிலுள்ள பலஸ்தீனியர்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்துள்ளனர். அவர்களது இயல்பு வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் விளைவாக காஸாவில் அனைத்துத் துறைகளும் அழிந்தும் சேதமடைந்தும் காணப்படுகின்றன. அ வற்றில் சுகாதார சேவைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும் பாதிப்புக்களும் குறிப்பிடத்தக்கவையாகும். அதன் காரணத்தினால் அங்குள்ள சிறுவர்களையும் இந்நெருக்கடிகள் பெரிதும் பாதித்திருக்கின்றன.

காஸாவிலுள்ள பலஸ்தீன மக்கள் முகம்கொடுத்துவரும் இந்த அசௌரியங்களும் நெருக்கடிகளும் உலகளாவிய அவதானத்தை ஈர்த்துள்ளன. அதனால் இப்போரை உடனடியாக நிறுத்துமாறும் பணயக் கைதிகளை விடுவிக்குமாறும் காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளை தங்குதடையின்றி அனுப்பி வைக்குமாறும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் உள்ளிட்ட அனைத்து தலைவர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான சூழலில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காஸாவில் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக காஸா சிறுவர்களுக்கான நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கேற்ப அமைச்சுக்கள் அரச நிறுவனங்களுடன் இணைந்து இம்முறை இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்ச்சிக்காக செலவிடப்படவிருக்கும் நிதியை இந்நிதியத்திற்கு வழங்குமாறு ஜனாதிபதியும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதன் நிமித்தம் பொதுமக்களது பங்களிப்பும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் சுகாதார வசதிகளுக்காக இலங்கையினால் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஐக்கிய நாடுகள் விதிவிடப் பிரதிநிதி ஊடாக வழங்கி வைப்பட உள்ளது.

ரமழான் மாதம், காஸா குழந்தைகளுக்கான நிதியத்திற்கு நிதி அன்பளிப்புகளை அளிக்க விரும்பும் நன்கொடையாளர்கள் எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை வங்கியின் தப்ரோபேன் கிளையில் வைப்பிடவும் வங்கிக் கணக்கு இலக்கமொன்று ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினதும் அவர் தலைமையிலான அரசாங்கத்தினதும் இந்நடவடிக்கையை மனிதாபிமானத்தை நேசிக்கும் அனைத்துத் தரப்பினரும் வரவேற்றுள்ளனர். காஸாவில் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீன சிறுவர்களின் சுகாதார நலன்களுக்காக தனியான நிதியமொன்றை அமைக்க ஜனாதிபதி எடுத்திருக்கும் இந்நடவடிக்கையானது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பதியப்படக் கூடியதாகும். பலஸ்தீனின் எதிர்கால சந்ததியினரது நலன்களில் ஜனாதிபதி கொண்டுள்ள மனிதாபிமான அக்கறையின் வெளிப்பாடே இது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அதேநேரம் காஸாவிலுள்ள பலஸ்தீனர்களுக்காக பாடசாலையொன்றை அமைத்துக் கொடுப்பதாகவும் ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.

காஸா மீதான யுத்தம் ஆரம்பமானது முதல் யுத்த நிறுத்தத்திற்கு வலியுறுத்தி வரும் இலங்கை ஐ.நா. பொதுச்சபையில் அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்கது. பலஸ்தீன்-இஸ்ரேல் பிரச்சினைக்கு இரு நாட்டு தீர்வை வலியுறுத்தி வரும் நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது இலங்கை.

editor.tkn@lakehouse.lk

# சமூக ஊடகத்தை துஷ்பிரயோகம் செய்பவர்களே நிகழ்நிலைகாப்பு சட்டத்தை பூதாகரமாக்கியுள்ளனர்

## ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய



சமூக ஊடகங்களை தமது குறுகிய சுயஇலாபங்களுக்காக தவறாகப் பயன்படுத்துபவர்கள் திட்டமிட்டு இணையச் சட்டத்தை பூதாகரமானதாக உருவாக்கியுள்ளனர் என ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன்ரத்னபிரிய தெரிவித்தார்.

இணையக் கணக்குகளின் பாதுகாப்புச் சட்டம் தொடர்பாக சமூக ஊடக ஆர்வலர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கும் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தொழிற்சங்க தொடர்பாடல் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு கொழும்பு கோட்டையில் உள்ள நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "இன்று, இந்த நாட்டிற்கான மிக முக்கியமான சட்டம் பற்றிய விவாதத்தையும், கலந்துரையாடலையும் நாங்கள் ஆரம்பிக்கிறோம். இந்த 'ஒன்லைன்' காப்பு சட்டம் பற்றி ஒரு பெரிய தவறான கருத்தை உருவாக்கியுள்ளனர். இந்தச் சட்டம் மிகவும் மதிப்புமிக்க சட்டம். இது நாட்டின் அனைவருக்கும் மதிப்புமிக்க ஒன்று. நாடு, ஒழுக்கவிழுமியங்கள், சமூகம் உட்பட அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ஊடகங்களை தவறாகப் பயன்படுத்தி, அதில் குறுகிய இலாபம் ஈட்டியவர்கள் இந்தச் சட்டம் பற்றி தவறாகப் பிரசாரம் செய்தார்கள். இது மிகவும் மோசமான செயலாகும்.

இந்தச் சட்டம் குறித்து நாங்கள் வெளிப்படையாக விவாதித்தோம். அப்படிச் செய்யும்போதுதான் இதன் மதிப்பு புரிகிறது. இன்று, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி யாரையும் அவதூறாகப் பேச முடியாது. இந்தச் சட்டம் இம்மாதம் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது. நாங்கள் இந்தச் சட்டத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் சுட்டிக்காட்ட வேண்டும் என்று கூறுகிறோம்" என்றார். இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பிரதி பொலிஸ் மாஅதிபர் (சட்டம், மாவட்டம்) சட்டத்தரணி ருவன் குணசேகர உரையாற்றுகையில், "நிகழ்நிலை காப்புச் சட்டம் சமூகத்தில் பரவலான விவாதத்தை ஏற்படுத்தவில்லை. இன்று நடைபெற்ற மாநாட்டின் மூலம் அதை உணர்ந்தோம். சமூக ஊடக வலைப்பின்னல்களை தவறாகப் பயன்படுத்துவதால் சமூகத்தில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளக் கூடிய எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதனால் சமுதாயம் பலம் பெற்றுள்ளது.இந்தச் சட்டத்தின் பிரிவு 10 முதல் பிரிவு 22 வரை குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது சமுதாய முன்னேற்றத்திற்கு பெரும் பலமாகும்" என்று குறிப்பிட்டார்.

டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஆலோசகர், இலங்கை கணினி அவசர பதில் மன்றத்தின் முன்னாள் பணிப்பாளர், மூத்த இணையதள தேர்வுமுறை பொறியியலாளர் புலஸ்தி வன்னியாராச்சி பேசுகையில், "கம்ப்யூட்டர்கள் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியான விடயங்களால் ஆண்டுக்கு 10,000 முதல் 12,000 புகார்கள் வந்ததாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2023 ஆம் ஆண்டில், எங்களுக்கு 20,000 இற்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு நடந்த அநீதிகள். இவற்றை எதிர்த்துப் போராட சட்டத்தை அமுல்படுத்தியுள்ளோம்" என்றார்.

மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சமூக வலைதள ஆர்வலர்கள் கேட்ட கேள்விகளுக்கும் நிபுணர்கள் குழு பதில் அளித்தது.

**ஜயசிறி முனசிங்க, ஆரியரத்ன கனேகொட...**
*தமிழில்:* வீ.ஆர்.வயலட்

# நான்கு அரச இலக்கிய விருதுகளை ஒரே வருடத்தில் வென்றெடுத்த எழுத்தாளர் சுமைய்யா ஜெஸ்மி மூஸா

இலக்கிய ஈடுபாடென்பது கலைத்துவமான சமூக நோக்கோடு தொடர்புடையது. அதில் முழுநேர ஈடுபாட்டோடு பயணிப்போர் பலர். திருப்தி நோக்கோடு பயணிப்போர் சிலர். இலக்கிய ஆற்றலின் வளர்ச்சியும் பங்குபற்றுதலும் தொடர்ச்சியான நகர்வும் அதற்கான தூண்டுதல்களிலேயே தங்கியுள்ளன. துறைசார்ந்தவர்களை ஊக்குவிக்க இலங்கை அரசு காலாகாலமாக மேற்கொண்டுவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியனவாகும்.

துறைசார்ந்தவர்களுக்கான போட்டிகளை நடத்துவதும் அவற்றைத் தெரிவுக்குள்ளாக்கி பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வளங்கி கௌரவமளிப்பதும் அங்கீகார அடையாளப்படுத்தலுடன் இலக்கியவாதிகளின் ஈடுபாட்டை அதிகரிக்க வைக்கும் வழியென்றே குறிப்பிடலாம்.



அவ்வகையில் இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. அதிலும் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் திட்டங்கள் பாராட்டுதலுக்குரியன. இதன் மூலம் பல இலைமறை காய்கள் கனிந்து மணம் பரப்புகின்றன.

கல்முனை பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும் மருதமுனை சுமைய்யா ஜெஸ்மி மூஸா 2023 ஆம் ஆண்டில் நான்கு அரச விருதுகளை தனதாக்கிக் கொண்டமை அடையாளப் படுத்தக் கூடிய விடயமாகும்.

பாடசாலைக் காலம் முதல் தமிழ்,ஆங்கில ஆக்க இலக்கிய செயற்பாடுகளில் ஆர்வம் கொண்ட சுமைய்யா தனிநபர் கௌரவ நிகழ்வுகளுக்காக பிரதேச செயலக மட்டத்திலும் பொதுவெளிகளிலும் பாராட்டுக்குரிய கவிதைகளை எழுதி வருகிறார். மேலும் சிறுகதை, கட்டுரை ஆக்கங்களில் ஈடுபாடு கொண்ட இவர், 2023 ஆம் ஆண்டு நான்கு அரச இலக்கிய விருதுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

2023 கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிரதேச இலக்கியப்போட்டி (சிறுகதை_ முதலிடம்),

2023 கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மீலாதுன் நபி விழா (நிகழ்நிலைக் கட்டுரைப் போட்டி_ இரண்டாமிடம்), 2023 கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட இலக்கியப்போட்டி (சிறுகதை_ மூன்றாமிடம்), 2023 கிழக்கு மாகாண அரச ஊழியர்களுக்கான படைப்பாக்கப் போட்டி (சிறுகதை_ இரண்டாமிடம்)



இவையே 2023 இல் இவர் பெற்றுக் கொண்ட நான்கு அரச கௌரவங்களுமாகும்.

அரச நிறுவனம்சார் இலக்கிய ஈடுபாடுடைய ஒருவர் ஓர் ஆண்டில் அதிக தடவை பெற்றுக் கொண்ட கௌரவமாக இது கொள்ளப்படுகிறது.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவியான இவர், நாடறிந்த இலக்கிய விமர்சகர், ஊடகவியலாளர் ஜெஸ்மி எம்.மூஸாவின் துணைவியாராவார்.

**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

# டொக்டர் விக்கினேஸ்வராவின் ஈராண்டு நினைவாக 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' நூல் வெளியீடு

யாழ் சுன்னாகம் புகழ் டொக்டர் ப. விக்கினேஸ்வரா மக்களுக்கு அர்ப் பணிப்புடன் பணியாற்றிய ஒரு மருத்துவர் ஆவார். இடர்காலத்தில் அவர் நல்கிய மருத்துவப் பணிகளை யாழ்ப்பாணம் மக்கள் என்றும் நினைவில் கொள்வர். சுன்னாகத்தில் நாற்பது ஆண்டுகள் மருத்துவப் பணியாற்றிய வைத்தியர் ப. விக்கினேஸ்வரா அமரராகி (22/02/2022) இரு வருடமாகிறது. ஆனால் அவரிடம் சிகிச்சைபெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவுகூருகின்றனர்.



'ஜீவநதி' பதிப்பகத்தின் 332 ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவருமான சுன்னாகம் டொக்டர் விக்கினேஸ்வரா அவர்களின் ஈராண்டு நினைவாக, 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' வெளிவருகின்றது.

ஒவ்வொரு வருடமும் டொக்டர் ப.விக்கினேஸ்வ ரா நினைவாக ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

2022 இல் மறைந்த அவரது 31ஆம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' எனும் நூல் வெளியானது.

இதன் பின்னர் கடந்த வருடம் 2023 இல் டொக்டர் விக்கினேஸ்வராவின் முதலாவ து ஆண்டு நினைவாக இலங்கையின் பிரபல எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய 'பள்ளிக் கூடங்கள் கட்டடக்கூடுகள் அல்ல' எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

இவ்வருடம் டொக்டர் விக்கினேஸ்வரா ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணி அவர்களால் எழுதப்பட்ட 35 படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு நூலான 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' எனும் நூல் தற்போது வெளிவருகின்றது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**
அவுஸ்திரேலியா

# விண்வெளிக்கு அடுத்த வருடம் செல்லவுள்ள நான்கு இந்தியர்கள்

## பிரதமர் மோடியினால் நேற்று அறிமுகம்

இந்தியா முதன் முறையாக தனது முழுமையான முயற்சியில் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பவிருக்கிறது. 'ககன்யான்' என்ற திட்டத்தின் மூலம் நான்கு விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட உள்ளனர்.

இந்நிலையில் நேற்று கேரளாவில் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளிக்கு செல்லும் வீரர்களை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் சர்வதேச விண்வெளி நிலையம் கலைந்து போக இருக்கிறது. ரஷ்யாவும், சீனாவும் தங்களுக்கென தனியான விண்வெளி நிலையத்தை உருவாக்க இருக்கின்றன. விண்வெளித் துறையை பொறுத்தவரை ரஷ்யா இந்தியாவுக்கு நெருங்கிய நண்பன் என்பதால் இந்த விண்வெளி நிலையத்தில் இந்திய வீரர்களை தங்க வைக்க இந்தியாவினால் கோரிக்கை முன்வைக்க முடியும். ஆனால் அதற்கு இந்தியாவுக்கு முதலில் சில அனுபவங்கள் தேவைப்படுகின்றன. அதில் ஒன்றுதான் சொந்தமாக மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திறன்.



இந்தியா சார்பில் ராகேஷ் சர்மா கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் விண்வெளியில் பறந்தார். அவரை பறக்க வைத்தது சோவியத் ரஷ்யா. எனவே இந்தியா இந்த முறை எந்தவொரு நாட்டினதும் உதவியின்றி தனது வீரர்களை விண்ணில் பறக்க வைக்க முடிவெடுத்திருக்கிறது. இதற்காக உருவாக்கப்பட்ட ககன்யான் திட்டம் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும். ஏற்கெனவே சந்திரயான் 3, ஆதித்யா எல்1 உள்ளிட்ட மிஷன்கள் வெற்றியடைந்துள்ள நிலையில், அதே உற்சாகத்தில் ககன்யான் திட்டத்திற்கு இஸ்ரோ தயாராகி வருகிறது. இந்நிலையில் நேற்று கேரளாவுக்கு வருகை தந்திருந்த பிரதமர் நரேந்திர மோடி, ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளிக்கு செல்லும் வீரர்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இவர்களை 'பாரத் மாதா கி ஜே' எனக்கூறி மோடி அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க ககன்யான் விண்வெளிப் பயணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு விண்வெளி வீரர்களை பிரதமர் நரேந்திர மோடி திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியிலேயே அறிமுகப்படுத்தினார். விங் கமாண்டர் சுபான்ஷு சுக்லா, குரூப் கப்டன் பிரசாந்த் நாயர், குரூப் கப்டன் அங்கத் பிரதாப், குரூப் கப்டன் அஜித் கிருஷ்ணன் ஆகிய இந்த நால்வரும் சிறந்த விமானப்படை அதிகாரிகளாவர்.

ககன்யான் இந்தியாவின் கனவு திட்டங்களில் ஒன்றாகும். சர்வதேச அளவில் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. சந்திரனின் தென்துருவத்தில் வெற்றிகரமாக கடந்த ஆண்டு ரோவரை தரையிறக்கி மிகப்பெரிய சாதனையை இந்தியா படைத்தது.

2023ம் ஆண்டின்

# நாலாம் காலாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பாதையில் கொமர்ஷல் வங்கி




கொமர்ஷல் வங்கிக் குழுமம் 2023ம் ஆண்டின் நாலாம் காலாண்டில் 56.816 பில்லியன்களை மாதாந்தம் சராசரியாக 18.939 பில்லியன்கள் என்ற ரீதியில் கடனாகக் கொடுத்துள்ளது. இதன் மூலம் வருட இறுதியில் வங்கியின் கடன் புத்தகம் 1.296 ட்ரில்லியன்களாக பதிவாகி உள்ளது. பொருளாதார சீராக்கத்துக்கு உதவும் வகையில் கடன் வழங்கும் போக்கில் உறுதியானதோர் நிலை இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2023 டிசம்பர் 31ல் முடிவடைந்த மூன்று மாத காலத்தில் வைப்பும் அபரிமிதமாக அதிகரித்து 109.408 பில்லியன்களாக உள்ளது. இதன் மாதாந்த சராசரி 36.469 பில்லியன்களாகும். இது வங்கியின் உறுதியான வைப்பு தளத்தை வெளிப்படுத்துவதோடு கொந்தளிப்பு மிக்க நுண் பொருளாதார நிலைகளிலும் நிதி இடை நிலையில் கவனம் செலுத்தும் வகையில் இது அமைந்துள்ளது. வைப்பு வளர்ச்சி வருடத்துக்கு வருடம் 8.6 வீதமாக வளர்ச்சி கண்டு மீளாய்வுக்கு உட்பட்ட காலப் பகுதியில் 2.148 ட்ரில்லியன்களாக உள்ளது.

இந்தக் குழுமம் இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக வங்கியையும், அதன் இணை மற்றும் கிளை நிறுவனங்களையும் உள்ளடக்கியது. இலங்கையின் பங்கு பரிவர்த்தனையில் அது தாக்கல் செய்துள்ள அறிக்கையின் படி குழுமத்தின் மொத்த சொத்துக்கள் 156 பில்லியன்களால் அல்லது வருடத்துக்கு வருடம் 6.24 வீதத்தால் அதிகரித்து மீளாய்வுக்கு உட்பட்ட காலப் பகுதியில் 130 பில்லியன்களாக அல்லது 5.15 வீதமாக காணப்பட்டு 2023 டிசம்பர் 31ல் 2.656 ட்ரில்லியன்களாக உள்ளது.

ஸ்மார்ட்போன் தொழில்நுட்பத்தின் எதிர்காலத்தை அறிமுகப்படுத்தும்

# சிங்கர் ஸ்ரீ லங்காவின் HONOR X9B




சிங்கர் ஸ்ரீ லங்கா பிஎல்சி, புத்தாக்கம் மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் வீட்டு உபயோகப் பொருட்கள் துறையில் முன்னணியில் இருப்பதோடு, சமீபத்தில் HONOR இன் புதிய ஸ்மார்ட்போன் மாதிரிகளை பிரம்மாண்டமாக வெளியிட்டு குறிப்பிடத்தக்கதோர் தடம் பதித்தது.

கொழும்பில் உள்ள ஷங்ரிலா ஹோட்டலில், HONOR X தொடரின் தொழில்நுட்ப வல்லமை மற்றும் புதுமையான வடிவமைப்பை வெளிப்படுத்தியதோடு, SINGER மற்றும் HONOR X இடையேயான செழிப்பான கூட்டுறவினை சிறப்புடன் வெளிகாட்டுகிறது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் HONOR அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, இலங்கை ஸ்மார்ட்போன் உரிமையாளர்கள் மத்தியில் HONOR பெற்ற விரைவான வெற்றியையும் இந்நிகழ்வில் கொண்டாடியது சிறப்பம்சமாகும்.

" HONOR உடனான எமது கூட்டுறவானது அனைவரும் அணுகக்கூடிய, தொழில்நுட்பத்தில் சிறந்து வழங்குனராக அர்ப்பணிப்புடன் இருப்பதற்கானதோர் பயணமாகும். X7b மற்றும் X8b உடன் HONOR X9B" இன் அறிமுகம், புதுமை மற்றும் தரத்திற்கான எங்கள் ஆர்வத்தினை பிரதிபலிக்கிறது. இலங்கையின் நுகர்வோர் ஒப்பிடமுடியாத தரம் மற்றும் மதிப்பை அனுபவிக்கும் வகையில் இந்த மாதிரிகள் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன" என்று SINGER குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் விஜேவர்தன, இப்புதிய சாதனங்களின் அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்தார். இந்த ஆண்டின்HONOR இன் அறிமுக நிகழ்வு HONOR X9B மையமாகக் கொண்டதோடு, இது மிகச்சிறந்த ULTRABOUNCE ANTI DROP DISPLAY தொழில்நுட்பத்தை கொண்டுள்ளது. இந்த அம்சம், வாடிக்கையாளர்களுக்கு அளித்த வாக்குறுதியின் அடையாளமாக, நீடித்துழைப்புடன் புதுமையின் அர்ப்பணிப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

# இலங்கையின் தொழில்நுட்பத்துறையில் ஆரோக்கியத்தை புரட்சிகரமானதாக்கும் FIT HIT 2024



SLASSCOM (Sri Lanka Association for Software and Services Companies) இனால் FIT HIT 2024, எனும் இரண்டு மாத ஆரோக்கிய நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆரோக்கியமான மற்றும் சமபலமான பணியாளர்களை கொண்டிருப்பதை இலக்காகக் கொண்டு, உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை இலங்கையின் IT/BPM நிபுணர்கள் மத்தியில் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

தொழில்நுட்பத்துறையில் ஆரோக்கியத்துக்கான தேவை The FIT HIT 2024 என்பது, தகவல் தொழில்நுட்பத்தைச் சேர்ந்த பல நிபுணர்கள் பெருமளவான நேரத்தை கணினியின் முன்னால் செலவிடுவதால் சுகாதார சார் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதை கவனத்தில் கொண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இருக்கையில் அமர்ந்து, நீண்ட நேரம் உடல் செயற்பாடுகள் குன்றியிருக்கும் நிலையை கவனத்தில் கொண்டு, SLASSCOM இனால் உரிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. பணியாளர்கள் மத்தியில் ஆரோக்கியமான சுகாதார பழக்கங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டி, அவர்களை ஈடுபடச் செய்வதை இலக்காகக் கொண்டு அமைந்துள்ளதுடன், தொழிற்துறையினுள்ளேயும், வெளியிலிருந்தும் திரண்ட ஆதரவைப் பெற்றுக் கொள்வதையும் எதிர்பார்க்கின்றது.

நிகழ்ச்சியின் வெற்றிகரமான செயற்பாட்டில், பிளாட்டினம் அனுசரணையாளர் எனும் வகையில் யூனியன் அஷ்யூரன்ஸ் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. இலங்கையர்களின் நலனை மேம்படுத்துவதில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பு என்பது, தொழில்நுட்ப துறையைச் சேர்ந்தவர்கள் மத்தியில் ஆரோக்கியமான பழக்கங்களை மேம்படுத்தும் SLASSCOM இன் நோக்கத்துடன் பொருந்துவதாக அமைந்துள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக குறிப்பிடுகையில், "நபர் ஒருவருக்கு தமது உடல் மற்றும் உள நலனை மேம்படுத்துவதனூடாக, சமநிலையான வாழ்க்கையை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதன் காரணமாக, பங்கேற்கும் நபர்களுக்கு தமது வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் FIT HIT 2024 இல் எமது ஆதரவை வழங்குவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் " என்றார்.

தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# ஹரின் டி.எஸ். விஜயரத்னவை பணிப்பாளர் சபைக்கு நியமித்துள்ள Ceylon Tobacco நிறுவனம்



Ceylon Tobacco Company PLC (CTC) பெப்ரவரி 01, 2024 புகழ்பெற்ற கூட்டாண்மைத் தலைவர் ஹரின் டி.எஸ். விஜயரத்னவை அதன் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக நியமித்துள்ளது. இந்த நியமனம் மூலம், CTC பணிப்பாளர்கள் சபையில் தலைவர் சுரேஷ் ஷா, முகாமைத்துவப் பணிப்பாளர் மோனிஷா ஆபிரகாம், குஷான் டி அல்விஸ், கேரி டாரன்ட், ருமனா ரஹ்மான், ஸ்டூவர்ட் கிட், தௌஹிட் அக்பர் மற்றும் ஹரின் டி எஸ் விஜயரத்ன ஆகியோர் அடங்குவர்.

விஜேயரத்ன இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இணை அங்கத்தவர் மற்றும் UKஇன் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராக உள்ளார். Bahrain Investcorp வங்கி, Grindlays Bahrain வங்கி, Ernst & Young Bahrain மற்றும் Ernst & Young Sri Lanka ஆகிய நிறுவனங்களில் பெறப்பட்ட வெளிப்பாட்டின் மூலம் பொது நிர்வாகம், நிதி முகாமைத்துவம் மற்றும் தணிக்கை ஆகியவற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளவர்.

அவர் DFCC வங்கி மற்றும் Trans Asia Hotels PLC இன் பணிப்பாளராகவும் இந்த நிறுவனங்களின் தணிக்கைக் குழுக்களின் தலைவராகவும் உள்ளார்.

MAS ஹோல்டிங்ஸின் தணிக்கைக் குழுவின் தலைவராகவும் அவர் செயல்படுகிறார்.

# Sri Lanka Super Series 2024 தொடருக்கு தயாராகும் SLARDAR மற்றும் AMRC




Sri Lanka Association of Racing Drivers & Riders (SLARDAR) ஆனது, Asian Motor Racing Club (AMRC) உடன் இணைந்து, அனைவரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்துள்ள 'Sri Lanka Super Series 2024' தொடரை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. Sri Lanka Super Series 2024 தொடரை அறிவிக்கும் நிகழ்வு சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள DIMO 800 இல் இடம்பெற்றது.

நிகழ்வின் முதன்மை அனுசரணையாளரான Nippon Paints இன் தலைமையில், Maxxis Tyres, Prima Kottumee, Ozone Water, Sri Lanka Insurance, ESDEE Battery உள்ளிட்ட மதிப்பிற்குரிய பங்காளிகளுடன் இணைந்து SLARDAR சங்மானது, அதிர வைக்கும் Sri Lanka Super Series 2024 தொடருக்கு தயாராகி வருகிறது. கடந்த வருடம் Sri Lanka Super Series 2023 இல், MX Motocross மோட்டார் சைக்கிள் பந்தய வீரர் லஹிரு ஜீவந்த மற்றும் SLGT வீரர் உஷான் பெரேரா ஆகியோர் முறையே சம்பியன் ரைடர் பட்டத்தையும் வருடத்தின் சிறந்த சாரதி பட்டத்தையும் வென்றனர். அதன் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து தற்போது அதன் 2024 தொடர் இடம்பெறவுள்ளது.

SLARDAR 2023 ஆம் தொடரில், கிரியுல்ல, நல்லவில் அமைந்துள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய, Mahameruwa Motorsports Arena அரங்கை SLARDAR அறிமுகப்படுத்தியிருந்தமையானது, குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக அமைந்திருந்தது. இந்த சிறப்பு மிக்க போட்டி அரங்கானது, கார்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகிய இரண்டிற்குமான, உலகத் தரம் வாய்ந்த பந்தயப் பாதைகளைக் கொண்டுள்ளன. அத்துடன், உணவகப் பகுதி, நீச்சல் தடாகம், பயிற்சி அறைகள், தங்குமிட வசதிகள், ATV Track, 4x4 Challenge Track உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் இதில் உள்ளடங்குகின்றமை விசேட அம்சமாகும்.

# உலகின் தலைசிறந்த சோலார் பிராண்டுகள் அபான்ஸிடமிருந்து



நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் மின் பட்டியல் விலை அதிகரிப்பு தொல்லைகளில் இருந்து விடுபடுவதற்கும், அதன் தீர்வாகவும் சுற்றுச்சூழல் நட்புறமிக்க சோலார் அமைப்புகளை மிகவும் குறைந்த விலைகளில் அபான்ஸ் வழங்கி வருகிறது.

விசேட விற்பனை நாமங்களுக்கு சொந்தமான உலகின் முன்னணி தரத்தில் உயர்ந்த சோலார் அமைப்புகளை அபான்ஸ் இடமிருந்து உங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றின் தேவைகளுக்கு பயன்படுத்தும் சோலர் அமைப்புகளை உங்கள் தேவைகளுக்கு ஏற்ப யுடியளெ இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் அடிப்படையில், அபான்ஸ் வழங்கும் ளுப்பெடந Phயளந 5மறு சோலார் அமைப்பு ஒன்றை ரூ. 999,000 இலிருந்து விற்பனை சந்தையின் மிகவும் குறைந்த விலையில் உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த சிறப்பு சலுகைகள் 2024 பெப்ரவரி 29ஆம் திகதிவரை செல்லுபடியாகும்.

அபான்ஸ் இடமிருந்து நம்பிக்கையோடு சோலார் அமைப்புகளை கொள்வனவு செய்யும் உங்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதன் அடிப்படையில் முதல் 3 வருடங்களில் 1 சேவை இலவசமாக வழங்கப்படும். அத்தோடு இதன் பேனல் செயற்பாடுகளுக்கு 25 வருடகால உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

# Emerald 4ஆவது காட்சியறையை சாய்ந்தமருதில் திறக்கிறது



இலங்கையின் முன்னணி ஆடவருக்கான ஆடை வர்த்தகநாமமான Emerald, தனது புத்தம் புதிய காட்சியறையை அண்மையில் சாய்ந்தமருதில் திறந்து வைத்துள்ளதன் மூலம், அதிகளவான வாடிக்கையாளர்களை சென்றடைவதற்கான தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளது. இலக்கம் 52, பிரதான வீதியில் அமைந்துள்ள இக்காட்சியறையானது இவ்வரத்தகநாமத்தின் நான்காவது காட்சியறையாகும் என்பதோடு, ஒப்பிட முடியாத பேஷன் அனுபவத்தை நாடு முழுவதும் வழங்குவதற்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது சுட்டிக் காட்டுகிறது.

அதன் புகழ்பெற்ற ஆடவர்களுக்கான ஆடை வகைகளுக்கு அப்பால், சாய்ந்தமருது காட்சியறையானது பெண்களுக்கான ஆடைகள் (Daywear) மற்றும் வசீகரிக்கும் ஆடம்பர சல்வார்களின் (Luxury Shalwars) வரிசையை கொண்டுள்ளது. இந்த அற்புதமான அறிமுகத்தின் மூலம், ஸ்டைலான மற்றும் அதிநவீன பெண்களின் ஆடைகளுக்கான வளர்ந்து வரும் கேள்வியை அது பூர்த்தி செய்கிறது. Emerald வர்த்தகநாமம் முழுக் குடும்பத்திற்கும் ஏற்ற ஒரே இடமாக மாறுவதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

இக்காட்சியறையைத் திறந்து வைத்து கருத்துத் தெரிவித்த, Emerald இன்டர்நேஷனல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எப்.எம். இக்ராம், 'Emerald வர்த்தகநாமத்தின் அனுபவத்தை சாய்ந்தமருதுக்குக் கொண்டுவருவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த விரிவாக்கமானது, அதிகளவான வாடிக்கையாளர்களுக்கு மாறுபட்ட மற்றும் உயர்தர பேஷனை வழங்குவதற்கான எமது உறுதிப்பாட்டை காட்டுகிறது. பெண்களுக்கான Daywear மற்றும் ஆடம்பர ஷல்வார்களின் (Luxury Shalwars) அறிமுகத்தின் மூலம், எமது வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்து, உண்மையான ஷொப்பிங் அனுபவத்தை உருவாக்குகிறோம்." என்றார்.

# உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்த கலந்துரையாடல்களை நடாத்தும் USSEC இன் SUSTAINASUMMIT

U.S. Soybean Export Council (USSEC) இன் வருடாந்த Sustainasummit 2024 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, விவசாய வணிகத்துறை தலைவர்கள் மற்றும் தொழில்துறை தொலைநோக்குப் பார்வையாளர்கள் துபாயில் அண்மையில் ஒன்றுகூடினர்.

ஸ்மார்ட் பாதுகாப்பு முயற்சிகள், நிலைபேறான விவசாய நடைமுறைகள், உணவுப் பயிர்ச் செய்கை, உணவு உற்பத்தி, உணவு விநியோகம், உணவு நுகர்வு ஆகியவற்றில் முன்னேற்றமடைவது தொடர்பில் இங்கு பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. உலக வங்கியின் அறிக்கையின் படி, தெற்காசியா ஒரு "புதிய காலநிலை இயல்பு நிலை" ஐ அனுபவித்து வருகிறது.

இது வெப்ப அலைகள், சூறாவளி, வரட்சி, வெள்ளம் போன்ற எதிர்பாராத வானிலை நிலைமைகள் என குறிப்பிடப்படுகிறது. அதிகரித்து வரும் சனத்தொகை மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலையுடன், தெற்காசியா பிராந்தியத்தின் உணவு மற்றும் போசணை தொடர்பான பாதுகாப்பில், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை தடுப்பது தொடர்பில் அதன் முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டியுள்ளது.

USSEC இன் South Asia and SubSaharan Africa (SAASSA) பிராந்திய பணிப்பாளர் Kevin Roepke, காலநிலை நெகிழ்வுத் தன்மை கொண்ட உணவு முறைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவர் இங்கு தெரிவிக்கையில், "USSEC இன் Sustainasummit மன்றம் மூலம், ஒரு வலுவான உலகளாவிய உணவு முறையை உருவாக்குவதற்காக, US Soy போன்ற நிலைபேறான மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து உணவு மற்றும் விவசாய வணிக நிறுவனங்களிடையே மூலோபாய ரீதியான உரையாடல்களை ஏற்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

US Soy, அதன் உயர் போசணைப் பொதி மற்றும் நம்பகமான விநியோகம் மூலம், தெற்காசியாவின் அதிகரித்து வரும் புரதத் தேவையை நிலைபேறான வகையில் பூர்த்தி செய்யும் வகையில் தனித்துவமான நிலையை அது பெற்றுள்ளது." என்றார்.



# "பொழுப்பு தேடி" பாடலை வெளியிட்ட கலைஞர்களுக்கு ஆடற்கலைப் போட்டியில் "நம்ம தமிழ் பசங்க" விருது






அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் ஆடற்கலைப் போட்டி எதிர்வரும் 2024.03.02ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு 07, விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் உள்ள குளிரூட்டப்பட்ட கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இவ் ஒன்றியம் நாடு முழுவதிலும் உள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே மாவட்ட ரீதியில் நடத்திய ஆடற்கலைப் போட்டியில் வெற்றி பெற்ற அறநெறிப் பாடசாலைகள் இந்த இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. நாடு முழுவதிலும் உள்ள 13 அறநெறிப் பாடசாலைப் பாடசாலைகள் இந்த இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

இந்த இறுதிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் அறநெறிப் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெறும் அறநெறிப் பாடசாலைக்கு ஐம்பது ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும். மூன்றாம் இடத்தைப் பெறும் அறநெறிப் பாடசாலைக்கு முப்பது ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட போட்டியிலிருந்து இறுதிப் போட்டி வரை பங்குபற்றிய அனைத்து அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளும் நடனம் கற்பித்த அறநெறிப் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த ஆடற்கலைப் போட்டியில், "நம்ம தமிழ் பசங்க" என்ற விருது ஒன்றும் வழங்கப்படவிருக்கிறது. மலையகம் 200ல் மலையகத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் சிலர் இணைந்து "மலையகத்தின் 200" வருட கால வரலாற்றை மையமாக வைத்து பாடலொன்றை இயற்றி, ஒலி, ஒளிப்பதிவு செய்து வெளியிட்டுள்ளனர். இந்திய திரைப்படப் பாடலுக்கு நிகராக தயாரிக்கப்பட்டுள்ள இப்பாடல் வைரலாகி வருகிறது. இதில் புதிய நடிகர்கள் பலரும் நடித்துள்ளனர். "பொழப்பு தேடி" என்ற தலைப்பில் இந்தப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களது இந்த முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் இவர்கள் அனைவரையும் மேடைக்கு அழைத்து "நம்ம தமிழ் ப சங்க" என்ற விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீர்வுக்காக நீதிமன்றில் கையேந்தும்...

அரசாங்கத்திடமிருந்து தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென நாங்கள் நம்பவில்லை. இதனால், சர்வதேசத்திடமே நீதி கோரி நிற்கிறோம். இந்நிலையில், தீர்வுக்காக நீதிமன்றிடம் கையேந்தும் நிலையை இலங்கை தமிழரசுக் கட்சி ஏற்படுத்தியுள்ளது. ஒரு தீர்வை முன்னோக்கி நகர்கின்றபோது பல தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இவைகளைத் தாண்ட வேண்டிய சூழ்நிலையில் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். தமிழர்கள் உறுதியாக இருந்து தான்,எதையாவது சாதிக்க வேண்டும்.இதற்காகவே தான், தமிழ் தேசியத்தை பலப்படுத்த பலர் உழைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## அழுத்தங்கள் அதிகரித்தால் பதவியை...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார். இதுபற்றித் தெரிவித்த அமைச்சர்:

இந்திய தூதுவரைச் சந்தித்து தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய சட்டவிரோத கடல் நடவடிக்கைகள் தொடர்பில் எடுத்துக் கூறினேன்.

அயலக மீனவர்களின் ஊடுருவலால்,எமது கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவருடன் கலந்துரையாடினேன்.

கடல் வளங்கள் சுரண்டப்படுவதால், கடற்றொழிலாள ர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது. இவ்வாறான அத்துமீறல்கள் நிறுத்தப்படுவதன் அவசியமும் அச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது. நாட்டின் எல்லைக்குள் நுழைந்து சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டபோது கைதான தமிழக மீனவர்கள் சட்டரீதியாக தண்டிக்கப்பட்டமை தொடர்பில் தமிழகத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போராட்டம் செய்வது அவர்களது உரிமை. அவர்களது கோரிக்கையை சட்டரீதியாக நோக்க வேண்டும்.2018 இல் இது தொடர்பான சட்டம் கொண்டுவரப்பட்டது. அதில் ஒரு தடவை எல்லை மீறியிருந்தால் எச்சரிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுவர் என்றும், மீண்டும் எல்லை தாண்டியிருந்தால் சட்டரீதியான தண்டனை வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கேற்ப தற்போது ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் எல்லைதாண்டி நுழைந்தவர்கள் சட்டரீதியாக தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இதில் படகு ஓட்டி உரிமையாளர்கள், தண்டிக்கப்பட்டுள்ளனர்.

என்னைப் பொறுத்தளவில் எமது நாடு, எமது கடல், எமது மக்கள் அதற்கே எனது முன்னுரிமை. அதுவே நியாயம் என்றும் கருதுகிறேன். இதற்காக எனது அமைச்சு பதவியை துறந்து எமது கடற்றொழிலாளர்களுடன் இணைந்து போராடவும் தயார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் யோசனைக்கு...

ரமழானுக்கான இஃப்தார் நிகழ்வுகளை கைவிட்டு அந்த பணத்தை மேற்படி நிதியத்துக்கு பங்களிப்பு செய்யுமாறு ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விசேட அறித்தல் வெளியிட்டுள்ளதுடன், அந்த நிதியத்துக்கு மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு சுகாதார செயற்பாடுகளுக்காக ஒரு மில்லியன் அமெரிக்கன் டொலர் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி செயலகம், மேற்படி நிதியத்துக்கு பங்களிப்பு செய்ய விரும்பும், நன்கொடையாளர்கள்ஏப்ரல்(11)முன்பதாகபெற்றுத்தருமாறு மேற்படி செயலகம் தெரிவித்துள்ளது.

அதற்காக கொழும்பு தெப்ரபேன் இலங்கை வங்கிக் கிளையில் 7040016 என்ற கணக்கில் பணத்தை வைப்பிலிட முடியும். இதற்கான ரசீதை 0779730396 என்ற இலக்கத்திற்கு வட்ஸ்அப் செய்யுமாறும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## இஸ்ரேலில் தொழில் தருவதாக...

பணிபுரிவதற்குச் செல்லவுள்ளனர். இவர்களுக்கு விமான பயணசீட்டுக்களை வழங்கும் வைக்கும் வைபவம் (26) தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்ரேலில் விவசாய தொழில் துறையில் 642 பேருக்கு தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

இவ்வருடம் மாத்திரம் வீட்டுத் தாதியர்களாக 1102 பேருக்கு தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளது.

தொழிலுக்காக இஸ்ரேல் செல்பவர்களை தடுக்க ஒரு மாஃபியா குழு செயற்பட்டு வந்தது. அக்குழு தங்கள் இலக்குகளை அடைய அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை கொச்சைப்படுத்தியது.

வெளிநாட்டு தொழிலுக்காக செல்வோர் சகலரும் எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதர்களைப் போன்றவர்களாவர்.எனவே,தொழிலுக்குச் செல்லும் சகலரும் தொழிலை முறையாகச் செய்து, இன்னும் பல இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும் வகையில் பணியாற்றுமாறு கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் சட்டங்களுக்கும் இஸ்ரேல் சட்டங்களுக்கும் எதிராக அங்கு தங்கியுள்ள எவருக்கும் வேலை வழங்க வேண்டாம் என இஸ்ரேல் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## சிறு, நடுத்தர தொழில் முயற்சிகளை...

ஏனைய பல்வேறு வணிக செயற்பாடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதற்கான நிவாரணமாக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் தற்போது நடைமுறையிலுள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் அவர்களின் தொழில் முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தவும், முன்னேற்றுவதற்கும் தேவையான கடன் வசதிகளை அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள வர்த்தக வங்கிகள் மற்றும் வங்கிகளூடாக இலகு வட்டி வீதத்துடன் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சிறைச்சாலை நெரிசல்களை தீர்க்க...

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட யுக்திய நடவடிக்கைகளாலே, கைதிகள் அதிகரித்து நெரிசல்கள் ஏற்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேவைக்கு ஏற்ப புதிய சிறைகள் விரைவில் நிறுவப்படும் என்றும் சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதைக் காரணம் காட்டி, சட்ட நடவடிக்கைகளை தாமதப்படுத்த முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் ஏற்படக்கூடிய நெரிசலைத் தவிர்ப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய கட்டடங்களின் நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்தும் அதேவேளையில்,கைதிகளை திறந்தவெளி சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ், புதிய இந்திய துணை...

2021 முதல் இதுவரை செயற்பட்ட ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், டில்லிக்கு அழைக்கப்பட்ட நிலையில், இவருக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. செவிதி சாய் முரளி இதற்கு முன்னர் ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக்கில் துணைத் தூதராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## நட்டத்தில் இயங்கிய 52 அரச...

நிறுவனங்களும் உள்ளடங்குவதாக தெரிவித்துள்ளார். பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் செலவுக்கு நிகரான வரவை பெற்றுக் கொள்வது தொடர்பில், அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவே இந்த இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக எரிபொருள் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளில் சலுகைக் கட்டணங்களை நடைமுறைப்படுத்தியதாகவும் அதன் விளைவு நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க நேர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், இம்முறை அத்தகைய சேவைகளில் செலவுக்கு நிகரான கட்டணங்களை விதித்துள்ளதுடன் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்காக அஸ்வெசும வேலைத்திட்டத்தை அரசாங்கம் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொதுப் போக்குவரத்துக்கு எதிரான...

தந்த அமைச்சர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர், தாம் ஏற்கனவே தலையிட்டு அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கடுத்துள்ளதாகவும், இதுவரை எந்த அமைச்சரும் செயற்படாத வகையில் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் நேரடியாகத் தலையிடத் தயங்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் அல்லது துன்புறுத்தல்களில் ஈடுபடுவோரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இரத்து செய்து தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நுகேகொடையில் இருந்து ஹோமாகம பிடிபன வரை பயணிக்கும் இ.போ.ச பஸ் சாரதி மற்றும் நடத்துநர் மீது தனியார் பஸ் ஊழியர்கள் குழுவினர், தாக்குதல் நடத்தியமை தவறென தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

## உஷ்ண காலநிலை தொடரும்...

தெரிவித்துள்ளது. அதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார அமைச்சு விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

கடும் வெப்பம் காணப்படும் நேரங்களில் மாணவர்கள் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுவது மற்றும் விளையாடுவதற்காக விளையாட்டு மைதானத்திற்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. இத்தகைய உஷ்ணமான காலத்தில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளை நடத்துவதை தவிர்க்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## சம்பள அதிகரிப்பு விவகாரம்...

தொடர்பில், பதிலளித்து மத்திய வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களை மறுக்கும் வகையில் அந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.சமீபத்திய சம்பள திருத்தத்தின் மூலம் மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் 50% அதிகரித்துள்ளது. இதன் நியாயத்தை பாராளுமன்றத்தில் விளக்குவதற்கு மத்திய வங்கி அவகாசம் கோரியுள்ளது.

இந்நிலையில், மத்திய வங்கியின் அதிக சம்பளம் பெறும் அதிகாரிகள் தமது சம்பளத்தில் 36 வீதத்தை வரியாக செலுத்துவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்கள்

(28.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
தொழில் செய்பவர்கள் படிப்படியான வளர்ச்சியை பெறுவார்கள். வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடையாத வகையில் பணிகளை முடித்து கொடுப்பீர்கள்.

**ரிஷபம் :**
தொழில் செய்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆனால் அதற்கேற்ற வருமானம் இருக்காது.

**மிதுனம்:**
சொந்தத் தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் சுமாரான முன்னேற்றத்தை காண்பார்கள். ஆனாலும் வருமானத்தில் குறைவு ஏற்படாது.

**கடகம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் வருவாய் பற்றாக்குறையை சந்திக்க வேண்டியதிருக்கும். ஆனாலும் அவற்றை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**சிம்மம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெற்று மகிழ்வீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடித்துக் கொடுத்து வாடிக்கையாளர்களின் பாராட்டை பெறுவீர்கள்.

**கன்னி:**
உழைப்பு தேற்ற ஊதியம் உங்களை வந்தடையும். ஒரு சிலர் புதிய தொழில் ஒன்றை தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

**துலாம்:**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைபடுவது அதிகரிக்கும். இருப்பினும் வருமானம் போதுமானதாக இருக்கும் .

**விருச்சிகம்:**
உத்தியோகத்தில் சக பணியாளர்களின் எதிர்ப்புகளை கடந்த மின்னரை இடமாற்றம் பதவி உயர்வை பெற முடியும். சொந்த தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் முன்னேற அதிகம் உழைக்க வேண்டியதிருக்கும்.

**தனுசு:**
உயர் அதிகாரிகளின் மூலம் சில சலுகைகளை பெறுவீர்கள். சொந்த தொழில் செய்பவர்கள் திருப்தியான வருமானத்தை பெற்று மகிழ்வீர்கள்.

**மகரம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் உழைப்பிற்கேற்ற வருமானம் இல்லையே என்று வருந்துவார்கள். அதே நேரம் வாடிக்கையாளர்களின் பாராட்டு உங்களை உற்சாகப்படுத்தும்.

**கும்பம்:**
கடுமையாக உழைக்க வேண்டியது இருந்தாலும் திருப்திகருமான வருவாய் இருக்குமா என்பது சந்தேகம் தான். கூட்டுத்தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் வளர்ச்சி காண்பது கடினம்.

**மீனம்:**
சக ஊழியர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சொந்த தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் திருப்திகரமான வருவாயை பெறுவார்கள்.

## சபாநாயகருக்கு எதிராக... (03ஆம் பக்கத் தொடர்)

உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், லக்ஸ்மன் கிரியெல்ல, ஜீ.எல். பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, சந்திம வீரக்கொடி மற்றும் ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் 13,17, 20, 33(6), 35 (1), 21,22, 31 ஆகிய சரத்துக்களுக்கு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள யோசனைகளை கவனத்திற் கொள்ளாது சபாநாயகர் செய்யப்பட்டுள்ளதாக, இந்நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த சட்டமூலத்தில் சில சரத்துக்களை நிறைவேற்றும் போது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உத்திக பிரேமரட்ன எம்.பி இராஜினாமா...

பிரேமரட்ன தேசிய சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த 2020ஆம் ஆண்டு தேர்தலின் போது பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தார்.

## சுற்றுலாத்துறை: 18 நாட்களில்...

564 பேரும், சீனாவிலிருந்து 10 ஆயிரத்து 696 பேரும் நாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. ஜனவரி மாதத்தில் இரண்டு இலட்சத்து 82 ஆயிரத்து 53 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## முறைப்பாடுகளின் உள்ளடக்கத்தை...

அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையிலே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த சுற்று நிருபம் தயாரிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு திகதி ஒன்றை ஒதுக்கித் தருமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார்.

மனுதாரர் தனது மனுவில் தாம், மின்சார சபை சம்பந்தமாக முகநூலில் தெரிவித்த கருத்தையடுத்து அது தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக வருகை தருமாறு, குற்றப்புலனாய்வு திணைக்களம் தொலைபேசி மூலம் தமக்கு அறிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் வினவிய போது உரிய விடயத்தை தெளிவுபடுத்துவதை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நிராகரித்தனர். இதனால், தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தே அவர் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

## எரிபொருள் விலைச் சூத்திரத்தில்...

மீவுத் தொகையைக் குறைப்பதன் மூலம் செலவுகளை மட்டுமே ஈடு செய்யும் வகையில், விலை சூத்திரத்தை செயல்படுத்த எதிர்ப்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பெற்ரோலிய கூட்டுத்தாபனம், LIOC மற்றும் சினோபெக் ஆகியவற்றுடன் போட்டியிட அந்த நான்கு வீதத்தை பயன்படுத்த முயற்சிக்கிறோம்.

கடந்த ஆண்டின் விலைச்சூத்திரத்தின் ஊடாக பழைய கடன்களையும், வங்கிகளில் வாங்கிய கடன்களையும் செலுத்த முடிந்தது.

இதன் பயனை மக்களுக்கு வழங்குவதற்காக எதிர்காலத்தில் துரிதமாக செயற்படுவோம்.

தற்போது, அதிகபட்ச சில்லறை விலைக்கான வர்த்தமானி அறிவித்தல் அமைச்சினால் வெளியிடப்படுகிறது.

இதன்படி, இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் LIOC பெரும்பாலும் இந்த அதிகபட்ச விலைக்கு விற்கக்கூடும். சினோபெக் மட்டும் அதை விட குறைவாக விற்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# அமைச்சரவை முடிவுகள்




**01. நுண் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மைத் துறையை மீண்டும் வலுப்படுத்துவதற்கான கடன் திட்ட முறையை நடைமுறைப்படுத்தல்**

நிலவுகின்ற பொருளாதார பின்னடைவின் விளைவுகளாலும் மற்றும் அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாலான வெளிப்புறக் காரணிகளின் விளைவுகளாலும் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, சுற்றுலாத்துறை, ஆடைக் கைத்தொழில்துறை மற்றும் இதர வணிகத் தொழிற்பாடுகள் சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களில் குறிப்பிடத்தக்க தொகை



யினருக்கு தமது தொழில்முயற்சிகளை மேற்கொண்டு செல்வதற்குப் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கான சலுகையாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மைத் துறைக்கு தொழிற்பாட்டு மூலதனம் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

உத்தேச வேலைத்திட்டத்தின் மூலம் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு தத்தமது வியாபாரங்களை மேலும் விரிவாக்கம் செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் தேவையான கடன் வசதிகளை அனுமதிபெற்ற வணிக வங்கிகள் மற்றும் அனுமதிபெற்ற விசேட வங்கிகள் மூலம் சலுகை வட்டி வீதத்தில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டு கூறுகளாக குறித்த வேலைத்திட்டத்திற்கு 20 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்படவுள்ளதுடன், அதில் 15 பில்லியன் ரூபாய்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மற்றும் புதிய தொழில் முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும், எஞ்சிய 5 பில்லியன் ரூபாய்கள் செயலற்ற கடன் பிரிவின் கீழ் காணப்படுகின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் ஒதுக்கப்படவுள்ளது.

**02. தேசிய சுற்றுலாத்துறைக் கொள்கை**

தேசிய சுற்றுலாக் கொள்கை வரைபு தொடர்பாக 2023.09.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், அங்கு சுற்றுலாத்துறை நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றின் மூலம் குறித்த வரைபை மேலும் மீளாய்வுக்குட்படுத்தப்படல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஜனாதிபதியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள குழு சுற்றுலாத்துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் ஆற்றல் வளங்களை அடையாளங்கண்டு உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழமைவுகளைக் கருத்தில் கொண்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விதந்துரைகளுக்கமைய உத்தேச தேசிய சுற்றுலாத்துறைக் கொள்கை வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

**03. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலும் கொழும்பு துறைமுகத்திலும் சுகாதார இயலளவுகளை மேம்படுத்தல்**

இலங்கையின் பொருளாதாரம் சர்வதேச உல்லாசச் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகச் சுற்றுலாக்கள் மூலம் ஈட்டப்படும் வருமானங்களில் பிரதானமாக தங்கியுள்ளமையால், தடைகளின்றி நாட்டிற்குள் உள்வரும் இடங்களை தொழிற்படுத்தல், சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் சுற்றுலா தொடர்பான சர்வதேச சுகாதார விதிகளுக்கமைய தேச எல்லைகள் ஊடாக உள்வரும் இடங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, உள்வரும் இடங்களில் தேச எல்லைகளில் சுகாதார முன்னேற்பாடுகள், தொற்று நோய்க் கட்டுப்பாட்டுக்கு நேரடியாக ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் பல்வேறுபட்ட அவசர சுகாதார நிலைமைகளின் போது அனைத்து பயணிகளதும், பணியாளர்களதும் மற்றும் உள்வரும் இடங்களிலுள்ள பணியாளர்கள் குழாமின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம், சர்வதேச புலம்பெயர் தாபனத்தின் (ஐஓஆ) மூலமாக 1,170 மில்லியன் ஜப்பான் யென் நிதியுதவியை வழங்கியுள்ளது.

குறித்த நிதியுதவியின் கீழ் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலும் கொழும்பு துறைமுகத்திலும் மற்றும் மாலைதீவு சர்வதேச விமான நிலையத்திலும் வசதிகள் சர்வதேச நடைமுறைகள், விதந்துரைகள் மற்றும் தர நியமங்களுக்கமைய மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**04. விவசாயத் துறையில் இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தின் கீழ் 20242026 காலப் பகுதிக்கான செயற்பாட்டுத் திட்டத்தில் கையொப்பமிடல்**

விவசாயத் துறையில் இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் 2006.11.27 அன்று ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இருதரப்பினரின் உடன்பாடுகளுக்கமைய விவசாயத் துறையை அபிவிருத்தி செய்வதற்காகவும் ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்காகவும் 2010, 2011, 2017,2019 மற்றும் 2022,2024 காலப் பகுதிகளுக்குரிய செயற்பாட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2024,2026 காலப்பகுதிக்கான புதிய செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வியட்நாம் சோசலிச குடியரசின் விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்புத் திணைக்களம் மற்றும் இலங்கையின் விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவையால் குறித்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

**05. பத்தரமுல்ல வோடர்ஸ் எட்ஜ் வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு காணித் துண்டுகளை இலங்கை கடற்படைக்கும், கொழும்பு 10, அசோக வித்தியாலயத்திற்கும் குத்தகை அடிப்படையில் கையளித்தல்**

பத்தரமுல்ல வோடர்ஸ் எட்ஜ் வளாகத்தில் 2 றூட் 30.89 பேர்ச்சர்ஸ் காணித்துண்டை இலங்கை கடற்படையின் படகோட்டுதல் மற்றும் உயிர்க்காப்பு பயிற்சி முகாமொன்றை அமைப்பதற்காக இலங்கை கடற்படைக்கும், 04 ஏக்கர் 02 றூட் 1.60 பேர்ச்சர்ஸ் காணித்துண்டை கொழும்பு 10 அசோக வித்தியாலயத்திற்கான விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துவதற்கும் காணி ஆணையாளர் நாயகம் மூலம் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

2022.06.06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, 1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தைத் தயாரித்தல்**

புதிய நிதி ஒழுங்குச் சட்டகமொன்றைத் தயாரிப்பதற்கும், உத்தேச அரச நிதி முகாமைத்துவச் சட்டத்திற்கு குறித்த நிதி ஒழுங்கு சட்டகத்தை உட்சேர்ப்பதற்கு 2023.05.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தால் ஏனைய திறைசேரித் திணைக்களம் மற்றும் பிரதி திறைசேரிச் செயலாளர்கள் இருவரின் இணைத் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் ஆலோசனை மற்றும் கொள்கை ரீதியான வழிகாட்டலின் கீழ் அடிப்படைச் சட்ட மூல வரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அடிப்படைச் சட்டமூல வரைபின் அடிப்படையில் அரச நிதிச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும், உத்தேச சட்டமூலம் சட்டவரைஞரால் தயாரிக்கப்படும் வரைக்கும் நிதிப் பிரமாணத்தைத் தயாரிப்பதற்கு ஆரம்பிப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிப்பதற்காக திறைசேரி செயலாளருக்கு அதிகாரம்.

**08. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன்களை அறிவிடுதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

கடந்த 03 வருடகாலமாக நிலவுகின்ற பொருளாதார பின்னடைவுகள் காரணமாக உள்ளூர் பாரியளவிலான, நடுத்தரளவிலான மற்றும் சிறியளவிலான வியாபாரிகள் தமது வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்கு பல சிரமங்களை எதிர்கொள்வதற்கு நேரிட்டுள்ளது. தற்போது ஓரளவுக்கு பொருளாதாரம் மீண்டும் ஓரளவுக்கு வலுப்பெறுவதுடன், அதற்குத் தேவையான ஆரம்பப் படிமுறைகள் திறைசேரியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும், கடந்த காலத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவிலான வியாபாரிகளால் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை இன்னும் சரியான வகையில் செலுத்துவதில் பிரச்சினைகள் நிலவுவதாகப் பல தரப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலைமையின் கீழ் கடன் செலுத்தாமல் விடுவதால் வியாபாரிகளின் குறிப்பிடத்தக்களவு ஆதனங்களை தற்போது காணப்படுகின்ற சட்டங்களைப் பின்பற்றி வங்கிகள் கையகப்படுத்தி பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதனால் வியாபாரத் துறையில் மேலெழுக்கூடிய நெருக்கடி நிலைமைகளுக்குத் தீர்வுகண்டு வங்கிகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் கடன் செலுத்துவதற்காக குறிப்பிட்டளவு சலுகைக் காலத்தை வழங்குவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கடன் செலுத்தாமையால் வங்கிகளால் கடன் படுநர்களின் ஆதனங்களை கையகப்படுத்துவதற்காக பின்பற்றுகின்ற பொறிமுறையை 2024.12.15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானம்.

# கொழும்பு ஸாஹிராவில் முதலாம் திகதி 'மிஷ்காத்துல் மஸாபீஹ்' நூல் வெளியீடு

தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் ஸிஹாஹ் சித்தா ஹதீஸ் கிரந்தங்களின் மொழிபெயர்ப்புத் தொகுதி அறிமுகமும் மிஷ்காத்துல் மஸாபீஹ் நூல் வெளியீடும் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அப்துல் கபூர் மண்டபத்தில் நாளை மறுதினம் மார்ச் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அஸர் தொழுகைக்குப்பின் பி.ப 4.00மணிக்கு இடம்பெறவுள்ளது.




ஸாஹிரா கல்லூரியின் அதிபர் டிரிஸ்வி மரைக்கார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஜாமிஆ கல்லூரி கலாபீடத்தின் முதல்வர் ஏ.சி. அகார் முஹம்மத் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். ரஹ்மத் அறக்கட்டளை நிறுவுனர் எம்.ஏ. முஸ்தபா, தமிழகத்தைச் சேர்ந்த உலமாக்கள் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி, ஹாபிழ் ஏ.பீர் முஹம்மது பாகவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.தமீமுன் அன்ஸார், கலாநிதி ஏ.ஏ.ஏ. அஸ்வர், ஸாஹிரா கல்லூரி ஆளுனர் சபை செயலாளர் அலவி முஹ்தார், மௌலவி எம்.ரி.ஏ. ஆரிப், தமிழ் பிரிவின் உப அதிபர் ஏ.எம். மிஹ்ழார் (நளீமி) ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் நிகழ்வைத் தொடர்ந்து 03ம் திகதி ஞாயிறு காலை 9.30 க்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக விழா அரங்கிலும் இந்நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# சாமிமலையில் சடலம் மீட்பு

மஸ்கெலிய பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட குமரி பிரிவில் நேற்று இனந்தெரியாத நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மஸ்கெலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு கிடைக்கப் பெற்ற தொலைபேசி தகவலை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் 40 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தந்தையான குமாரவேல் சுப்பிரமணியம் என தெரியவருகின்றது. உயிரிழந்தவர் ஐந்து நாட்களுக்கு முன்னர் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி புவணா மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.



முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம். மேற்படி கல்வி நிலையத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது அவர் விளக்கமளித்தார்.

# சகோதரர்களுக்கு இடையில் மோதல்; சகோதரி, சகோதரன் மீது கத்திக்குத்து

(யாழ்.விசேட நிருபர்)

சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் சகோதரியும், சகோதரன் ஒருவரும் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் சிகிச்சைக்காக யாழ்,போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களுக்கிடையில் தர்க்கம் ஏற்பட்டு, கைக்கலப்பாக அது மாறியுள்ளது. இதன்போது , இரு சகோதரர்களின் சண்டையை விலக்கி சமாதானப்படுத்த சகோதரி முயற்சித்துள்ளார்.

அவ்வேளை சகோதரன் ஒருவர் தனது சகோதரி மற்றும் சகோதரன் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார். அதில் காயமடைந்த இருவரையும் அயலவர்கள் மீது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய சகோதரனை கைது செய்துள்ளனர்.





கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு தரம் 6 மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது.ஆனந்தபுரம் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளை தொடர்ந்து பெற்றோர்களால் மாலை அணிவிக்கப்பட்டு A9 வீதியூடாக பாண்ட் இசை முழங்க அழைத்து வரப்பட்டு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.பிரதம விருந்தினராக பழைய மாணவியும் கிளிநொச்சி கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலய அதிபருமான விஜயநிதி செல்வானந்தன் கலந்துகொண்டார்.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.02.26
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5402
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 42,310,264.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 9 0 3 9 5 7

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3644 — சீட்டிழுப்பு திகதி 2024.02.26
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,142,108.32
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 07 52 56 57 — விசேட எழுத்து V
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 72027

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1750 — 2024.02.26 — 64959
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 425,318,386.00
ஆங்கில எழுத்து Z — சுப்பர் இலக்கம் 22 — வெற்றி இலக்கங்கள் 08 09 42 45
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.02.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0228
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 0 1 0 7 7 2
L7 எழுத்து M
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.25,859,533.88

**ராசி சுப பலன்**
திகதி 2024.02.26 — சீட்டிழுப்பு இலக்கம் 711
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,879,676.68
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 12 18 39 49
தனயோக இலக்கம் 07250 — நாளுக்கான விதி எண் 25

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1432 — 2024.02.26
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,156,592.88
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 06 38 63 67 — விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 11791


## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**பேருந்து பயணிகள் சங்கங்கள் மற்றும் பேருந்து உரிமையாளர்களைக் கொண்ட பேருந்து சங்கங்களின் பதிவு**

பொதுப் பயணிகள் போக்குவரத்தின் முக்கிய பங்குதாரர்கள், பயணிகள் சேவை அனுமதி பத்திரம் வைத்திருப்பவர்கள் மற்றும் பயணிகளுடன் நெருங்கி பணியாற்றுவதன் மூலம் தரமான பொதுப் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்தும் நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட பயணிகள் மற்றும் பேருந்து சங்கங்கள் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, நீங்கள் ஒரு பயணிகள் சமூகம் / சங்கம்/ அமைப்பாக அல்லது சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சமூகம்/ சங்கம்/ பேருந்து உரிமையாளர்களின் அமைப்பாகப் பதிவு செய்திருந்தால், பின்வரும் விபரங்களை எங்களிடம் சமர்ப்பிக்கவும்.

1. சமூகம்/சங்கம்/அமைப்பின் பெயர்
2. பதிவு செய்யப்பட்ட முகவரி
3. பதிவு இலக்கம்
4. பதிவு செய்யப்பட்ட நிறுவனம்
5. பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை
6. அதிகாரிகள் (பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்துடன்)

அதனுடன், உங்கள் சமூகம்/சங்கம்/அமைப்பு தொடர்பான பின்வரும் ஆவணங்களின் நகலை எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. சமூகம்/சங்கம்/அமைப்பு ஆகியவற்றின் பதிவுச் சான்றிதழ்
2. சமூகம/சங்கம்/அமைப்பு ஆகியவற்றின் உள்ளமைப்பு

அதன்படி, மேற்கூறப்பட்ட தகவல்களை **2024.03.31** க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி, கொழும்பு 05.
தொலைபேசி : 0112 587 372/ 0112 595 555 பெக்ஸ் : 0112 503 725/0112 058 138
மின்னஞ்சல் : info@ntc.gov.lk

# கிழக்கின் குரல்



## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பங்குபற்றலுடன் நிகழ்வு

### 246 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

*ஒலுவில் மத்திய விசேட நிருபர்*

'பாராளுமன்ற செயற்பாடுகளும் ஒழுங்கு முறைகளும்' எனும் தலைப்பில் நடத்தப்பட்ட கற்கைநெறியில் பங்குபற்றி அக்கற்கைநெறியை பூர்த்திசெய்த தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உள்வாரி இளங்கலை பட்டதாரி மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (27) அப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, கலாசாரபீட அரசியல்துறை தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் மற்றும் பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி யாஸ்ரி முகம்மட் ஆகியோரின் கூட்டு நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் 246 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.





இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக, கலை கலாசாரபீட அரசியல் விஞ்ஞானத்துறை, பாராளுமன்றத்துடன் இணைந்து குறுகியகால கற்கையை பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடத்தியிருந்தது.

USAID மற்றும் தேசிய ஜனநாயக நிறுவனமும் இந்நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியதுடன், இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர கலந்துகொண்டு உரையாற்றினார். கௌரவ அதிதிகளாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலை கலாசாரபீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி அனுஷா ரோஹணதீர உட்பட அதிதிகள் பல்கலைக்கழக சமூகத்தினரால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை கலாநிதி எம்.அப்துல் ஜப்பார் நிகழ்த்தியதுடன், பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி யாஸ்ரி முகம்மட் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

## பொத்துவிலில் இறங்குதுறை அமைக்க வேண்டுகோள்

*ஒலுவில் விசேட நிருபர்*

பொத்துவில் பிரதேச கடற்றொழிலாளர்களின் இயந்திரப் படகுகளை தரித்து வைப்பதற்கு இறங்குதுறையை நிர்மாணித்துத் தருமாறு தாம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக, அறுகம்பை மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம். எல்.தௌபீக் தெரிவித்தார்.

மீனவர் வீட்டுத்திட்டம், மீனவர்வாடி, மற்றும் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை ஆகியவற்றையும் நிர்மாணித்துத் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இது தொடர்பான மகஜரை அனுப்பி வைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பாக தமது இயந்திரப் படகுகளை தரித்து வைப்பதற்கு நிரந்தர இடம் இல்லாததால், நீண்டகாலமாக பல பிரச்சினைகளை கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கி வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

மூதூரில்

## மீள்குடியேறிய பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கிவைப்பு



*தோப்பூர் தினகரன் நிருபர்*

திருகோணமலையின் மூதூர் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் சிலருக்கு வாழ்வாதாரத்துக்கான உதவி நேற்று செவ்வாய்க்கிழமை (27) வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த யுத்த காலத்தில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து மீண்டும் தமது சொந்த இடத்தில் மீள்குடியேறியவர்களுக்கே 'நிலைபேறான மீள்குடியேற்றத்துக்கும் மீள் ஒருங்கிணைப்புக்குமான விரிவான ஆதரவு' எனும் செயற்றிட்டத்தின் கீழ் இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது. UNDP இன் அனுசரணையுடன் ஒபர் நிறுவனத்தினால் இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

தத்தமது வாழ்வாதாரத்துக்காக திறமையாக சுயதொழில் செய்து வரும் பயனாளிகளுக்கு இரண்டாம் கட்ட உதவியின் கீழ் கைத்தொழில் உபகரணங்கள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

பயனாளிகளுக்கான கைத்தொழில் உபகரணங்களை மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பில்

## சமாதான நீதவான்கள் 20 பேருக்கு நியமனம்

புதிய சமாதான நீதவான்களாக தெரிவுசெய்யப்பட்ட 20 பேருக்கு நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவால் நியமனங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அழைப்புக்கமைய மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த நீதி அமைச்சர் இந்த நியமனங்களை வழங்கி வைத்தார்.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பரிந்துரைக்கமைய மட்டக்களப்பில் இந்த வருடத்தில் ஏற்கெனவே 17 பேருக்கு சமாதான நீதவான் நியமனம் வழங்கி வைக்கப்பட்ட நிலையில், மேலும் 20 பேருக்கு சமாதான நீதவான் நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பிராந்திய



அலுவலகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் நீதி இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜெயரத்தின, நீதி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள், கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்றில்

## இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் விருது விழா

*அட்டாளைச்சேனை தினகரன், பாலமுனை விசேட நிருபர்கள்*



இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் 27ஆவது வருடாந்த சிறப்பு விருது வழங்கும் விழா மற்றும் வருடாந்த பொதுக் கூட்டமும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (26) நடைபெற்றன.

மேற்படி அமைப்பின் தலைவர் எம்.பி.போல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நிர்மாணத் துறையில் திறமை காட்டிய துறைசார் அமைப்புகளின் பிரதிநிதிகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது, நிர்மாணத்துறையில் சிறப்பு தேர்ச்சிமிக்க வல்லுநர்களின் ஆலோசனை வழிகாட்டல் சொற்பொழிவும் நடைபெற்றது.

அரச மற்றும் தனியார் துறை சிறப்பு நிர்மாண செயற்பாடுகள் காணொளி மூலமாக காட்சிப்படுத்தப்பட்டதுடன், கலை கலாசார பாரம்பரிய நிகழ்வுகளும் நடைபெற்றன.

## தென்கிழக்கு பல்கலையில் சர்வதேச ஆய்வரங்கு மாநாடு

### நுழைவுச்சீட்டு அறிமுக நிகழ்வு

*திராய்க்கேணி தினகரன் நிருபர்*

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நாளை வியாழக்கிழமை (29) நடைபெறவுள்ள 12ஆவது சர்வதேச ஆய்வரங்கு மாநாட்டுக்கான நுழைவுச்சீட்டுகளை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு, அப்பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (26) நடைபெற்றது.

'Digital Transformation for a Sustainable Future' எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் பிரித்தானியாவினுடைய Gloucestershire பல்கலைக்கழகத்தின் Head of School of Computing and Engineering பேராசிரியர் கமால் விச்கோம் பிரதான பேச்சாளராக கலந்துகொள்ளவுள்ளார்.

இம்மாநாட்டில் 200 ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவுள்ளன. இம்மாநாட்டுக்கான இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம். எம்.முஸ்தபா தலைமையில் நடைபெற்ற நுழைவுச்சீட்டு அறிமுக நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.




இதன்போது, தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த தலைவர்களிடம் நுழைவுச்சீட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. பல்கலைக்கழக பீடாதிபதிகள், நூலகர், பேராசிரியர்கள் திணைக்களத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பிரதி நிதியாளர், தனியார் நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சம்மாந்துறையில் வீதியோர வியாபார நிலையங்கள் அகற்றல்



*இறக்காமம் தினகரன் நிருபர்*

சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைந்த வீதியோர வியாபார நிலையங்களை அகற்றும் நடவடிக்கையை அப்பிரதேச சபை நேற்று செவ்வாய்க்கிழமை (27) முதல் முன்னெடுத்துள்ளது.

சம்மாந்துறை நகரிலிருந்து அம்பாறை வீதி, மல்கம்பிட்டி வீதி, பொலிஸ் வீதி, கல்முனை வீதிகளின் இருமருங்கிலும் தற்காலிக வியாபாரம் இடம்பெறுவதால் வாகன விபத்துகள் சம்பவிக்க நேரிடுவதுடன், பாதசாரிகளும் இடையூறை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகையால் பொதுமக்களின் நலன் கருதி சம்மாந்துறை பிரதேச சபைச் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர், பொலிஸார், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வர்த்தக சங்கம் உட்பட ஒன்றிணைந்த குழுவினரால் இனங்காணப்பட்ட தற்காலிக வியாபார நிலையங்கள் அகற்றப்படுகின்றன.

துறைநீலாவணையில்

## தரம் 05 மாணவருக்கு இலவச வகுப்பு ஆரம்பம்

*மணல்சேனை நிருபர்*

இந்த வருடம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள துறைநீலாவணை மாணவர்களுக்கான இலவச வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட விபுலானந்தா புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் துறைநீலாவணை மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இலவச வகுப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

கடந்த 2005ஆம் ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்ட விபுலானந்தா புனர்வாழ்வுக் கழகத்தினர் தரம் 05 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இலவச வகுப்பை நடத்தி வருகின்றனர்.

இந்நிகழ்வில் தரம் 05 மாணவர்கள், ஆசிரியர்கள், அம்பாறை மாவட்ட விபுலானந்தா புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பாலமுனையில்

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்வு

*பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்*

போதைப்பொருள் பாவனை உட்பட சமூக சீர்கேடுகளை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை அட்டாளைச்சேனை பிரதேச சபையும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையமும் இணைந்து பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தன.

பாலமுனை பிரதேசத்தில் அமைந்துள்ள மைதானம், கடற்கரை, வயல் வெளி உள்ளிட்ட பொது இடங்களில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனை, சூதாட்டம் ஆகிய சமூக சீர்கேடுகளை முற்றாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் ஏற்பாட்டில், அதன் தலைவர் எம்.ஏ. ஏ.அன்சார் தலைமையில் நடைபெற்ற இதற்கான ஆரம்ப நிகழ்வில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், அட்டாளைச்சேனை பிரதேச சபைச் செயலாளர் எம்.எம்.பாயிஸ், கிராம உத்தியோகத்தர்கள், அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கல்முனையில் கர்ப்பிணி தாய்மாருக்கு விழிப்புணர்வு

*காரைதீவு குறூப் நிருபர்*

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு அவ்வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் பி.ஏ.டீ.எல்.ரன்சிறியின் ஏற்பாட்டில் இச்செயலமர்வு நடத்தப்பட்டது. இதன்போது வைத்திய நிபுணர் ரன்சிறி தெரிவித்த போது, 'பொறுப்புள்ள பெற்றோர்' என்ற தலைப்பில் இச்செயலமர்வு நடத்தப்படுவதன் பிரதான நோக்கமானது சமூகத்துக்கு நல்ல பிள்ளைகளை உருவாக்க வேண்டுமென்பதற்காக. ஆகையால் ஆரோக்கியம், புத்திக்கூர்மை, நற்பண்பை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க மிகவும் உகந்த காலமே



மகப்பேற்றுக் காலம். வயிற்றிலுள்ள பிள்ளையுடன் பெற்றோர் உரையாடுதல், நல்ல புத்தக வாசிப்பு உள்ளிட்ட நற்பண்புகளால் சிறந்த பிள்ளைகளை உருவாக்க முடியுமென்றார்.



கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தி/அல் தாரீக் மகா வித்தியாலயத்தில் மனையியல் வகுப்பறை நிர்மாணத்துக்காக ஒருதொகுதி உபகரணங்களை அதிபர் எம்.ஏ.எம்.கியாஸிடம் அவ்வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் அண்மையில் கையளித்து வைத்தனர்.

(கந்தளாய் தினகரன் நிருபர்)

## அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை ஏற்பாட்டில்

# முப்பெரும் விழா, கௌரவிப்பு



பிரதம அதிதியாக மலேசிய உயர்ஸ்தானிகர் பங்கேற்பு





































மலேசியாவும் இலங்கையும் மிக நீண்ட காலமாக நட்புறவைக் கொண்ட நாடுகளாகும். இந்த சிறிய நாட்டில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ அமைப்பு பல கிளைகளை உருவாக்கி செயற்பட்டு வருவதை நான் மனமாற பாராட்டுகிறேன். இவ்வமைப்பு இளைஞர்களுடைய மேம்பாட்டையும் சமூகப் பணிகளையும் மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. கல்விக்காக சேவை செய்த மூத்தோரைப் பாராட்டுவது, அவர்களை மதிக்கின்ற வை. எம். எம். ஏ. பணி பாராட்டத்தக்கது. இது மென்மேலும் இடம்பெற வேண்டும் என்று பிரதம அதிதியும் இலங்கைக்கான மலேசிய நாட்டின் உயர்ஸ்தானிகருமான பத்லி ஹிசாம் ஆதம் தெரிவித்தார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டமும் கேகாலை மாவட்டக் கிளைகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கேகாலை மாவட்டத்தில் ஓய்வு பெற்ற அதிபர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மற்றும் மீலாத் விழாப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் முப்பெரும் நிகழ்வு என இரு அமர்வுகளாக மாவனல்லை தெவ்மினி ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் காலையில் இடம்பெற்ற முதலாவது அமர்வில் மத்திய செயற்குழு கூட்டம் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக பிரதிநிதி அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய கலந்து சிறப்பித்தார். மாலையில் இரண்டாவது அமர்வு தேசியத் தலைவர் இஹ்திசாம் ஏ. ஹமீட்டின் வழிகாட்டலுடன் கேகாலை மாவட்டப் பணிப்பாளர் எம். கே. ஏ. லுக்மான் தலைமையில் இடம்பெற்றது. இதில் மலேசிய நாட்டின் உயர்ஸ்தானிகர் பத்லி ஹிசாம் கலந்து கொண்டார். இதில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இஸ்லாத்தில், அறிவைத் தேடுவது மிகவும் உன்னதமான பணியாகும். அது கல்வி விடயத்தில் ஊக்குவிப்புச் செய்வதில் மேலோங்கியுள்ளது. அறிவைக் கற்றுக் கொள்வது தனிப்பட்ட முயற்சி மட்டுமல்ல, சமூகப் பொறுப்பும் கூட. கல்வி மற்றும் கற்றல் மூலம் நாம் நம்மை மேம்படுத்தி, சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறோம். இன்று கௌரவிக்கப்படும் அறிஞர்கள் கல்வியின் உணர்வையும், அறிவின் மீதான அர்ப்பணிப்பையும் முன்னுதாரணமாகக் காட்டியுள்ளனர். ஏனெனில், முஸ்லிம்களாகிய நமக்கு ஏற்கனவே கற்றுக் கொடுத்தது என்னவென்றால், நமது அறிவையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகத்தான். உண்மையில் நபி (ஸல்) அவர்களைப் பற்றிப் பேசும் போது நாம் அதைத் தெரிந்து கொள்ளலாம்.

நாங்கள் எங்கள் சகோதரர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்வோம், அது மேலும் உலகில் வெற்றிபெறவும் எங்கள் சகோதர சகோதரிகளுடன் தொடர்ந்து எங்கள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் உதவும். அல்லாஹுத்தஆலாவும் முஹம்மது நபி (ஸல்) அவர்களை சரியான வழிகாட்டுதலையும் நெறிமுறைகளையும் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

காஸாவிலுள்ள மக்கள் தண்ணீர், குடியிருக்க வசதிகளின்றி உயிர் பாதுகாப்புக்களின்றி பெரும் துயரங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். அவர்களுக்காக நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அகில இலங்கை வை.எம். எம்.ஏ பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில் தங்களின் அன்பான அழைப்பை எனக்கு வழங்கிய அமைப்பாளருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கற்றறிந்த அறிஞர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் கேகாலை மாவட்ட வை. எம். எம். ஏ. கிளை உறுப்பினர்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஆற்றிய சிறந்த சேவைகளை அங்கீகரிப்பதைக் காண்பது உண்மையில் ஒரு பாக்கியமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் உரையாற்றும் போது;**

ஆரம்பத்தில் இது கலாநிதி எம்.எம்.ஏ. பேரவையென ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை அது படிப்படியாக வளர்ந்து ஒரு மகத்தான பரிணாம வளர்ச்சியினைக் கண்டுள்ளது. அது 74 ஆண்டு நிறைவை அண்மித்துள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் 179 வை. எம். எம். ஏ. கிளைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்தில் 9 கிளைகள் அமைந்துள்ளன. மாவட்டப் பணிப்பாளராக எம்.கே. லுக்மான் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இப்பிரதேசத்தில் சிறந்த பணிகளை அவர் ஆற்றிவருகின்றார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க இம்முறை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டம் மாவனல்லையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் கேகாலை மாவட்ட வை.எம். எம்.ஏ. கிளையினர்கள் இணைந்து ஓய்வு பெற்ற அதிபர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இன்று சுமார் 90 பேர் அளவில் இந்நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கவும் மீலாத் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர், மாணவிகளுக்கு பரிசில்களும் வழங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வு மாவனல்லையில் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அதேவேளையில் இந்நிகழ்வினை வெற்றிகரமான மேற்கொள்வதற்குப் பங்களிப்புச் செய்த அத்தனை உள்ளங்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வின் இரண்டாவது அமர்வில் எமது முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டு ஓய்வு பெற்ற அதிபர்களைப் பாராட்டுவது என்பது இன்றியமையாததொன்றாகும். இத்தகைய தியாகங்களைச் செய்த ஓய்வுபெற்ற அதிபர்களை நன்றி பாராட்டுவது என்பது இஸ்லாமிய மார்க்கத்தைப் பொறுத்த வரையில் மிகவும் உன்னதமான பணியாகும்.

கல்வியின் மேம்பாட்டிற்கும் கல்வி வளர்ச்சிக்கும் மாணவர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு அடித்தளமாக இருப்பவர்கள் அதிபர்மார்களே. கல்விக்காக சேவை புரிந்த ஓய்வு பெற்ற அதிபர்மார்களை இம்முறை மாவனல்லையில் கௌரவிப்பதையிட்டு நாங்கள் பெருமிதம் அடைகின்றோம். இதன் மூலம் கலாநிதி ஏ.எம். ஏ. அஸீஸின் கனவு நனவாகும் நல்லதொரு செய்தியாகப் பார்க்கலாம். அதற்காக பாடுபட்ட மாவட்டப் பணிப்பாளர் லுக்மான் மற்றும் ஏனைய கிளைகளின் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இந்நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய விவகார தவிசாளர் சஹீட் எம். ரிஸ்மி;**

சாதனையாளர்களை கௌரவிக்க வேண்டும் என்று இந்த மாவட்டத்திலுள்ள வை. எம். எம். ஏ. கிளைகள் சிந்தித்து இருந்தாலும் சாதனையாளர்களை உருவாக்கி விட்டு இங்கு அமர்ந்திருக்கும் மூத்த அதிபர்களும் ஆசிரியர்களும் தான் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

இந்த உலகத்திலே இருக்கக் கூடிய அனைத்து துறைசார்ந்தவர்களையும் உருவாக்கியவர்கள் அந்த அதிபர் ஆசிரியர்களும்தான். இங்கு அமர்ந்துள்ள மாணவர் மாணவிகள் எல்லோரும் பெற்றோர்களுக்குச் சமனானவர்கள் அந்த உன்னதமான பணியைச் செய்த நீங்கள், சாதனையாளர்கள் என்று சொல்வதை விட சாதனையாளர்களை உருவாக்கியவர்கள் என்று கூடக் கூறலாம். ஆனால் 20ஆம் நூற்றாண்டிலே கல்வி மேம்பாட்டுக்காக அதிகமான சேவைகளைச் செய்தவர்களே வருகை தந்துள்ளனர். 21 ஆம் நூற்றாண்டில் ஜொலித்துக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை உருவாக்கி விட்டு அமர்ந்து கொண்டிருக்கின்றீர்கள் எனும் போது உங்கள் சாதனை இன்னும் முடியவில்லை. இப்பொழுதுதான் உங்கள் சேவை ஆரம்பித்துள்ளது. நீங்கள் உங்கள் சேவையை முடித்து விட்டு அடுத்தவர்களுக்கான உங்கள் பணியை ஆரம்பித்திருக்கின்றீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு மனிதனின் வரலாறு எழுதப்பட வேண்டுமானால் தனக்குத் தான் தன்னுடைய சொந்தம், கார், பங்களா என்பதற்கு மாறாக அடுத்தவர்களுக்கு நாம் என்ன செய்தோமோ அதுதான் வரலாற்றில் எழுதப்படும். அதைத்தான் நீங்கள் இன்று வரலாற்றில் எழுதப்பட்டு விட்டீர்கள். எனவே சமகாலத்தில் இருக்கக் கூடிய இந்த மாணவர்கள் இவர்கள் எங்களை விட தொழில் நுட்ப வளர்ச்சியோடு மிகவும் வேகமாக வளர்ந்து வரக் கூடியவர்கள். குறிப்பாக டிஜிட்டல் புரட்சி செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத் துறையில் மிகவும் வேகமாக வளர்ந்து எங்களைத் தாண்டிச் சென்று விடுவார்களோ என்று ஒரு சில விடயங்களைப் பார்த்து எங்களுடன் சமாந்தரமாக பயணம் செய்ய எங்களை நாங்கள் மீண்டும் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய கால கட்டத்தில் இருக்கின்றோம்.

இலங்கையில் 180 கிளைகளைக் கொண்ட ஒரு தேசிய அமைப்பு இது. இந்த அமைப்பு கல்விக்காகத்தான் கலாநிதி ஏ. எம்.ஏ. அஸீஸ் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் இஸ்தாபகர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியைக் கையேற்கும் போது கலாநிதி டி.பி. ஜாயா அவர்கள் ஒரு சர்வகலாசாலை என்ற தோற்றப்பாட்டுக்கு உரித்தானவை என்ற வகையில் இப்பாடசாலையை கட்டி எழுப்பினார்கள். அந்த வெற்றிடத்தின் இடைவெளியை நிரப்புவதற்கு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களிடம் கையளித்தார்.

அவர் இலங்கை முஸ்லிம்களின் முதலாவது சிவில் சேவகர். அவ்வாறு கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு கேகாலை மாவட்டத்திலே அமைப்பின் மாவட்டப் பணிப்பாளர் லுக்மான், ஏனைய கிளைகளையும் இணைத்து கல்வியாளர்களை கௌரவிக்க எடுத்துக் கொண்ட விடயத்தை நான் மனமாற பாராட்டுகிறேன் என தெரிவித்தார்.

**இந்நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட நியுமென்ஸ் கல்லூரி மற்றும் ஏசியன் க்ரெச்வெட் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ஏ. பி. எம். ஹுஸைன்;**

கேகாலை மாவட்ட ஓய்வு பெற்ற அதிபர்களின் சேவைகள் மூலம் கேகாலை மாவட்டம் புகழ் பெற்றிருக்கின்றமையை நாம் எல்லோரும் நன்கு அறிவோம்.. மேலும் கல்விக்கு உதவி செய்தவர்களுக்கு பாராட்டி கௌரவிப்பது என்பது நாளை மறுமை நாளில் இறைவனினால் வழங்கப்படும் பெரிய கௌரவங்களாக மதிக்கப்படுவார்கள்.

இரண்டாம் உலகப்போரின் போது முசோலினி ஒரு கிராமத்தை அடித்து அழிக்க நினைத்து ஒரு படையை அனுப்பினான். பல தடவை முயற்சி செய்தும் அந்த கிராமத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை.

அப்போது முசோலினி தனது உலவாளியை அழைத்து 'அவ்வளவு பெரிய படையை கொண்டிருக்கிறார்களா' என்று கேட்டார். அப்போது உலவாளி சொன்னான். 'இல்லை ஒரு 50, 60 பேர் இருப்பாங்க' என்றான். முசோலினி கேட்டான். அப்ப அந்த ஊருக்கு தலைவன் இருக்கிறானா? உலவாளி ஆம். இளைஞனா? உலவாளி சொன்னான் 'இல்லை 60, 65 வயது இருக்கும். முசோலினி அவர் என்னவாக இருக்கிறார்' என்று கேட்டான். உலவாளி சொன்னான் அவர் ஆசிரியரா? அப்ப ஆபத்தானவர் என்று இரண்டாம் உலகப்போர் சமயத்தில் முசோலினி சொன்னவைகளை ஞாபகப்படுத்தி ஆசிரியர்களின் பெருமையை விளக்கி அவர்களுக்கு தலைமை தாங்கிய அதிபர்களை புகழ்ந்து உரையாற்றினார். மேலும் அதிபர்களது சேவை ஈருலகுக்கும் வெற்றி தரக் கூடியது என்பதையும் முகம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கி ஓய்வு பெற்ற அதிபர்களை மகிழ்வித்து அவர்களுக்காக பிரார்த்தனை செய்து வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி, பொருளாளர் டி. டி. எம். பிர்தௌஸ், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் கே. எம். டீன், மாவட்டப் பணிப்பாளர்கள், திட்ட அதிகாரிகள், உப தலைவர்களான எம். ஆர்.எம். சியாட், உப தலைவர் அம்மார் ஷரீப், உப தலைவர் எம். பாசில் மற்றும் மாவட்டப் பணிப்பாளர்கள், கேகாலை மகளிர் பிரிவைச் சேர்ந்த பாரா தாஹிர் உட்படசில பெண்களும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள வை. எம். எம். ஏ. கிளைகளின் முக்கியஸ்தர்கள், ஊடகவியலாளர் அமீர் ஹுஸைன் எனப் பெரு எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டனர்.

அம்மார்...

LECO

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# மின் விநியோகத் தடை

பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் நிமித்தம் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். பொதுவான மின்சாரத் தடைக்கான நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையாகும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பகுதிகளுக்கான நேரங்கள் வெவ்வேறாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

## 2024 மார்ச் மாதத்திற்கான மின்சாரத் தடை அட்டவணை

### திகதிகள் மற்றும் மின் கம்பியிணைப்புள்ள இடங்கள்

### காலி

1 **மார்ச் 04 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

பண்டாரநாயக்க பிளேஸ் (பகுதி), மாத்தறை வீதி (பகுதி), தக்கியா வீதி மற்றும் ஒழுங்கை, அப்துல் வஹாப் மாவத்தை, சமகி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 11 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

ஹுமெஸ் வீதி, விஸ்கம் வீதி, தேவசுரேந்திர மாவத்தை, வக்வெல்ல வீதி (பகுதி), கல்வடுகொட, விமலசுரேந்திர மாவத்தை, டெம்பள் வீதி, கந்தேவத்த வீதி, ரிச்மண்ட் ஹில் வீதி, ஹீன்பென்டெல்ல வீதி (பகுதி), பேதுருவல சந்தி, ஓசானாகொட வீதி, போபே குறுக்குத் தெரு, தஹநாயக்க மாவத்தை, பன்கஹலங்கார மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 12 மு.ப. 9.00 முதல் பி.ப. 5.00 வரை**

ஹிரிம்புர வீதி (பகுதி), பெலிகஹ சந்தி மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 18 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் லைட் ஹவுஸ் ஹோட்டலிலிருந்து புகையிரத நிலையம் வரை, கலுவெல்ல, மல்வத்தை வீதி, ஜெயில் வீதி, டெம்பிளஸ் வீதி, மஹமோதர, ரிச்மண்ட் ஹில் வீதி (பகுதி), அபேசுந்தர வீதி, மஹமோதரவத்த, கந்தேவத்த வீதி, புத்தசிங்க வீதி, ஓசனாகொட (பகுதி), சியம்பலகஹவத்த மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 25 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

மஹமுதலி மாவத்தை, ஜயந்தி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

### ஹிக்கடுவ

1 **மார்ச் 06 பி.ப. 2.00 முதல் பி.ப. 4.00 வரை**

காலி வீதியில் ஹிக்கடுவ பீச் ஹோட்டலிலிருந்து ஹிக்கடுவ சந்தி வரை, அமரசேன மாவத்தை (பகுதி), பத்தேகம வீதி (பகுதி மற்றும் கிளை வீதிகள்)

2 **மார்ச் 07 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் கொரல் கார்டன் ஹோட்டல் முதல் சுனில் பீச் ஹோட்டல் வரை, அமரசேன மாவத்தை (பகுதி), பத்தேகம வீதி (பகுதி), அமரசேன மாவத்தை, வவுலாகொட வீதி, பன்னங்கொட வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 14 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

வேவல மில்ல வீதி, காலி வீதியில் சுனில் பீச் ஹோட்டலிலிருந்து கொரல் கார்டன் ஹோட்டல் வரை, நரிகம, வீ.சீ. வீதி, லீனவத்த, வேவல்கொட வீதி, பன்னங்கொட வீதி, மில்ல வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 21 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

படுவத்த, கம்மடுவவத்த, குமார மாவத்தை, ஆண்டிகேவத்த, காலி வீதியில் குமாரகந்த சந்தியிலிருந்து ரத்கம சந்தி வரை, தொடந்துவ டீ.சீ. பிரதேசம், பரப்பொதுவ, சுவர்ணஜோதி வீதி, மொரகொல வீதி, சுங்க வீதி, தீகல்ல வீதி, கரவேகொட, வலமுல்ல வீதி, தம்மேஸ்வரா மாவத்தை, மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 28 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

தொடங்கொட வீதியில் போப்பேகொட சந்தியிலிருந்து ரனபன்னதெனிய வரை, பள்ளியபிட்டிய வீதி, ரத்கம சந்தி, விஜேரத்ன மாவத்தை, போப்பே வீதி, கந்தேகொட வீதி, கட்டுதம்பே வீதி, காலி வீதியில் ரத்கம சந்தியிலிருந்து கப்புமுல்ல தேவாலயம் வரை, கம்மெத்தகொட, விஜேரத்ன வீதி மற்றும் கிளை வீதிகள்

### அம்பலாங்கொட

1 **மார்ச் 05 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

மருதானை வீதி, எலதொட்ட வீதி, பலப்பிட்டிய மோதர தேவால வீதி, வெலிகந்தமுல்ல வீதி, பலப்பிட்டிய ஸ்டேஷன் வீதி, பிரஹ்மனவத்த, காலி வீதி (பகுதி), வெலிவத்த, வெலிவத்துகெதர, நுருகல, குருநிவஸ வீதி, குருவித்யாலய வீதி, ரேவத்த, கல்மந்துவ, கல்மன்கொட, விஜயரத்ன வீதி, சிங்கள முஸ்லிம் மித்துரு மாவத்தை, வெலிதர, மருதானை வீதி, தேவால வீதி, பீ. ஆர். த சில்வா மாவத்தை, கபினாவலவ்வ வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 12 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

துடுவேகொட (பகுதி), கெரமினிய வீதி, கெரமினிய பொக்குன வீதி, பத்திராஜ வீதி, டிஸ்னி வீதி, பின்னதுவ, பொல்வத்த, பங்கலோக்க மாவத்தை, எப்பிட்டமுல்ல வீதி, தல்கஸ்கொட வீதி, நுகேதுடுவ, பீரிஸ் வெத மாவத்தை, பி.எச்.ஆர். சுமணதாச மாவத்தை, பலதுவ வீதி, கலுவடுமுல்ல, போரபா, பெனியன்ன, போரபா தொட்டுபொல வீதி, தேவால வீதி, வலவ்வத்த வீதி, ரொபர்ட் விக்கிரமசூரிய வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 19 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

வத்துகெதர – பலப்பிட்டிய வீதி (பகுதி), ஹீனெட்டிய வீதி, மஹகராவ வீதி, ஆந்தாதொல வீதி (பாருதொட்ட பிரதேசம்), தெல்கஹவத்த, மகலந்துவ, வடாதுவ, நவரத்னகொட, ஸ்டேஷன் வீதி, சீனிகொட மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 26 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் தர்மாசோக்க கல்லூரியிலிருந்து ஹரிஸ்சந்திர டயர் வேர்க்ஸ் வரை, பட்டபெந்திமுல்ல, சந்திரவாச வீதி, மகாவித்தியாலய, ஸ்டேஷன் வீதி, களுத்துறை வீதி, கடற்கரை வீதி (பகுதி), 5ம் குறுக்குத் தெரு, விக்கிரமசூரிய வீதி மற்றும் கிளை வீதிகள்

### களுத்துறை

1 **மார்ச் 05 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதி (பகுதி), ரத்னஜோதி மாவத்தை, மங்கள வீதி, வெலே பன்சல வீதி, பண்டாரகம வீதி (பகுதி), இல. 1, ஸ்டேஷன் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

### பயாகல

1 **மார்ச் 04 பி.ப. 1.00 முதல் பி.ப. 3.00 வரை**

துலபிட்டிய வீதி, மாபிட்டிய வீதி, பிரகத்தி மாவத்தை (பகுதி), துலபிட்டிய சேர்ச் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 04 பி.ப. 4.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதி (பகுதி), மகல்கந்த, ஜனராஜபுர, அளுத்ஹேன, புபுலவத்த, புபுலந்த லேன்ட் சேல், அம்பலன்பொல, சாம மாவத்தை, குருந்துவத்த, மரக்கலவத்த, ஹேன வீதி, ரொக்லன்ட் வீதி, பெர்னாண்டோ பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

முன்ஹேன வீதி, கித்துள்ஹேன வீதி, வின்சென்ட்கம, எட்வின் வீரசிங்க மாவத்தை, குமாரகந்த, பெதுர மாவத்தை, சென் வின்சென்ட் ஹோம் வீதி, லக்தினு கார்டன்ஸ், நிர்மலவத்த, அக்கரமல வீதி, நில்வாதுல, இஹலவெல வீதி மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 06 பி.ப. 4.00 முதல் பி.ப. 5.00 வரை**

முன்ஹேன (பகுதி), பள்ளியவத்த, குருந்துகஸ்முல்ல, போகஹவத்த, அலோபோபடவத்த, போமியகஹலந்த, ஆனந்தகம, பெட்டதெனிய, 80 ஏக்கர், பஹலவத்த மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 13 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் கட்டுகுருந்த சந்தியிலிருந்து களுத்துறை தெற்கு வித்தியாலயம் வரை, ரேன்ஜர்ஸ் வீதி, லேக் வீதி, தர்மாராம வீதி, ஜயசுந்தர வீதி, பெட்ரிக் பீரிஸ் மாவத்தை, குரே மாவத்தை, பள்ளி வீதி, கலீல் பிளேஸ், யொவுன் வீதி, ஹிஜ்ரா மாவத்தை, வெத்துமகட, கெத்தாராம வீதி, விக்கிரமசிங்க பிளேஸ் (பகுதி), ஷேக் நூர்டீன் வீதி மற்றும் கிளை வீதிகள்

6 **மார்ச் 13, 20 - 13ஆம் திகதி 4.00 முதல் பி.ப. 5.00 வரை, 20ஆம் திகதி பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

கட்டுகுருந்த சந்தி, நாகொட வீதி (பகுதி), காலி வீதி (பகுதி), சென். செபஸ்தியன் வீதி, கலமுல்ல (பகுதி), சனச மாவத்தை, 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் ஒழுங்கைகள், குருந்துவத்த மற்றும் கிளை வீதிகள்

7 **மார்ச் 20 பி.ப. 4.00 முதல் பி.ப. 5.00 வரை**

பலதொட்ட வீதியில் நாகொட சந்தியிலிருந்து இபோச டிப்போ வரை, நாகொட வீதி, அரலிய வீதி, ஹீனட்டியகல வீதி, செத்சிறிபுர, சோபித்தாராம வீதி, எட்டவில வீதி (பகுதி), மயூரா பிளேஸ், டவுண் வூட் மற்றும் கிளை வீதிகள்

8 **மார்ச் 27 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதி தலுவத்த சந்தியிலிருந்து எத்தகம வரை, எத்தகம, சுமணாராம வீதி, சாந்த மரியா மாவத்தை, ஜய மாவத்தை, நைனாவத்த, பயாகல வடக்கு ஸ்டேஷன் வீதி, கோல்டன் பிளேஸ், விகார கந்த, மலேகொட வீதி, சமுத்ரா மாவத்தை, ஜனத்தா மாவத்தை, ஜனப்பிரிய மாவத்தை, சென் அந்தனீஸ் மாவத்தை, சாகர மாவத்தை, சுவதாரச்சிமுல்ல, ஜனப்பிரபோத மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

9 **மார்ச் 27 பி.ப. 4.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் சனச மாவத்தையிலிருந்து எத்கம வரை, தர்மோதய மாவத்தை, கொந்தேருப்பரங்கியவத்த, கொன்வன்ட் வீதி, ஜனப்பிரபோத மாவத்தை, ஜுசேவஸ்பிய பெதெச, ஆர்தர் குணதிலக்க மாவத்தை, பழைய விமானநிலைய வீதி, ரோயல் பார்ம் திட்டம், பாத்திமா மாவத்தை, ரிதீ மாவத்தை, கலமுல்ல, தீவர நிவாச, வடுகொட வீதி, ஜயவர்தனாராம வீதி மற்றும் கிளை வீதிகள்

### அலுத்கம

1 **மார்ச் 04 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

தீனகொட, தர்கா வீதி, ஜாபீர் மாவத்தை (பகுதி), நளீம் ஹாஜியார் மாவத்தை, நவுபர் மாவத்தை, பிட்டவெல வீதி, பன்வில வீதி, குருந்துவத்த வீதி, அம்பென்பிட்டிய, பின்ஹேன, கருணாசேனபுர, வெதகொட வீதி, கனேராப வீதி, தெனிய – வலதர மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 04 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

தீனகொட, தர்கா வீதி, ஜாபீர் மாவத்தை (பகுதி), நளீம் ஹாஜியார் மாவத்தை, நவுபர் மாவத்தை, பிட்டவெல வீதி, குருந்துவத்த வீதி, அம்பென்பிட்டிய, பின்ஹேன, கருணாசேனபுர, வெதகொட வீதி, கனேராப வீதி, தெனிய – வலதர, பேருவளை நகரம், சுங்க வீதி (பகுதி), சீனன் கோட்டை, பெரேரா மாவத்தை, சென். ஆன்ஸ் வீதி, கல்பொத்த வீதி, கன்னங்கொட காலி வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

### மொரட்டுவ

1 **மார்ச் 13**

புதிய காலி வீதி (பகுதி), வொட்சன் பீரிஸ் மாவத்தை, ஸ்டேஷன் வீதி, டி மெல் ஒழுங்கை, வீரபுரன்னப்பு ரஜ மாவத்தை, கோல்விஸ் மாவத்தை, உஸ்வத்த 1ம் மற்றும் 2ம் ஒழுங்கைகள், உஸ்வத்த சேர்கியுலர் வீதி, மொரட்டுவெல்ல, பிரன்சிஸ்கோ ஒழுங்கை, செபஸ்தியன் மாவத்தை, முராவத்த, பிரேசர் மாவத்தை, பர்னாந்து மாவத்தை, தெல்கஹவத்த, சென் பீட்டர்ஸ் வீதி மற்றும் ஒழுங்கை, 1ம் மற்றும் 2ம் ஒழுங்கைகள், பி.எம். பர்னாந்து மாவத்தை, பி.எம். பர்னாந்து மாவத்தை 2ம், 3ம், 4ம், 5ம் மற்றும் 6ம் ஒழுங்கைகள் மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 13 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதி (பகுதி), பீரிஸ் மாவத்தை, டி மெல் மாவத்தை, கே.ஜே.ஏ. டி சில்வா மாவத்தை, ஸ்டேஷன் வீதி (பகுதி), பெனாண்டோ பிளேஸ், மொரட்டுவெல்ல 1ஆம் ஒழுங்கை, பிரேசர் ஒழுங்கை, 1ஆம் ஒழுங்கை, செபஸ்தியன் மாவத்தை, டி மெல் ஒழுங்கை (பகுதி), தொட்டுபொல மாவத்தை, மொரட்டுவ பிரதான வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 15 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**

காலி வீதியில் கட்டுபெத்தயிலிருந்து ராவதாவத்த சந்தி வரை, குடுவாமுல்ல வீதி, ரொல்லி பெர்னாண்டோ மாவத்தை, கட்டுபெத்த வீதி, ஜுபிலி வீதி, 4ம் ஒழுங்கை ராவதாவத்த, தர்மரத்ன மாவத்தை மற்றும் அவென்யூ, வேலுவனாராம வீதி, அந்திரிஸ் சில்வா மாவத்தை, ராவதாவத்த பள்ளியகொடல்ல மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 15 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**

பொல்கொட்டுவ வீதி, கோமஸ் பிளேஸ், ஆனந்தாராம வீதி, போதிருக்காராம வீதி, ராவதாவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 21**

அங்குலான கடற்கரை வீதி, லுனாவ வீதி, பஹினதொட்டுபொல வீதி, ராவதாவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

6 **மார்ச் 21 பி.ப. 3.00 முதல் பி.ப. 5.00 வரை**

மொரட்டுமுல்ல பிளேஸ், பிரேமரத்ன வீதி (பகுதி) ஆனந்தாராம வீதி (பகுதி), ஜயசிரி மாவத்தை, சொய்சா வீதி, ஹேனவத்த வீதி, ஆரியவன்ச மாவத்தை (பகுதி), ரோசமல்கொட்டுவ வீதி, ஜோன் டி சில்வா வீதி, தபசராம வீதி மற்றும் கிளை வீதிகள்

### கெசெல்வத்த

1 **மார்ச் 06 பி.ப 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

சந்திரவக்க வீதி, தொட்டுபொல வீதி, சுகந்த ஒழுங்கை, சமகி மாவத்தை, சாவியா வீதி, அஜ்மீர் மாவத்தை, பாசெல் மாவத்தை, காலி வீதியில் பள்ளிமுல்ல சந்தியிலிருந்து சரிக்கமுல்ல சந்தி வரை, ஆதம் பொரஸ்ட் (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 06 பி.ப 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

புதிய காலி வீதி (பகுதி), சென்திரிக் பிளேஸ், ஜய மாவத்தை, சென் மேரிஸ் வீதி, கட்டுகுருந்த வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 13**

மோதர வீதி, கொரலவெல்ல 1ம், 2ம், 3ம், 4ம் மற்றும் 5ம் ஒழுங்கைகள், குணவர்தனாராம வீதி, பெர்னாண்டோ மாவத்தை, பிரேசர் அவன்யூ, மொரட்டுவெல்ல, 1ம் ஒழுங்கை, சென் பீட்டர்ஸ் வீதி மற்றும் ஒழுங்கை, பிரான்சிஸ்கோ மாவத்தை, ஜனஜய மாவத்தை, மகவிதான ஒழுங்கை, தூவவத்த, ஹேர்பர்ட் டி மெல் மாவத்தை, கங்கசிரிபுர, கொரல்லவெல்ல வீதி, சிறியா பிளேஸ், சுசன்த சிறிரத்ன மாவத்தை, ரிவர் சைட் கார்டன்ஸ், கொரனேலிஸ் பிளேஸ், சென் மைக்கல் ஜுபிலி வீதி, கடற்கரை வீதி, புகையிரத நிலைய வீதி, சந்திரா மாவத்தை, தீவரநிவஸ பிளேஸ், மேபெயார் கார்டன்ஸ், ஆசிரி பிளேஸ், பாடசாலை ஒழுங்கை, போதி மாவத்தை, ஜனதா மாவத்தை, எம்.ஈ. பெரேரா மாவத்தை, சமாஜவேதி நிவச பிளேஸ், கொரலவெல்ல, கங்க மாவத்தை, 6ஆம் ஒழுங்கை, சிரமதான மாவத்தை, கொன்ஸ்டன்டைன் ஒழுங்கை, டி மெல் ஒழுங்கை, ஜனப்பிரிய மாவத்தை, விளையாட்டு மைதான வீதி, மோசஸ் ஒழுங்கை, சத்தர்மோதய மாவத்தை, மகாநுகசெவன வீதி, ஜோசப் பிளேஸ், தஹம் செவன மாவத்தை, கட்டுகுருந்த வீதி மற்றும் கிளை வீதிகள்

### பாணந்துறை

1 **மார்ச் 11**

கவிராஜ மாவத்தை (பகுதி), சல்காது மாவத்தை, வோல்டர் சல்காது மாவத்தை, கல்தேராமடுவத்த, சத்தானந்த மாவத்தை, சுதுவெல்ல வீதி, பாதலிகுருக்கம வீதி, பின்வல வீதி, பஹன்கம, தீரானந்த மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

### நுகேகொட

1 **மார்ச் 07 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

பழைய கெஸ்பாவ வீதி (பகுதி), விமலாவத்த வீதி, செப்பல் வீதி (பகுதி), மிரிஹான வீதியில் கட்டிய சந்தியிலிருந்து ஜுபிலி போஸ்ட் சந்தி வரை மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 12 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

பெங்கிரிவத்த வீதி மற்றும் ஒழுங்கை, எதிரிசிங்க வீதி, பழைய கெஸ்பாவ வீதி (பகுதி), சோமா தலகல மாவத்தை, 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள் மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 26 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

பெப்பிலியான வீதி (பகுதி), சுபத்ராராம வீதி, ஹைலெவல் வீதி (பகுதி), கன்சபா சந்தி, சிறில் டி சில்வா மாவத்தை, ஹைலெவல் வீதி (பகுதி), ஜம்புகஸ்முல்ல வீதி, 01ஆம், 02ஆம் ஒழுங்கைகள், ஜம்புஸ்முல்ல மாவத்தை, 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் ஒழுங்கைகள் மற்றும் கிளை வீதிகள்

### மஹரகம

1 **மார்ச் 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

பத்திராகொட வீதி, நாலந்தாராம வீதி, ஜயகத் மாவத்தை, வெல வீதி, சமாஜ வீதி, ஜனதா மாவத்தை, விகாரவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

### பொரலெஸ்கமுவ

1 **மார்ச் 19 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

கொழும்பு வீதியில் ஜீ. எச். பெரேரா மாவத்தை, பழைய கெஸ்பாவ வீதி, ரத்தினபிட்டிய வீதி (பகுதி), 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், கொவிகம பிளேஸ், பெரேரா மாவத்தை, திவுல்பிட்டிய மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 20 மு.ப. 9.00 முதல் பி.ப. 5.00 வரை**

அபேரத்ன மாவத்தை, மயான வீதி, பிட்டவல வீதி, 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், அம்பவத்த, கொழும்பு - பிலியந்தலை வீதி (பகுதி), பாசெல் மாவத்தை (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 21 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

கெம்பஸ் வீதி, ஜீ.எச். பெரேரா மாவத்தை, ரத்தனபிட்டிய 1ஆம் ஒழுங்கை, பழைய கெஸ்பாவ வீதி (பகுதி), சோதர மாவத்தை (பகுதி), ஸ்ரீ பேமானந்த மாவத்தை, டெம்பள் வீதி, மெத்செவன மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 27 ந.ப. 12.00 முதல் பி.ப. 2.00 வரை**

பாசெல் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

### பிட்டகோட்டே

1 **மார்ச் 07 பி.ப. 1.00 முதல் பி.ப. 4.00 வரை**

நாவல வீதி (பகுதி), சுவர்ணா பிளேஸ், 4ஆம் மற்றும் 6ஆம் ஒழுங்கைகள், ரொட்ரிகோ மாவத்தை, கிரிமண்டல மாவத்தை, சுதர்ஷண மாவத்தை, லியனகே மாவத்தை, கல்பொத்த வீதி, வளவ்வத்த பிளேஸ், அரலிய கார்டன்ஸ், மில்லகஹவத்த, நாவல பாடசாலை ஒழுங்கை, ரத்னஜோதி மாவத்தை, குணசேக்கர கார்டன்ஸ் மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 10 பி.ப 12.00 முதல் பி.ப. 5.00 வரை**

கோட்டை வீதியிலிருந்து எத்துல்கோட்டை சந்தி வெலிக்கடை, சந்தி வரை, பும்கமுவ வீதி, பழைய கோட்டை (பகுதி), குறே மாவத்தை, ஆட்டிகல மாவத்தை, பார்க் லேன் (பகுதி), வெலிக்கடை சந்தி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 10 பி.ப 12.00 முதல் பி.ப. 5.00 வரை**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர வீதியிலிருந்து எத்துல்கோட்டை சந்தியிலிருந்து வெலிக்கடை சந்தி, றோயல் கார்டன் மற்றும் கிளை வீதிகள்.

4 **மார்ச் 21**

ராஜகிரிய வீதி (பகுதி), ராஜகிரிய 4ஆம் ஒழுங்கை, ஸ்டீவன் மாவத்தை, மொரகஸ்முல்ல வீதி மற்றும் ஒழுங்கை, மொரகஸ்முல்ல பீரிஸ் மாவத்தை, மொரகஸ்முல்ல குரே மாவத்தை, அருனோதய மாவத்தை, நவ கொலன்னாவ வீதி, புதிய கொலன்னாவ வீதி (பகுதி), ஒபேசேக்கரபுர, வஜிரவன்ச மாவத்தை, விளையாட்டு மைதான வீதி, தம்மசாலாவ வீதி, நாணாயக்கார மாவத்தை, கோத்தமி பிளேஸ், வைசகெட்டிய மாவத்தை, ஸ்கந்த தேவால வீதி, கோமஸ் பிளேஸ், ஆசிரி உயன, கோட்டே வீதி (பகுதி), யூ.ஈ. பெரேரா மாவத்தை, 4ஆம் ஒழுங்கை, வேலுபுள்ளிவத்த, சேரம் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 27 பி.ப. 1.00 முதல் பி.ப. 4.00 வரை**

நாவல வீதி (பகுதி), நுவரவத்த வீதி, சேனாநாயக்க மாவத்தை, கஹனேந்திர மாவத்தை, பழைய வீதி, 5ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் ஒழுங்கைகள் மற்றும் கிளை வீதி

6 **மார்ச் 27 பி.ப. 1.00 முதல் பி.ப. 4.00 வரை**

நாவல வீதி (பகுதி), கஹனேந்திர மாவத்தை, பழைய வீதி, சேனாநாயக்க மாவத்தை மற்றும் அவென்யூ, 2ஆம் ஒழுங்கை, 8ஆம் ஒழுங்கை, நாராஹென்பிட்டி வீதி, ஜஸ்மின் கார்டன்ஸ், வால்டர் குணசேக்கர மாவத்தை, 5ஆம் மற்றும் 7ஆம் ஒழுங்கைகள் மற்றும் கிளை வீதிகள்

### கொலன்னாவ / வெல்லம்பிட்டிய

1 **மார்ச் 18 பி.ப. 1.00 முதல் பி.ப. 4.00 வரை**

விஹார மாவத்தை, மீத்தொட்டமுல்ல, மீத்தொட்டமுல்ல வீதி, விகார மாவத்தை (பகுதி), கொலன்னாவ வீதி (பகுதி), அவிசாவளை வீதியில் மீத்தொட்டமுல்ல சந்தியிலிருந்து வெள்ளம்பிட்டிய சந்தி வரை, விஹார மாவத்தை (பகுதி), கொலன்னாவ வீதி (பகுதி), நாகஹவத்த, புவக்கஹவத்த (பகுதி), தொஸ்தரவத்த, கலன்சூரியவத்த, வெல்லம்பிட்டிய சந்தி, சங்கபோதி மாவத்தை, குமாரதாச பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

### கொட்டிகாவத்த

1 **மார்ச் 13**

கொட்டுவேகொட, கலபலுவாவ வீதி, நெலும் பிளேஸ், கலபலுவாவ 1ம் ஒழுங்கை, மதின்னாகொட, எம்.டி.எச்.ஜயவர்தன மாவத்தை, எல்ஹேன, பண்டாரநாயக்கபுர (பகுதி), மகாநியர, காரியவசம் பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 13 பி.ப. 1.00 முதல் பி.ப. 4.00 வரை**

தொடங்கஹஹேன, பண்டாரநாயக்கபுர மற்றும் கிளை வீதிகள்

### பேலியகொட / வத்தளை

1 **மார்ச் 11 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

நீர்கொழும்பு வீதியில் மாபோல டயஸ் அன்ட் டயஸ் தொழிற்சாலையிலிருந்து சமரசிங்க எண்ணெய் ஆலை வரை, விஜய வீதி, பேர்சி டயஸ் மாவத்தை, மரினா கார்டன்ஸ் மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 12 ந.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**

பியகம வீதியில் 4ஆம் மைல் கல் முதல் கெமுனு மாவத்தை வரை, தொட்டுபொல வீதி, குருகுல அனே, ஹக்குருபிட்டிய வீதி, கெமுனு மாவத்தை (பகுதி), திஸ்ஸ மாவத்தை, ஸ்டேஷன் வீதி, பண்டாரநாயக்க மாவத்தை, புள்ளிமதாம பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 13 ந.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**

அட்டம்பொலவத்த, நைதுவ, பங்களாவத்த, அல்பர்ட் பீரிஸ் மாவத்தை, பரணவத்த மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 18 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

நீர்கொழும்பு வீதியில் மாபோலயிலிருந்து ஹெந்தலை சந்தி வரை, ஹெந்தலை வீதி (பகுதி), குணசேக்கர ஒழுங்கை, முத்துராஜ மாவத்தை, வரலத்துடுவ வீதி, வெலிக்கடமுல்ல வீதி, குணதிலக்க மாவத்தை, ராஜசிங்க வீதி, கெட்டியவத்த, பாத்திமா வீதி, தங்கனத்த வீதி, நாமல் உயன, ஹெந்தலை சந்தி, ஆரச்சிவத்த, தூவவத்த மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 27 ந.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**

பழைய நீர்கொழும்பு வீதி (பகுதி), ஜோன்புள்ளி வத்த, வின்சன்ட் ஜோசப் மாவத்தை, ஹெந்தலை சந்தி மற்றும் கிளை வீதிகள்

### கந்தான

1 **மார்ச் 11 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

நீர்கொழும்பு வீதியில் கலுதுபிட சந்தியிலிருந்து சமரசிங்க எண்ணெய் ஆலை வரை, பராக்கிரம வீதி, புலினதலராம வீதி, சிங்ஹ வீதி, ஜோர்ஜ் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2. **மார்ச் 15 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

நீர்கொழும்பு வீதியில் கலுதுபிட சந்தியிலிருந்து அடிவிஸ்ஸ வீதி சந்தி வரை, குணசேக்கர மாவத்தை, பண்டாரநாயக்க மாவத்தை, புனித மரியா மாவத்தை, லங்காமாதா மாவத்தை, மஹபாகே சந்தி, மஹபாகே – ராகம வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

### மஹர

1 **மார்ச் 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

ஹீன்கந்த வீதி, வத்தளை – மஹர வீதி தலுப்பிட்டிய பாலத்திலிருந்து மஹர சந்தி வரை, புனித அந்தனீஸ் மாவத்தை, ஜயகத் மாவத்தை, ஆசிரி மாவத்தை, மிஹிந்து மாவத்தை, செக்குவத்த, கோப்பிவத்த வீதி, ஸ்ரீ நிக்கேத்தாராம வீதி, இல்லகஹவத்த மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 13 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

கண்டி வீதி (பகுதி), கிரிபத்கொட சந்தி, கோண்கஹவத்த வீதி, பிரின்ஸ் ஒழுங்கை, மாகொல வீதி, கெமுனு மாவத்தை, பாத்திய மாவத்தை, பாத்திமா மாவத்தை, தெம்பிலிகஸ்முல்ல மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 20**

குருகுலாவ வீதி (பகுதி), சிறிவர்தன வீதி, பஹலவத்த வீதி, சீவளி மாவத்தை, தெல்பே சந்தி, ராகம வீதி (பகுதி), சிறைச்சாலை வீதி, சதஹம் மாவத்தை, ரத்னபால மாவத்தை, ராகம வீதியில் தெல்பே சந்தியிலிருந்து தேவானந்த வீதி வரை, TC வீதி, பியதிஸ்ஸ மாவத்தை, விஹார மாவத்தை, மங்கள மாவத்தை, நெலிகம, பஹல கரகஹமுன, ராகம – கடவத்தை வீதி (பகுதி), கிரிமெட்டியாகார வீதி, ஆசிரி மாவத்தை, பஹல கரகஹமுன, சாந்தி மாவத்தை, மெத வீதி (பகுதி), டெம்பள் வீதி, சென் அந்தனீஸ் மாவத்தை, கல்ரோத வீதி, கலேதன்ட வீதி, ஜயசிங்க வீதி, மிதுருகெலே மாவத்தை, கோப்பியவத்த, கோப்பியவத்த வீதி, கம்மெத வீதி மற்றும் கிளை வீதிகள்

### ஜா-எல

**1 மார்ச் 07 மு.ப. 9.00 முதல் பி.ப. 1.00 வரை**

உடமிட்ட வீதி, அலவத்துபிட்டிய வீதி, குடா ஹகபொல வீதி, உடமிட்ட மாவத்தை வீடமைப்புத் திட்டம், குருசேவத்த வீடமைப்புத் திட்டம் மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 07 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

நீர்கொழும்பு வீதியில் துடெல்லயிலிருந்து தண்டுகம பாலம் வரை, வஹட்டியகம (பகுதி), தண்டுகம, கமகே வெல்ல வீதி, அல்பர்ட் பெரேரா மாவத்தை, சிங்கள வீதி, தேவால வீதி, தெஹியகத்த, உடமிட்ட வீதி, அலவத்துபிட்டிய வீதி, குடா ஹக்பொல வீதி, உடமிட்ட, மஹவத்த வீடமைப்புத் திட்டம், குருசேவத்த வீடமைப்புத் திட்டம் மற்றும் கிளை வீதிகள்

### சீதுவ

**1 மார்ச் 13 மு.ப. 9.00 முதல் பி.ப. 5.00 வரை**

நீர்கொழும்பு வீதியில் நட்டாலியவிலிருந்து 18ஆம் மைல் கல் வரை, டெம்பள் வீதி, லியனகேமுல்ல, கடோல்கெலேவத்த, மயான வீதி, அரலிய மாவத்தை, தர்ஷன மாவத்தை, கடோல்கெலே வீதி, லயன் சிட்டி, சேர்ச் வீதி, தெவட்டகஹவத்த, கிராமோதய மாவத்தை, கந்துல மாவத்தை, முகலன்கமுவ, புளூ டயமன்ட் வீதி, குளோபல் சிட்டி மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 21 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

நீர்கொழும்பு வீதியில் தண்டுகம பாலம் முதல் அம்பலமுல்ல வரை, தலகஹவத்த, முனிதாச குமாரதுங்க மாவத்தை (பகுதி), கமமெத வீதி, போதிய வீதி (ரனவிரு மாவத்தை), கிந்திகொட, பெல்லன்வத்த, சியம்பலகஹ வீதி மற்றும் கிளை வீதிகள்

**3 மார்ச் 26 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

சரத் மாவத்தை, வெலபட வீதி, ரொட்ரிகோ மாவத்தை, டபிள்யு.ஏ. டி சில்வா மாவத்தை (பகுதி), அரிசி ஆலை வீதி (பகுதி), நுககஹா வீதி, நீர்கொழும்பு வீதி (பகுதி), ஸ்டேஷன் வீதி, நாயக்க வீதி, வெலபொட வீதி, சுதர்சன மாவத்தை, தீவர மாவத்தை, கட்டுநாயக்க நகரம், செபஸ்தியன் மாவத்தை, கம்மெத வீதி மற்றும் கிளை வீதிகள்

### நீர்கொழும்பு

**1 மார்ச் 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 3.00 வரை**

கொழும்பு - சிலாபம் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 12 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

தெல்துவ வீதி, போலவலான மாவத்தை, கொழும்பு வீதி (பகுதி), போப் போல் மாவத்தை, குயீன் எலிசபெத் மாவத்தை, மல்வத்த வீதி (பகுதி), சென் ஜோசப் வீதி (பகுதி), மினுவங்கொட வீதி, கொழும்பு வீதி (பகுதி), சந்தசரண மாவத்தை, கொன்வன்ட் வீதி மற்றும் கிளை வீதிகள்

**3 மார்ச் 19 மு.ப. 9.00 முதல் பி.ப. 5.00 வரை**

கொழும்பு வீதி (பகுதி), ஜுட் பிளேஸ் (கடோல்கெலே) தலதுவ வீதி (பகுதி), கிறிஸ்டோபர் வீதி, சென் போல்ஸ் வீதி, நாரா வீதி, மிராஜ் வீடமைப்புத் திட்டம், நிக்கலஸ் மார்கஸ் மாவத்தை, அலுத்வத்த, 4ஆம் மற்றும் 5ஆம் ஒழுங்கைகள், கிறிஸ்ட் த கிங் வீதி, ஜோசப் வாஸ் மாவத்தை (பகுதி), பியோ மாவத்தை, கிறீன்ஸ் வீதி (பகுதி), புதிய பஸ் நிலையம் மற்றும் கிளை வீதிகள்

**4 மார்ச் 19 பி.ப. 9.00 முதல் பி.ப. 5.00 வரை**

ஜுட் பிளேஸ், பாதர் பியோ மாவத்தை (பகுதி), கிறிஸ்ட் த கிங் வீதி, ஜோசப் வாஸ் மாவத்தை (பகுதி), பியோ மாவத்தை, கிறீன்ஸ் வீதி (பகுதி), தலதுவ வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

**பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கு இலங்கை மின்சார சபை மற்றும் LECO நிறுவனம் திட்டமிட்டுள்ளதனால் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

### அலுத்கம

**1 மார்ச் 31**

கந்தேவிகார வீதி, தேவால வீதி, வெதமுல்ல வீதி, ஸ்ரீபத்திய வீதி, லோட்டஸ் வீதி, புதிய வீதி, இஸ்னபுள்ளே வீதிஈஸ்ரீ, கருணாரத்ன வீதி, கல்ஹேன வீதி, சாவியா வீதி, ஸாஹிரா வீதி, எஸ்.எம். வீதி, ஷேக் மதாரா வீதி, கடியவத்த வீதி, வெலிப்பிட்டிய, சம்சுதீன் மாவத்தை, தர்கா நகர் மற்றும் கிளை வீதிகள்

### கெசெல்வத்த

**1 மார்ச் 30**

பழைய காலி வீதி (பகுதி), ஸ்ரீ விமலாராம வீதி, ஞானசேன மாவத்தை, குமாரதுங்க முனிதாச மாவத்தை, ஹென்றிக் பீரிஸ் மாவத்தை, விஜய வீதி, பொதுசேவா மாவத்தை, வத்தல்பொல வீதி, சங்கானந்தா வீதி, தொட்டவத்த வீதி, ராசிக் வீதி, இப்றாஹிம் வீதி, யோனக மாவத்தை, கிம்பொத்த வீதி, வத்தல்பொல வெத மாவத்தை, வத்தல்பொல விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள வீதி, மீரியவத்த வீதி, தொட்டுபொல வீதி, மிஹிந்து மாவத்தை, விஜய மாவத்தை, கலீபா வீதி மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 30**

காலி வீதியில் பள்ளிமுல்ல சந்தியிலிருந்து வலான சந்தி வரை, வலான ஸ்ரீநிவச மாவத்தை, குணசேன மாவத்தை, குமாரதுங்க மாவத்தை, ஜுபிலி வீதி, தம்மானந்த மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

### பாணந்துறை

**1 மார்ச் 30**

ஹொரண வீதி (பகுதி), பிரதான தெரு (பகுதி), கிறேஸ் பீரிஸ் மாவத்தை, குணரத்ன வீதி, தேசசேவா மாவத்தை, சுகத்தாமக, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, நிமல மாவத்தை, நொயெல் மெண்டிஸ் மாவத்தை, ஸ்ரீ மேத்தாநந்த மாவத்தை (பகுதி), உயன்கெலே வீதி, உயன்கெலே குறுக்கு வீதி, த சொய்சா வீதி (பகுதி), ஜனப்பிரிய மாவத்தை (பகுதி), ஜயதிலக்க மாவத்தை (பகுதி), மார்கட் வீதி, தர்மசாலாவ வீதி, சாகர மாவத்தை, ஒருவல வீதி, ஆர்.எஸ். பர்னாந்து மாவத்தை, குணானந்த வீதி, சொய்சா வீதி (பகுதி), கோவிலவத்த வீதி, லியோ பெர்னாண்டோ மாவத்தை, மகாநாம வீதி, கங்கா மாவத்தை, சமந்த மாவத்தை, வீரசிங்க ஒழுங்கை, சிறில் ஜேன்ஸ் மாவத்தை (பகுதி), சுசந்த மாவத்தை (பகுதி), தேசசேவா மாவத்தை, ஆர்தர் வீ டயஸ் மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 30**

ஹொரன வீதி (பகுதி), ஸ்ரீ மகா விகார வீதி, பொன்சேக்கா பிளேஸ், 7ம் குறுக்குத் தெரு, ஜனப்பிரிய மாவத்தை, பொன்சேக்கா வீதி, டயஸ் இடம், ஆரியரத்னாராம வீதி, வலபொல வீதி, 7ம் குறுக்கு வீதி, பெர்னாண்டோ வீதி, சொலமன் மாவத்தை, பண்டாரநாயக்க மாவத்தை, ஜனஉதானகம்மானய, அரசாங்க வீடுகள், ஜோதிரத்ன மாவத்தை, சந்திரசேகர மாவத்தை, ஜயஜன மாவத்தை, உபசேன மாவத்தை, எட்டபாகொட, மிஹிந்து மாவத்தை, சாந்தி மாவத்தை, சின்சபா மாவத்தை, குருப்புமுல்ல வீதி, பொக்குண வீதி, பஹன்கம, ஹாமுகேவத்த, கோன்கஹவத்த மற்றும் கிளை வீதிகள்

### நுகேகொட

**1 மார்ச் 22**

தலவத்துகொட வீதி (பகுதி), குருந்துவத்த வீதி, ரஜமஹாவிகார வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 22**

கோட்டே வீதி (பகுதி) ஸ்டென்லி திலக்கரத்ன மாவத்தை (பகுதி), ஜுபிலி போஸ்ட், எக்வத்த வீதி, ஜயமங்கள வீதி, நாகவிகார வீதி, ரஜ மாவத்தை (பகுதி), தேவால வீதி, பழைய கொட்டாவ வீதி, ஜொஸ்வெல் பிளேஸ், பெங்கிரிவத்த வீதி, குவாரி வீதி, எதிரிசிங்க வீதி, 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், விமலாவத்த வீதி, விவேகாராம வீதி, விஜேசேக்கர மாவத்தை, பெங்கிரிவத்த வீதி (பகுதி), ரூப்பசிங்க மாவத்தை, ரூப்பசிறி மாவத்தை, மயான வீதி, புவனேகபா மாவத்தை, பெங்கிரிவத்த 2ஆம் மற்றும் 3ஆம் ஒழுங்கைகள் மற்றும் கிளை வீதிகள்

### மஹரகம

**1 மார்ச் 15**

ஹைலெவல் வீதி (பகுதி), பொரளை வீதி (பகுதி), வேரகெட்டிய வீதி, ரெயில்வே அவன்யூ, பன்னிப்பிட்டிய பழைய வீதி, கம்மான வீதி, கந்தேவத்த, மயான வீதி, அரவ்வல வீதி, சில்வா மாவத்தை, கந்தவல வீதி, ஆனந்த மைத்திரி மாவத்தை, வீர மாவத்தை, செத்சிறி பிளேஸ், கந்தெனவத்த வீதி, பிரகத்தி மாவத்தை, வீர மாவத்தை, பொரளை வீதி, எக்சத் மாவத்தை, பன்னிப்பிட்டிய மயான வீதி, அம்பகஸ்ஹத்தர சந்தி மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 15**

ஹைலெவல் வீதி (பகுதி), பழைய வீதி (பகுதி), பமுனுவ வீதி (பகுதி), மகமெகாவத்த, வேரகெட்டிய வீதி, டெம்பள் வீதி (பகுதி), ரெயில்வே மாவத்தை, ஸ்டேஷன் வீதி, விவேகாராம மாவத்தை, பிலியந்தலை வீதி, மங்கள மாவத்தை, மஹரகம டெம்பள் வீதி, தம்பஹேன வீதி, கிரஹம்ரக் பிளேஸ், அஸார் பிளேஸ் (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

**3 மார்ச் 15**

பமுனுவ வீதி, எக்சத் சுபசாதக்க வீதி, 3ஆம், 4ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் ஒழுங்கைகள், தேவால வீதி, விதான வீதி, மாதியகஹவத்த, சந்தன கார்டன்ஸ், தெல்கஹவத்த, நாகஹவத்த வீதி, ஜயந்தி மாவத்தை மற்றும் ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

**4 மார்ச் 15**

ஹைலெவல் வீதி (பகுதி), பழைய வீதி (பகுதி), தெஹிவளை வீதி (பகுதி), விபக்ஸாராம வீதி, வீரக்கொடி மாவத்தை, வித்யாகார மாவத்தை, நல்லவத்த வீதி, யஹம்பத் மாவத்தை, பிலியந்தலை வீதி, நல்லவத்த வீதி (பகுதி), மங்கள மாவத்தை, ஷிரோமினி மாவத்தை, நுககஹா பிளேஸ், கொஹிலகொட்டு வீதி (பகுதி), வீதியபண்டார வீதி, நீலம் மஹர வீதி, சுது மாவத்தை, ஜய மாவத்தை, மீகஹவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

**5 மார்ச் 22**

விஜேராம வீதி மற்றும் ஒழுங்கை, பழைய கொட்டாவ வீதி (பகுதி), உடஹமுல்ல ஸ்டேஷன் வீதி, விஜேராம சந்தி மற்றும் கிளை வீதிகள்

**6 மார்ச் 22**

ஜய வீதி, பழைய கொட்டாவ வீதி (பகுதி), சமகி மாவத்தை (பகுதி), கசகஹவத்த, சந்தனாபிட்டிய வீதி, மாதிவல வீதி (பகுதி), சலாவ வீதி, போதிய வீதி, பிரகத்திபுர, தர்மரத்ன மாவத்தை, மஹவத்த வீதி, தெல்கஹவத்த, ஸ்ரீ ராகுலபுர, வெல்சிரிபுர, பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதி கட்டிடத் தொகுதி, லிங்க் வீடமைப்புத் திட்டம், அமரதுங்க மாவத்தை, ஜய மாவத்தை, சல்மல் பிளேஸ், தலபத்பிட்டிய மயான வீதி, 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் ஒழுங்கைகள், அருண மாவத்தை, சந்திராலோக்க மாவத்தை, குருந்த மாவத்தை, தலபத்பிட்டிய வீதி (பகுதி), டெம்பள் வீதி, கிராமோதய மாவத்தை, ஒபஹேன வீதி, சிகேரா மாவத்தை, கொரனேலிஸ் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

**7 மார்ச் 22**

கும்புக்கஹபொக்குன வீதி, வெட்டகியாவல வீதி, தலபத்பிட்டிய வீதி (பகுதி), டெம்பள் வீதி, புதிய வைத்தியசாலை வீதி (பகுதி), தலவத்துகொட வீதி (பகுதி), சுபத்ரா மாவத்தை, விஜய பிளேஸ், சுஹத மாவத்தை, தஹம் மாவத்தை, கிம்புலாவெல, ஒபஹேன வீதி, சிகேரா வீதி, கிராமசங்வர்தன மாவத்தை, மாதிவெல வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

### கொலன்னாவ / வெல்லம்பிட்டிய

**1 மார்ச் 07**

மீத்தொட்டமுல்ல வீதி, பெரேரா மாவத்தை, வடுகொடவத்த, பன்சல்ஹேன (பகுதி), பன்சல்ஹேன வீடமைப்புத் திட்டம், விகார மாவத்தை, மீத்தொட்டமுல்ல சந்தி மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 28**

அவிசாவளை வீதியில் வெல்லம்பிட்டிய சந்தியிலிருந்து புத்கமுவ வரை, அம்பகஹாவத்த வீதி, பிரண்டியாவத்த, மெகொட கொலொன்னாவ, வென்னவத்த, கொட்டுவில (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

### பேலியகொட / வத்தளை

**1 மார்ச் 28**

புதிய நுகே வீதி, துட்டுகெமுனு மாவத்தை (பகுதி), கண்டி வீதியில் நுகே வீதி சந்தியிலிருந்து புதிய களனி பாலம் வரை, சுவஸ்திக்கா கார்டன்ஸ், பழைய நுகே வீதி, நெக்ரோதராம வீதி, தெல்கடேவத்த, பராக்கிரம வீதி, பராக்கிரம மாவத்தை, நீர்கொழும்பு வீதியில் புதிய களனி பாலத்திலிருந்து பேலியகொட புதிய நுகே வீதி சந்தி வரை, பியகம வீதியில் 4ஆம் மைல் கல் முதல் கெமுனு மாவத்தை வரை, தொட்டுபொல வீதி, குருகுல அனே, ஹக்குருபிட்டிய வீதி, கெமுனு மாவத்தை (பகுதி), திஸ்ஸ மாவத்தை, ஸ்டேஷன் வீதி, பண்டாரநாயக்க மாவத்தை, புள்ளிமதாம பிளேஸ், ரஞ்சனி விமலாராம வீதி, அசோகாராம மாவத்தை, முருகன்வத்த, பட்டிய சந்தி, ஸ்டேஷன் வீதி, களனிதிஸ்ஸ மாவத்தை, கே. ஜீ. பீரிஸ் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 28**

துட்டுகெமுனு வீதி மற்றும் ஒழுங்கை, புதிய நுகே வீதி, பழைய நுகே வீதி, நீர்கொழும்பு வீதி (பகுதி), மீகஹவத்த வீதி, மிரிஸ்வத்த ஒழுங்கை, ஸ்ரீ ஞானரத்ன மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

**3 மார்ச் 28**

நீர்கொழும்பு வீதியில் புதிய நுகே வீதி சந்தியிலிருந்து வத்தளை டொயோட்டா லங்கா வரை, துட்டுகெமுனு மாவத்தை (பகுதி), UDA வீடமைப்புத் திட்டம், கொடக்கதுருவத்த, தெலங்கபாத்த வீதி (பகுதி), ஸ்ரீ விக்கிரம மாவத்தை, வெலி பார, விமலா சிறிவர்தன மாவத்தை, கல்யாணி மாவத்தை மற்றும் ஒழுங்கை (பகுதி), ஒலியமுல்ல, ஸ்ரீ சுபத்ராராம வீதி, பேர்ள் பார்க், சென் மேரிஸ் வீதி, டெம்பள் வீதி (பகுதி), சென் செபஸ்தியன் வீதி மற்றும் கிளை வீதிகள்

**4 மார்ச் 28**

எவரிவத்த வீதி, கல்யாணி மாவத்தை (பகுதி), சேர்ச் வீதி மற்றும் ஒழுங்கை, மற்றும் கிளை வீதிகள்

**5 மார்ச் 28**

தெலங்கபாத்த வீதி, கல்யாணி மாவத்தை, மீகஹவத்த, சுதர்மாராம வீதி மற்றும் கிளை வீதிகள்

### களனி

**1 மார்ச் 28**

திப்பிட்டிகொட வீதியில் கண்டி வீதி சந்தியிலிருந்து ஜயந்தி மஹால் சந்தி வரை, சுதர்மா வீதி, திப்பிட்டிகொட 1ஆம் குறுக்குத் தெரு மற்றும் கிளை வீதிகள்

**2 மார்ச் 28**

கண்டி வீதியில் புலுகஹ சந்தியிலிருந்து சுவர்ணமஹால் சந்தி வரை, பிரான்சிஸ் ஒழுங்கை (பகுதி), கெம்பஸ் வீதி மற்றும் கிளை வீதிகள்

**3 மார்ச் 28**

மானெல்கம வீடமைப்புத் திட்டம், ஜம்புகஹவத்த, கோட்டாபய மாவத்தை, சுதர்மா வீதி, தெல்கஹவத்த, வனவாசல வீதி, வனவாசல, ஹன்சர் டவுண், களனிதிஸ்ஸ மாவத்தை, பொசொன்வத்த, சேபாலிக்கா வத்த மற்றும் கிளை வீதிகள்

**4 மார்ச் 28**

கண்டி வீதியில் புலுகஹ சந்தியிலிருந்து தொரண சந்தி புகையிரதக் கடவை வரை, கனேகொடவத்த, ஹிம்புட்டுவெல்கொட (பகுதி), கொடகரப்புவத்த, நாரம்மினிய வீதி (பகுதி), வெரலுகஹவத்த மற்றும் கிளை வீதிகள்

### மஹர

**1 மார்ச் 16**

கண்டி வீதியில் மஹர சந்தியிலிருந்து கிரிபத்கொட பாலம் வரை, எக்சத் மாவத்தை, சிறிமாய பண்டாரநாயக்க மாவத்தை, பங்களாவத்த, ஜினசேன மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

### ஜா-எல

**1 மார்ச் 14**

நீர்கொழும்பு வீதியில் துடெல்ல சந்தியிலிருந்து ஜா-எல கொமர்ஷல் வங்கி வரை, பழைய நீர்கொழும்பு வீதி, மினுவங்கொட வீதி, கம்மெத்த வீதி, சென் சேவியர் வீதி, சென் மேரிஸ் வீதி, கபலகந்த வீதி, கந்தேவத்த வீதி, பிலிப் பெரேரா மாவத்தை, ஜா-எல நகரம் (பகுதி), பழைய நீர்கொழும்பு வீதி (பகுதி), ரத்நாயக்க பங்களாவ வீதி, கிறிஸ்ட் த கிங் வீதி மற்றும் கிளை வீதிகள்.

**2 மார்ச் 14**

பமுனுகம வீதி (பகுதி), கொன்வன்ட் வீதி, சென் மேரிஸ் வீதி, வீதி பாதை, வஹாட்டியகம, ஜயபிரேமி மாவத்தை, வெலிஹிந்த வீதி, சிரமதான மாவத்தை, வெலன்டைன் பெரேரா மாவத்தை, நெலும்வில வீதி, ரொஜஸ் மாவத்தை, ஹீன் எல வீதி, கஜுகஸ்கொடெல்ல, கம்மெத வீதி, தாரகுலிய வீதி, மோதரவிலகொட, நிதஹஸ் மாவத்தை, கலஎலிய வீதி, சுதுவெல்ல வீதி, செபஸ்தியன் பெரேரா மாவத்தை, பீரிஸ் பெரேரா மாவத்தை, மடு சேர்ச் வீதி, மில் வீதி, சுவர்ணஹன்ச விலா, நெலும்வில வீதி, தண்டுகம்பெருவ, தீப்பிகாகம, போதிராஜ மாவத்தை, இந்தெவிட்டிய, இந்தெவிட்டிய வீதி, லேக் சிட்டி, பிரஜாமாதால வீதி, ரணசிங்க வீதி, கெனல் வீதி, சேர்கியுலர் வீதி, முல்லவத்த, வேவல சேர்ச் வீதி, வேவல மயான வீதி, சென் ஜோசப் வாஸ் மாவத்தை, சுகந்த மாவத்தை, ஜுபிலி மாவத்தை, சென் திரேசா மாவத்தை, சென் சேவியர் வீதி, வெலிகம்பிட்டிய வீதி, ரீட்டா மாவத்தை, மஹவத்த வீதி, தொட்டவத்த வீதி, எகொடவத்த, கலஎலிய, சொய்சா வத்த, சென் ஆன் மாவத்தை, சென் அந்தனீஸ் மாவத்தை, எக்கமுத்து மாவத்தை, பாத்திமா பிளேஸ், குளுஹேன, வாசனா பிளேஸ், ஜயசூரிய மாவத்தை, வெலிகுறுதுவத்த, அந்தோனி ஜயவர்தன மாவத்தை, பிரகத்தி மாவத்தை, ஸ்ரீ ஜய மாவத்தை, தொட்டுபொல வீதி, மிஹிந்து மாவத்தை, நெதுருபிட்டிய வீதி, பாத்திமா மாவத்தை, வாசனா பிளேஸ், கெமுனு மாவத்தை, கப்பித்தாவத்த, சமகி மாவத்தை, சோவிஸ் மாவத்தை, கல்எலிய, வலான சேர்ச் வீதி, வலான மயான வீதி, சுதுவெல்ல வீதி மற்றும் கிளை வீதிகள்.

எதிர்பார்த்த கால நேரத்தில் மின்தடைகள் செயற்படுத்தப்படாமல் இருக்கலாம். எனவே வாடிக்கையாளர்கள் இந்த இரத்துச் செய்தலை தாங்கிக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திட்டமிடப்பட்ட வேலைகள் முடிவடைந்தவுடன் மின்சாரம் விநியோகத்தை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் மின்கம்பி இணைப்பு வழிகளில் எந்நேரமும் மின்சாரம் பாய்வதாக கருதுங்கள்.

இந்த மின்தடைகள் மற்றும் திட்டமிடப்பட்ட மின்தடைகளை இரத்துச் செய்வதனால் ஏற்படும் அனைத்து அசௌகரியங்களுக்காகவும் நாம் வருத்தத்தை தெரிவிக்கிறோம்.

**மேலதிகப் பொது முகாமையாளர் (பொறியியல்),**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

**தொலைபேசி: 011 2371625**
**துரித இலக்கம்: 1910**
**மேற்குறிப்பிட்ட தகவல்கள் www.leco.lk எனும் எமது இணையதளத்திலும் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.**

SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB

## அறிவித்தல்

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# இலங்கை தேயிலைச் சபை

## இரத்கந்த தேயிலை தொழிற்சாலை - MF 1364

கீம்பிகந்த, வந்துரம்ப

### பச்சை தேயிலை இலைகளுக்கான நிலுவைத் தொகை செலுத்துதல்

இரத்கந்த தேயிலை தொழிற்சாலையிலிருந்து (MF 1364) 2023 ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் பச்சை தேயிலை இலைகளை வழங்கிய உரிமையாளர்கள் தாங்கள் வழங்கிய தேயிலை இலைகளுக்கான கொடுப்பனவுகளைப் பெறவில்லை என்றால், **2024 மார்ச் 31** அல்லது அதற்கு முன்னர் இலங்கை தேயிலை சபையின் காலி பிரதேச அலுவலகத்தில் வழங்கப்பட்ட இலை விநியோக ஆவணங்களுடன் அறியத்தருமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அலுவலக முகவரி
தேயிலை உதவி ஆணையாளர்,
இலங்கை தேயிலைச் சபை,
பிரதேச அலுவலகம்,
வலஹந்துவ தோட்டம்,
வலஹந்துவ.

**தொலைபேசி/தொலைநகல்** 091-2232052

இந்த விளம்பரத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே இறுதிக் கட்டண பட்டியல் ஆவணம் தயாரிக்கப்படும் என்பதால், 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் /கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாது.

தேயிலை ஆணையாளர்,
இலங்கை தேயிலை சபை,
இல-574, காலி வீதி,
கொழும்பு 03.

SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB

## 1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : 2020/2/2/1/162/CH/EA
காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/07/2020/HW/70

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.10.25 ஆம் திகதிய 2355/23 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் - மேல்
மாவட்டம் - கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு - கம்பஹா

| ஆ.வ. இலக்கம் / கடத்திரல் இலக்கம் | துண்டு இல | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | 8 கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 511860/03/4 | 07 | 0.8813 | மெதகம | இல. 223ஏ, மெதகம 02 |
| 511839/01/4 | 09 | 0.4839 | இஹலகம | இல. 224, இஹலகம மேற்கு |

**கே.ஏ.எஸ்.எல். குணதிலக்க**
**பிரதேச செயலாளர்**
**கம்பஹா.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**கம்பஹா,**
**2024.02.22**

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–02–28

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | யாழ்ப்பாண பிராந்தியத்தில் (பூநகரி - நல்லூர் - சாமிபுலம்) 115 கி.மீ. விநியோக வழிகளை நிறைவு செய்வதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: RSC/N/T&C/CEDE/LAYING/JAFFNA REGION/2023/103 | 20,000/-+ VAT ** | ரூபா 862,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 86.13 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 25/03/2024 மு.ப. 10.00 |
| 02 | பிரதான பரிமாற்றத்தில் குறுக்குப் பாலத்தை நிர்மாணித்தல் - பெலும்மஹர பிரதேசம்<br>ஒப்பந்த இல: RSC(W/N)SS/CIVIL/GAMIWSS/ 2023/90 | 12,500/-+ VAT ** | ரூபா 471,800/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4, C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 31.45 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 21/03/2024 மு.ப. 10.00 |
| 03 | ஹிம்புட்டு உயன வீடமைப்புத் திட்டத்திலுள்ள நாளொன்றுக்கு $250m^3$ கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியைப் புனரமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்துதல்<br>ஒப்பந்த இல: AGM(WR-P&D)/C/NHDA/HIMBUTU UYANA/2023/01 | 12,500/-+ VAT ** | ரூபா 900,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4, C5 அல்லது C6 தரத்தில் மற்றும் மின்சாரம் மற்றும் பொறிமுறை சேவைகள் துறையில் EM2 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 49.83 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 22/03/2024 மு.ப. 10.00 |
| 04 | உக்குவளை நீர் வழங்கல் திட்டம் வருமானமற்ற நீர் குறைப்பின் நீர்க் கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: RSC-C/CN/CIVIL/O&M/UKUWELA/ 2023/32 | 6,000/-+ VAT ** | ரூபா 60,000/- | சிவில் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.6 மில்லியன் | கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>மாத்தளை, முகாமையாளர் அலுவலகத்தில் 2024-03-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P-0662050625) | 13/03/2024 பி.ப. 2.00 |
| 05 | சூரியஆர நீர் வழங்கல் திட்டத்திற்கு வடிகட்டி ஊடகத்தை வழங்குதல் மற்றும் அமைவிடத்தில் வைத்தல்<br>ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/ SOORIYAARA/2023/144 | 6,000/-+ VAT ** | ரூபா 98,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.5 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 13/03/2024 பி.ப. 2.00 |
| 06 | வெலிமட மற்றும் திவிதொட்டவெல நீர் வழங்கல் திட்டங்களில் தற்போதுள்ள சேவை இணைப்புகளை மேம்படுத்துதல்<br>ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/NRW/ WELIMADA/2024/20 | 12,500/-+ VAT ** | ரூபா 149,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 9.90 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 13/03/2024 பி.ப. 2.00 |
| 07 | மாவனல்லை மற்றும் கேகாலை நீர் வழங்கல் திட்டங்களில் உள்ள நீர்க் கசிவு திருத்தவேலைகளுக்கான வாடகை சேவைகள்<br>ஒப்பந்த இல: RSC(SAB)/RM(KEG)/CIVIL/ O&M/KEG. REG/2024/01 | 12,500/-+ VAT ** | ரூபா 160,000/- | கட்டிட நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.58 மில்லியன் | பிஓநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 13/03/2024 பி.ப. 2.00 |
| 08 | கேகாலை நீர் வழங்கல் திட்டத்தில் புஸ்செல்லா சந்தி முதல் வித்யாலய வீதி வரையில் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக HDPE குழாய்கள் மற்றும் பொருத்தல்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: RSC(SAB)/RM(KEG)/REH/ KEGALLE-VIDYALA RD/CIVIL/2023/77 | 12,500/-+ VAT ** | ரூபா 150,000/ | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.2 மில்லியன் | பிஓநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 13/03/2024 பி.ப. 2.00 |
| 09 | கேகாலை நீர் வழங்கல் திட்டத்தில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கு தீவெல குழாய் வழியை மாற்றுவதற்கு HDPE குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: RSC(SAB)/RM(KEG)/NRW/ KEGALLE/ CIVIL/2023/18 | 12,500/-+ VAT ** | ரூபா 140,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.6 மில்லியன் | பிஓநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 13/03/2024 பி.ப. 2.00 |
| 10 | பாணந்துறை - ஹொரண பிராந்தியத்தில் புதிய சேவை இணைப்புகளை வழங்குவதற்காக அகழ்தல், குழாய்களைப் பதித்தல் மற்றும் மீள் நிரப்புதல்<br>ஒப்பந்த இல: W-S/P&C/C/NS(01)/P-H/O&M/ 2024/01 | 12,500/-+ VAT ** | ரூபா 211,900/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஓ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947<br>முகாமையாளர் (பாணந்துறை - ஹொரண) அலுவலகத்தில் 2024-03-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 14/03/2024 மு.ப. 10.00 |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 11 | 1,000 பொலி அலுமினியம் குளோரைட்டை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: SUP&MM/CHEM/PAC-02/2023/03 | 35,000/-+ VAT ** | ரூபா 2,080,000/- | 1,000 தொன் பொலி அலுமினியம் குளோரைட் வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 21/03/2024 மு.ப. 10.00 |
| 12 | 1300 தொன் அலுமினியம் சல்பேற்றை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: SUP&MM/CHEM/ALUM-02/2023/09 | 35,000/-+ VAT ** | ரூபா 1,800,000/- | 1,300 தொன் பொலி அலுமினியம் சல்பேற் வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 22/03/2024 மு.ப. 10.00 |
| 13 | 60 தொன் பிளீச்சிங் பவுடரை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>Supply and Delivery of 60 tonne of Bleaching Powder<br>ஒப்பந்த இல: SUP&MM/CHEM/BP-01/2024/10 | 12,500/-+ VAT ** | ரூபா 227,000/- | 60 தொன் பிளீச்சிங் பவுடர் வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 20/03/2024 மு.ப. 10.00 |
| 14 | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொள்வதற்குப் பொருத்தமான ஒப்பந்த முகவரைத் தெரிவு-செய்தல்<br>(Clearing & Forwarding of Imported Cargo from WHARF)<br>ஒப்பந்த இல: SUP&MM/C&F/2023/18 | 6,000/-+ VAT ** | ரூபா 123,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் அரச மற்றும் தனியார்துறையில் கார்கோ சரக்குகளைக் கையாளும் சேவை வழங்கும் துறையில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் அனுபவத்தைக் கொண்ட இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை மற்றும் இலங்கைச் சுங்கத்தில் பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் wharf clearance உரிமத்தைக் கொண்ட சரக்ககற்றும் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 25/03/2024 மு.ப. 10.00 |
| 15 | குருநாகல் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Wet Well type Submersible பம்பித் தொகுதியொன்று மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்.<br>ஒப்பந்த இல: RSC(NW)/M-KURU/P/RH/KURU-WTP/2023/068 | 4,000/-+ VAT | ரூபா 52,500/- | பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | - | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 20/03/2024 பி.ப. 2.00 |
| 16 | வவுனியா பிராந்தியத்தில் நீர் தர செயற்பாடுகள் மற்றும் உறுதிப்படுத்துதல் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்<br>RSC/N/DGM/RH/Laboratory/Vavuniya/2023/114 | 6,000/-+ VAT ** | ரூபா 78,600/- | ஆய்வுகூட உபகரணங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/<br>024-2225719/<br>024-2227340<br>Fax:024-2225088/<br>024-2227341 | 13/03/2024 பி.ப. 2.00 |
| 17 | பிஓநி - அலுவலகக் கட்டிடத்தின் மூன்றாம் மாடிக்கு தளபாடங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RSC-C/P&D/CIVIL/KNPIWSP/RSC-C/2024/68 | 12,500/-+ VAT ** | Rs 156,100/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>RSC-C, P&D<br>பிரிவில் 2024-03-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P-0812388086) | 13/03/2024 பி.ப. 2.00 |
| **M & E கேள்விகள்** | | | | | | | |
| 18 | திவிதொட்டவெல பம்பி இல்லத்திற்கு End Suction Vertical Delivery Centrifugal பம்பித் தொகுதிகளை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் ஒப்படைத்தல்.<br>ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/ DIVITHOTAWELA/2023/93 | 12,500/-+ VAT ** | ரூபா 220,000/- | பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 13/03/2024 பி.ப. 2.00 |
| 19 | மொனராகலை முகாமையாளர் அலுவலகத்திற்கு Local Area வலையமைப்பை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/ MONERAGALA/2023/136 | 4,000/-+ VAT | ரூபா 40,000/- | வலையமைப்புத் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | - | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 13/03/2024 பி.ப. 2.00 |

**2024-02-14ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. கொண்டுவட்டுவான சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள நிந்தவூர் உயர்த்தப்பட்ட பம்பிக்கு பம்பி, வால்வுகள், மற்றும் VFD துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல : RSC(E) /AGM (ES) /S&I/ CENTRIFUGAL/KWTP-PUMP/ENERGY/ AMP/2023/55 - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2024-03-07ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அம்பாறை, தேநீவவச, உபொமு (கிழக்கு) அலுவலகத்தில் 2024-02-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 20 | வில்கமுவ நீர் வழங்கல் திட்டம் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான சேவை வழங்குவதற்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: ජ්‍රාසේම-ම/මැ/සේවා/ක්‍රිහාන/ විල්ගමුව/2023/163 | 4,000/-+ VAT | ரூபா 31,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>மாத்தளை, முகாமையாளர் அலுவலகத்தில் 2024-03-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P-0662050625) | 13/03/2024<br>பி.ப. 2.00 |
| 21 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (மேற்கு / தெற்கு) தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/LC/RSC(NRW/O&M)/ 2024/27 | 6,000/-+ VAT<br>** | ரூபா 143,000/- | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (CBO) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 13/03/2024<br>மு.ப. 10.00 |
| 22 | ராகமயில் உள்ள பொறுப்பதிகாரி அலுவலகம் மற்றும் ஜா-எலயில் உள்ள பொறுப்பதிகாரி அலுவலகம் மற்றும் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்.<br>ஒப்பந்த இல : RSC(W/N)/SS/JANI/KEL(O&M)/2024/04 | 4,000/-+ VAT | ரூபா 62,500/- | ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 4.16<br>மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 13/03/2024<br>மு.ப. 10.00 |
| 23 | இரத்தினபுரி புதிய நகரிலுள்ள பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்தின் (சப்ரகமுவ) அலுவலகக் கட்டிடத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல:RSC(SAB)/P&D/SER/O&M/ OFFICE/ JANITORIAL/2023/85 | 6,000/-+ VAT<br>** | ரூபா 85,000/- | ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 5.7 மில்லியன் | பிஓநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 13/03/2024<br>பி.ப. 2.00 |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 24 | களனி பிராந்த்தியத்திற்கு 02 எண்ணிக்கையான பெக்கோ லோடர்களை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/KEL(O&M)/ 2023/82 | 12,500/-+<br>VAT<br>** | ஒரு வாகனத்திற்கு ரூபா<br>15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 20/03/2024<br>மு.ப. 10.00 |
| 25 | வெலம்பொட பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல:RES-C/M&E/HIRING/O&M/CS/ 2024/64 | 2,000/-+ VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 13/03/2024<br>பி.ப. 2.00 |
| 26 | தலவாக்கலை பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RES-C/M&E/HIRING/O&M/ CS/2024/77 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 13/03/2024<br>பி.ப. 2.00 |
| 27 | ஹட்டன் பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல:RES-C/M&E/HIRING/O&M/ CS/2024/73 | 2,000/-+ VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 13/03/2024<br>பி.ப. 2.00 |
| 28 | குருநாகல் பிராந்தியத்திலுள்ள மாவத்தகம நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப்பை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(NW)/M(KURU)/HV/ O&M/MAWA/2024/34 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 20/03/2024<br>பி.ப. 2.00 |
| 29 | குருநாகல் பிராந்தியத்திலுள்ள குருநாகல் பிராந்திய முகாமையாளர் அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(NW)/M(KURU)/HV/ O&M/KURU/2024/23 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 5 ஆசனங்கள் கொள்ளளவு | | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 20/03/2024<br>பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**






## கேள்வி அறிவித்தல்

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**

### நீர் வழங்கி (Water dispenser) சகிதம் 19 லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

**கேள்வி இலக்கம்: 43/2024.03.20**

பின்வரும் வகையில் நாளாந்த அலுவலகப் பாவனைக்காக போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்காக சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் (SLS) ஒப்புதல்களைப் பெற்றுள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

01. 19 லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் - ஒரு மாதத்திற்கு 600 போத்தல்கள் (ஏறத்தாழ)
02. நீர் வழங்கிகள் - 65 எண்ணிக்கை (ஏறத்தாழ)

ஒரு ஆவணத்திற்கு 2000.00 ரூபா (இரண்டாயிரம் ரூபா) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-03-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றின் பேரில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பெறுகை உதவிப் பணிப்பாளரிடமிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை 2024-03-20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் 2024-03-13ஆம் திகதி பி.ப. 3.00 மணியின் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07**

(SLRC Website : http://www.rupavahini.lk)

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### Surgeon Head Light System ஐ வழங்குவதற்கான கேள்வி

### (Tender for the supply of Surgeon Head Light System)

**Tender No.: Q 76/24**

1 எண்ணிக்கையான Surgeon Head Light System ஐ வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை 2024.03.21ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் இப்போது அழைக்கின்றார்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் ஊடாக நடாத்தப்படும்.

விலைமனுதாரர்கள் நிகரான உபகரணத்தை வழங்குவதில் முன்னைய அனுபவத்தையுடைய உற்பத்தியாளர்களாக /முகவர்களாக / கம்பனிகளாக இருக்கலாம்.

2024.02.28 ஆம் திகதியிலிருந்து 2024.03.20 வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் சாதாரண வேலை நாட்களில் வழங்கல் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றையும் 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக செலுத்தி ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் ஆவணத்தை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் ( சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றும் (பிரதியொன்றுடனான சான்றிதழின் மூலப்பிரதி) விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உரிய முறையில் விலைமனுக்கோரல் ஆவணமானது இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என அடையாளமிடப்பட்டு அவையிரண்டும் தனியொரு தபாலுறையின் சேர்க்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "Supply of Surgeon Head Light System – 01 No. Q 76/24 – closing on 2024.03.21" என அடையாளமிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.03.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான சமர்ப்பிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுதாரர் 80,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றை விலைமனுவுடன் வழங்குதல் வேண்டும்.

பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதியானவர் இந்நிகழ்வின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

மேலதிக விபரங்களுக்கு, 0112778624 – ( நீடிப்பு 3140) என்ற தொலைபேசியூடாக வழங்கல் அலுவலகருடன் தொடர்பு கொள்ளவும். விலைமனு ஆவணமானது இலவசமாக பரீட்சிக்கப்படலாம். விலைமனுவை முழுவதுமாக அல்லது பகுதியொன்றை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்காக உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# வடக்கின் உதயம்

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இந்திய பேராசிரியரின் உரை

(யாழ்.விசேட நிருபர்)




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழகத்தின் புகழ்பெற்ற செயலூக்க பேச்சாளர் பேராசிரியர் ஜெயந்தசிறி பாலகிருஷ்ணனின் சிறப்புரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. 'கற்க கசடற" என்ற தொனிப்பொருளில் ஆசிரியர்களை மையப்படுத்தி உரையை ஆற்றினார். நிகழ்வின் போது பேராசிரியர் ஜெயந்தசிறி பாலகிருஷ்ணன் கலாசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மலர் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார். பேராசிரியருடன் அவரது கணவர் பேராசிரியர் பாலகிருஷ்ணன் மற்றும் தமிழ்நாடு விழுப்புரம் ரோட்டரி கழக தலைவி விஜயகுமாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

புத்தூரில் வீடு தீக்கிரை

## பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசம்

(பருத்தித்துறை நிருபர்)

யாழ்ப்பாணத்தில் வீடொன்று தீக்கிரையானதில், பெறுமதியான பொருட்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. புத்தூர் கலைமதி பகுதியிலுள்ள வீடொன்றிலேயே நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு தீப்பற்றியுள்ளது.

அதனையடுத்து வீட்டார், வீட்டிலிருந்து வெளியேறி அயலவர்களின் உதவியுடன் தீயை கட்டுப்படுத்த முயற்சித்த போதும் அது பயனளிக்காமையால், யாழ்.மாநகரசபை தீயணைப்பு படையினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் அவ்விடத்துக்கு விரைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மின்கசிவு காரணமாகவே வீடு தீப்பிடித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# பூசணி செய்கையில் ஆர்வம்

(முல்லைத்தீவு குறூப் நிருபர்)

கிளிநொச்சி கண்ணகைபுரத்தில் விவசாயிகள் பூசணி பயிர்ச்செய்கையில் அதிகளவில் ஈடுபட்டுள்ளதை காணமுடிகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் மேட்டுப்பயிர்ச் செய்கை கிராமங்களின் ஒன்றாக கண்ணகைபுரம் விளங்குகின்றது. தற்போது அக்கராயன் குளத்திலிருந்து கண்ணகைபுரம் கிராமத்துக்கு மேட்டுப் பயிர்ச்செய்கைக்காக நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் விவசாயிகள் பூசணி உட்பட மேட்டுப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அதிலும் கூடுதலாக பூசணி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணகைபுரம், கனகாம்பிகைக்குளம், பிரமந்தனாறு என்பன மேட்டுப்பயிர்ச்செய்கைக்குரிய கிராமங்களாகும். கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தினால் கூட்டங்கள் நடாத்தப்பட்டே பயிர்ச்செய்கைகள் ஆரம்பிக்கப்படுவது வழமையாகும்.

கடந்த காலங்களில் கண்ணகைபுரம் விவசாயிகள் பெருமளவில் பூசணி செய்கையில் ஈடுபட்டு வருமானம் பெற்றுவருகின்றனர். சில வேளைகளில் பூசணியை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்பட்டமையால் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் முயற்சியினால் கண்ணகைபுரத்திலிருந்து தென்னிலங்கை உட்பட பல்வேறு இடங்களுக்கு பூசணிகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை தினம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாசாலை முன்றலிலுள்ள திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது. விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் மலர் வழிபாடு மேற்கொண்டனர்.



திருவள்ளுவர் குறித்து ஆசிரிய மாணவர்களின் சிற்றுரைகளும் இடம்பெற்றன. உரைகளை ஆற்றிய ஆசிரிய மாணவர்களுக்கு புத்தக பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன.

இப்பரிசில்களை கலாசாலை மூத்த விரிவுரையாளர் மு.ஜெயக்குமாரி வழங்கினார். திருவள்ளுவர் குருபூசை மாசி மாத உத்திர நட்சத்திர நாளில் அனுஷ்டிக்கப்படுவது வழக்கமாகும்.

# கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய முதியவர் உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர்)

கனடாவிலிருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்த முதியவரொருவர் மூச்சு விட சிரமப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மாதகல் பகுதியைச் சேர்ந்தவரும், கனடாவில் வசித்து வந்தவருமான சோதிலிங்கம் கந்தசாமி (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கனடாவில் வசித்து வந்த நிலையில் அண்மையில் தனது சொந்த ஊரான மாதகல் பகுதிக்கு வந்து உறவினர் வீடொன்றில் தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், நேற்றையதினம் திங்கட்கிழமை மூச்சு விட சிரமப்பட்ட நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# சடலம் மீட்பு



(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை வீட்டு முற்றத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுணாவில் பகுதியைச் சேர்ந்த 55 வயதான குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குடும்பப் பிரச்சினை காரணமாக இவர் தற்கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியாவில் மேழி எழுபது பிரமாண்ட விழா

(ஓமந்தை விஷேட நிருபர்)

எழுத்தாளர் கலாநிதி மேழிக் குமரனின் எழுபதாவது பிறந்தநாளும் ஐம்பதாண்டு கால இலக்கிய பயணத்தையும் முன்னிட்டு இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் நிறுவுனர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் த.மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்







னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராஜா, கௌரவ விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் ஓய்வு நிலை பீடாதிபதி க.பேர்ணாட், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந.சிவசக்தி ஆனந்தன், இலக்கியவாதிகள்,சமூகஆர்வலர்கள்,திணைக்கள உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் எழுத்தாளர் கலாநிதி மேழிக் குமரனின் கொள்ளிக்காசு சிறுகதைத் தொகுப்பு நூலும் 'அல்சைமர்' மருத்துவ நூலும் வெளியிடப்பட்டன.

# மண்மேடு சரிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி அணிவத்த பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மதிலொன்றை அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டிக் கொண்டிருந்த ஒருவர் மீதே மண்மேடு சரிந்து வீழ்ந்து விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திகன, ரஜவெல்ல பிரதேசத்தில் வசித்து வந்த 49 வயதான, ஈ.எம்.பி.டபிள்யூ. ஏகநாயக்க என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக கண்டிப் பொலிஸார் தெரிவித்தார்.

சம்பவத்தின் போது சுமார் 20 அடி உயரமான மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடும் சிரமத்துக்கு மத்தியில் காயமடைந்தவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மலைச்சாரல்

# இராணுவ வீரர் மர்ம மரணம்; சந்தேகத்தில் நால்வர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

தொம்பகொட இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள குளத்தில் மர்மமான முறையில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இச்சம்பவத்தில் சந்தேகத்தின்பேரில் அதே இராணுவ முகாமில் பணியாற்றும் நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் எம்பிலிப்பிட்டிய எத்திலி வெவ பிரதேசத்தைச் சேர்ந்த தரிந்து லக்ஷ்மன் எனும் 24 வயதுடைய இராணுவ விளையாட்டு பயிற்சி உத்தியோகத்தவராவர்.

கைது செய்யப்பட்டுள்ள நான்கு வீரர்களும் இதே முகாமில் விளையாட்டு பயிற்சி ஆலோசகர்களாகக் கடமையாற்றும் ஒரே அறையில் வசித்து வருபவர்கள் என தெரியவருகின்றது.

இவர்கள் பொலிஸாருக்கும் நீதவானுக்கும் வழங்கியுள்ள வாக்குமூலங்களில் முரண்பாடுகள் காணப்பட்டதையடுத்து இவர்களை தடுத்து வைத்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மரணம் குறித்த தகவல்களை மறைத்தமையால் இவர்களுக்கான விசாரணை நீடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவதினம் இராணுவ முகாமின் அறையொன்றில் மதுபானம் அருந்திவிட்டு குளத்தில் குளித்து நீச்சல் போட்டி நடத்தியுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.





கண்டி மகியாவ அருள்மிகு ஸ்ரீ காட்டு மாரியம்மன் திருக்கோயிலின் வருஷாபிஷேகத்தை முன்னிட்டு அஷ்டோத்திர சங்காபிஷேகம், அம்பாள் உள்வீதி வலம் வருதல் என்பன நடைபெற்றன.

(கண்டி மு. தீபன்)

# நுவரெலியாவில் ஞானம் பவுண்டேஷன் அங்குரார்ப்பணம்





நுவரெலியா மாவட்டத்தில் லைக்கா மற்றும் அதன் இணை அமைப்பான ஞானம் பவுண்டேஷன் இணைந்து அதன் சமூக அபிவிருத்தி திட்ட பணியை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்தது.

இதுதொடர்பான நிகழ்வு நுவரெலியா மாவட்ட செயலக அதிசய மண்டபத்தில் லைக்கா, ஞானம் பவுண்டேஷன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட கலந்து கொண்டு நுவரெலியா மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி பணிக்கான ஆரம்ப நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் 'லைக்கா மற்றும் ஞானம் பவுண்டேஷன் சர்வதேச இணைப்பதிகாரி சைத்தனியா, மாவட்டத்தின் செயற்றிட்ட முகாமையாளர் ஆர்.ஸ்ரீதரன்,நுவரெலியா மாவட்ட அபிவிருத்தித் திட்ட இணைப்பதிகாரி எம்.என்.யூசுப் ஆகியோருடன் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்,யுவதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேசத்தில் இலங்கை உட்பட ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் இயங்கி வரும் 'லைக்கா, ஞானம் பவுண்டேஷன்' இலங்கையில் வடக்கு, கிழக்கு பிரதேச மக்களின் வேண்டு கோளுக்கமைய சமூக அபிவிருத்தி பணிகளை அரசசார்பற்ற நிறுவனமாக செய்துவருகின்றது.

இந்நிலையில் மலையக சமூகத்துக்கும் அபிவிருத்தி தேவைப்பாடுகள் உள்ளமையால் நுவரெலியா மாவட்ட செயலாளரின் அழைப்புக்கமைய நுவரெலியா மாவட்டத்தில் முதன் முறையாக "லைக்கா, ஞானம் பவுண்டேஷன்" முன்னெடுக்கவுள்ள சமூக அபிவிருத்தி பணியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.இதனூடாக கல்வி,வாழ்வாதாரம், குடியிருப்பு வசதிகள்,சுகாதாரம் மற்றும் தொழில்வாய்ப்பு வசதிகள் என சமூக தேவைப்பாடு உணர்ந்து அதற்கான அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்ட செயற்றிட்ட முகாமையாளர் ஆர்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ரமேஷ்





கனடா புனத்தாபன மையத்தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி புத்தகம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் வைபவம் கண்டி விவேகானந்தா கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது இந்நிகழ்வில் எழுத்தாளர் நித்தியானந்தன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கண்டி பிரம்மகுமாரிகள் அமைப்பின் தலைவர் எஸ். வேலாயுதம் கௌரவிக்கப்படுவதையும் படத்தில் காணலாம். (படங்கள்; இராமன்)

மட்டக்களப்பில் நிலவும்

# காணிப் பிரச்சினைகளுக்கு நீதியமைச்சரால் ஆலோசனை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் காணி பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்வது தொடர்பாக பல்வேறுபட்ட ஆலோசனைகளை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வழங்கினார்.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அழைப்புக்கமைய மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர், மட்டக்களப்பின் பல்வேறு இடங்களுக்கும் சென்று நிலைமையை ஆராய்ந்தனர்.

இந்நிலையில் மட்டக்களப்பில் நிலவும் காணி பிரச்சினை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டீனா முரளிதரனின் ஏற்பாட்டில் விசேட கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை (24) அங்கு நடைபெற்றது.

இதன்போது காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சட்ட நடவடிக்கை தொடர்பாகவும் அவர்கள் கவனம் செலுத்தினர்.



அண்மையில் திடீர் சுகவீனமுற்று சிகிச்சை பெற்று வருகின்ற சாதுலியா தரீக்காவின் முக்கியஸ்தரும் சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத்தின் சிரேஷ்ட உறுப்பினருமான பர்ஸான் முர்ஸியை, இலங்கையிலுள்ள அரூஸியதுல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மீகத்தலைவர் சங்கைக்குரிய அஷ்ஷெய்க் தைக்கா நாஸிர் ஆலிம் (ஜலாலீ, ஜமாலி. எம்.ஏ) சீனன்கோட்டையிலுள்ள அன்னாரது இல்லத்திற்குச் சென்று அவரிடம் சுகம் விசாரிப்பதை படத்தில் காணலாம்.

## மட்டக்களப்பு – கொழும்பு வீதியில் விபத்து; இருவர் படுகாயம்

**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் மியான்குளம் சந்தியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இந்துமத குருமார்கள் இருவர் படுகாயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் மரண வீடொன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்புகையிலேயே விபத்தை எதிர்கொண்டதாகவும், வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிக்கந்தையிலிருந்து கிரான் நோக்கி இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் மட்டக்களப்பிலிருந்து வெலிக்கந்தை நோக்கி பயணித்த கனரக வாகனமும் மோதி இவ்விபத்து இடம்பெற்றதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தைத் தொடர்ந்து கனரக வாகன சாரதி கைது செய்யப்பட்டதுடன், வாகனம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலங்கேணி விநாயகர் திருவிழா

## போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசில்



**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

திருகோணமலையின் கிண்ணியா பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலங்கேணி அருள்மிகு விநாயகர் கோயில் பூங்காவனத் திருவிழாவையொட்டி கடந்த சனிக்கிழமை (24) நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இக்கோயில் திருவிழாவையொட்டி கிண்ணியாவிலுள்ள தமிழ்மொழி மூலமான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பேச்சு, கவிதை, கட்டுரை, நாடகம், நடனம் முதலிய போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கே பரிசில்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். அத்துடன் திருவிழாவை சிறப்பான முறையில் நடத்திய சைவக் குருமாரையும் அவர் கௌரவித்தார்.

## மதுபானத்துடன் கைதான பெண்ணுக்கு அபராதம்

**தோப்பூர் குறூப் நிருபர்**

மதுபானத்துடன் கூடிய 27 மதுபானப் போத்தல்களை வைத்திருந்த பெண் ஒருவருக்கு 125,000 ரூபா அபராதம் விதித்து மூதூர் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலையின் ஈச்சிலம்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கே இவ்வாறு நீதிமன்றத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார், இவரிடமிருந்து மதுபானத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

கல்முனை மாநகர சபையில்

## Online இல் கொடுப்பனவு செலுத்தும் திட்டம்



**சாய்ந்தமருது விசேட நிருபர்**

கல்முனை மாநகர சபையில் Online மூலம் கொடுப்பனவு செலுத்தும் 'CAT 20 Payment System' நேற்று செவ்வாய்க்கிழமை (27) அம்மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடியை கவனத்தில் கொண்டு, நிதிப் பிரிவை ஒழுங்குமுறைப்படுத்தி, மோசடியை முற்றாகத் தவிர்த்து, நம்பகமான முறைமையை நடைமுறைப்படுத்தும் வகையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண சபை என்பவற்றின் அங்கீகாரம் பெற்ற வயம்ப அபிவிருத்தி அதிகார சபையின் CAT20 எனும் செயலி, யூ.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் சில மாதங்களுக்கு முன்னர் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் ஓரங்கமாகவே Online மூலம் கொடுப்பனவு செலுத்தும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


# பிஸ்கல் ஏலத்தில் விற்பனை செய்தல்

**இரத்தினபுரி மாவட்ட நீதிமன்றத்தில்**

வழக்கு இலக்கம் : 19421
தன்மை : காணி மற்றும் நஷ்ட ஈடு
பெறுமதி : ரூ. 120,000
எஸ்கிசி இல. : 879/22
(அவிசாவளை மாவட்ட நீதிமன்றம்)

(இறந்துள்ளார்) 01. பல்லெகே ஆரச்சிலாகே குணரத்ன
01. அ. பல்லெகே ஆரச்சிலாகே யதிந்ர குணரத்ன
02. பல்லெகே ஆரச்சிலாகே யதிந்ர குணரத்ன, இருவரும், எபிட்ட வல, கிரிஎல்ல

**முறைப்பாட்டாளர்கள்**

**எதிராக**

(இறந்துள்ளார்) 01. பல்லெகே ஆரச்சிலாகே சிரிசேன
01. அ. செம்பு குட்டி ஆராச்சிலாகே எலிஸ் நோனா
01. ஆ. பல்லெகே ஆரச்சிகே பிரேமசிரி
(இறந்துள்ளார்) 01. இ. பல்லெகே ஆரச்சிலாகே சந்ரசிறி
01. இ.I களுபோவிலகே நோன மானெல் சரிகா களுபோவில 587/பீ, எபிட்டவல, கிரிஎல்ல
01. இ.II பல்லெகே ஆரச்சிகே சமில குமார பல்லெகே ஆரச்சி

587/ஈ 2, எபிட்டவல, கிரிஎல்ல
01. ஈ. பல்லெகே ஆரச்சிகே ரூபா ரஞ்சனீ
01 உ. பல்லெகே ஆரச்சிலாகே சரத் அனுர குமார
01 ஊ. பல்லெகே ஆரச்சிகே நீல்குமார
01 எ. பல்லெகே ஆரச்சிலாகே ரஞ்சித் குமார
01 ஏ. பல்லெகே ஆரச்சிலாகே வசந்த குமார
01 ஒ. பல்லெ ஆரச்சிகே புஷ்பா ரஞ்சனீ சகலதும் எபிட்டவெல, கிரிஎல்ல
01. ஓ. பல்லெ ஆரச்சிலாகே சந்யா குமாரி 40/பீ, ஈடன் பார்க், மூனகம, ஹொரண
02. செம்பு குட்டி ஆராய்ச்சிலாகே எலிஸ்நோனா எபிட்டவல, கிரிஎல்ல
03. கணிமறுசீரமைப்பு ஆணைக் குழு, கிரகரி மாவத்த, கொழும்பு.

**எதிர்மனுதாரர்கள்**

2009.09.23ம் திகதிய தீர்ப்பு மற்றும் 2020.10.02ம் திகதிய கட்டளையின் பிரகாரம் 01(அ), 01(ஆ), 01(இ)I, 01(இII, 01(இ) 01(ஈ) 01(உ), 01(ஊ) 01(எ) 01(ஏ) மற்றும் 02 எதிர்மனுதாரர்களிடமிருந்து முறைப்பாட்டாளருக்கு ரூபா பதினாறு இலட்சம் (ரூ. 1,600,000) தொகை மற்றும் வழக்கு கட்டணமான ரூபா பத்தாயிரத்து முன்னூற்றி அறுபது (ரூ.10,360) தொகையை செலுத்துவதற்காக எனக்கு வழங்கப்பட்டுள்ள எஸ்கிசி அனுமதிப்பத்திரம் அவிசாவளை மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளர் கட்டளை பிஸ்கலினால் 2022.02.25ம் திகதி தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ள எதிர்மனுதாரருக்கு சொந்தமான, இங்கு கீழே அட்டவணையில் விவரமாகத் தரப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 2024 ஏப்ரல் 26ம் திகதிக்கு அச் சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**மேற்படி அட்டவணை**

சப்ரகமுவ மாகாண, இரத்தினபுரி மாவட்டத்தின், குருவிட்ட கோரளே, மெத பத்துவே, எஹலியகொட பிரதேச சபை எல்லைக்குள், எஹலியகொட பிரதேச செயலகப் பிரிவில், இல. 142 ஏ கிதுரங்கல கிராம அதிகாரி பிரிவில், கிதுரங்கல என்ற ஊரில் அமைந்துள்ள பி.எஸ்.பி.பி.56 இன் லொட் 361 என்ற "கலபதனா ஹேன மற்றும் லிந்தகாவ ஹேன" எனும் ஒன்றாக இணைந்த காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட ஜோ.சோமசிரி உத்தரவு பெற்ற நில அளவையாளரின் இல. 2367 மற்றும் 2019.03.25ம் திகதிய துண்டு இல. 01 இற்கு எல்லையாக :

**வடக்காக:** பாசெல்வத்த வீதி, பி.ஏ.பொடி அப்புஹாமி மற்றும் இன்னும் பலர் உரிமை கோரும் காணி (அ.க.பி.52இன் துண்டு இலக்கம் 362) உம்,

**கிழக்காக:** பீ.ஏ.பொடிஹப்புஹாமி மற்றும் மேலும் பலர் உரிமை கோரும் காணி (அ.க.பி.56 இல் துண்டு இலக்கம்) 362) மற்றும் துண்டு இல 02 உம்,

**தெற்காக :** ஹொரக்கந்தே வேல்லே எல மற்றும் யு.ஆர். பாலஎதனா மற்றும் மேலும் பலர் உரிமை கோரும் கனேமுகலான் (அ.க.பி. 56இன் துண்டு இல. 360) உம்,

**மேற்காக :** யூ.ஆர்.பாலஎதனா, மற்றும் மேலும் பலர் உரிமை கோரும் கனேமுகலான (அ.க.பி.56 இன் துண்டு இல. 360) மற்றும் பாதையும்

எல்லையான ஒரு ஏக்கர் இரண்டு ரூட் பத்து தசம் மூன்று (ஏக் 01 ரூட் 02 பேர்ச் 10.3) எனப்படும் 0.6331 ஹெக்டயார் விசாலம் உள்ள காணியாகும். (இக் காணி அவிசாவளை) காணிப் பதிவு அலுவலகத்தின் ட 167/17,L 185/13 என்ற பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பதிவாளர் / பிரதி பிஸ்கால்,**
**மாவட்ட நீதிமன்றம் - அவிசாவளை**



# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## வட மேல் மாகாண சபை

## மாகாண கல்வித் திணைக்களம்

கல்வி அமைச்சினால் நிதியிடப்பட்டதும் அட்டவணையில் வழங்கப்பட்டதுமான நிருமாணம் மற்றும் பழுதுபார்த்தல்கள் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மேல் மாகாண, மாகாண கல்விப் பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| தொ இல. | விலைமனு குறிப்பீட்டு இல. | ஒப்பந்த தலைப்பு | பிரதேச பொறியிய லாளரின் அலுவலகம் | தேவைப் படும் CIDA தரம் (கட்டிடங்கள்) | ஒப்பந்தக் காலம் (நாட்களில்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரு) | விலை மனுவின் செல்லு படியாகும் காலப் பகுதி | விலை மனுப் பிணைத் தொகை (ரு) | விலைமனுப் பிணையின் செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 23/E/Wen/ MOE/ NCB/ 15 | வென்னப்புவ ஜோசப் வாஸ் கல்லூரியில் 110'x30' அளவுள்ள மூன்று மாடி வகுப்பறைக் கட்டிட நிருமாணம் - I ஆம் கட்டம் | வென்னப்புவ | சி-6, சி-5 மற்றும் சி-4 மாத்திரம் | 180 | 12,500 | 91 | 338,000 | 2024 ஜூலை 17 ஆம் திகதியன்று வரையும் |
| 02. | 23/E/Kuli/ MOE/ NCB/ 16 | பிங்கிரிய வயம்ப தேசிய கல்வி கல்லூரியில் வேலி, உணவகம், நடைபாதை, கராஜ் மற்றும் நீர் தாங்கி ஆகியவற்றின் அவசியமான பழுதுபார்த்தல்கள் | குளியாப்பிட்டிய | சி-9, சி-8 மற்றும் சி-7 மாத்திரம் | 90 | 3500 | 63 | 29,200 | 2024 ஜூன் 19 ஆம் திகதியன்று வரையும் |
| 03. | 23/E/Kuli/ MOE/ NCB/17 | பிங்கிரிய, வயம்ப தேசிய கல்வி கல்லூரியின் விடுதி கட்டிடங்களின் அவசியமான பழுதுபார்த்தல்கள் | குளியாப்பிட்டிய | சி-7, சி-6 மற்றும் சி-5 மாத்திரம் | 90 | 3500 | 77 | 108,000 | 2024 ஜூலை 03 ஆம் திகதியன்று வரையும் |
| 04. | 23/E/Kuru/ MOE/ NCB/18 | தம்பதெனிய தேசிய கல்வி கல்லூரியின் கும்புக் கிணற்றின் பழுதுபார்த்தல்கள் | குருநாகல் | சி-9 மற்றும் சி-8 மாத்திரம் | 30 | 1000 | 49 | 3800 | 2024 ஜூன் 05 ஆம் திகதியன்று வரையும் |
| 05. | 23/E/Kuli/ MOE/ NCB/19 | கிரி/ விக்கிரமஷிலா தேசிய பாடசாலையில் 29.25x19.15மீ அளவுள்ள மூன்று மாடி வகுப்பறையை சாதாரண (FF) மற்றும் நூலகம் (SF) ஆகியவற்றின் நிருமாணம் (மீதி வேலை) | குளியாப்பிட்டிய | சி-6, சி-5 மற்றும் சி-4 மாத்திரம் | 210 | 12,500 | 91 | 265,000 | 2024 ஜூலை 17 ஆம் திகதியன்று வரையும் |
| 06. | 23/E/Kuru/ MOE/ NCB/20 | நாரம்மல மயுரபாத மத்திய கல்லூரியில் விடுதி கட்டிடங்கள், உயர்தர வகுப்பறை கட்டிடம், உயர்தர ஆய்வுகூடம், 7 ஆம் தர மண்டபம், 6 ஆம் தர மண்டபம் மற்றும் அழகியல் அலகு மற்றும் 70'x25' அளவுள்ள வகுப்பறைக் கட்டிடம் ஆகியவற்றின் பழுதுபார்த்தல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | குருநாகல் | சி-8, சி-7 மற்றும் சி-6 மாத்திரம் | 150 | 3500 | 77 | 100,000 | 2024 ஜூலை 03 ஆம் திகதியன்று வரையும் |
| 07. | 23/E/Kuli/ MOE/ NCB/21 | கிரியுல்ல விக்கிரமஷிலா தேசிய பாடசாலையின் கட்டிடங்களின் பழுதுபார்த்தல்கள் | குளியாப்பிட்டிய | சி-8, சி-7 மற்றும் சி-6 மாத்திரம் | 105 | 3500 | 77 | 53,000 | 2024 ஜூலை 03 ஆம் திகதியன்று வரையும் |

1. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிருமாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவு செய்தலில் மேலேயுள்ள தரத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் விலைமனுதாரரானவர் பதிவு பெற்றிருத்தலுடன் பின்வரும் விலைமனு குறிப்பீட்டு இலக்கத்திற்கான சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
   23/E/Wen/MOE/NCB/15, 23/E/Kuli/MOE/NCB/17, 23/E/Kuli/MOE/NCB/19, 23/E/MOE/NCB/20, 23/E/Kuli/MOE/NCB/21
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தொழில்நுட்ப தகவலை குருநாகல், மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி, 2 ஆம் மாடி, மாகாண பொறியியல் திணைக்கள (வட மேல் மாகாணம்) பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி/ தொலைநகல்: 037-2222700
4. 2024 மார்ச் 19 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கணக்கியல் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2024 மார்ச் 20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களம் (வட மேல் மாகாணம்), பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டியில்'' சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024 மார்ச் 20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
6. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலமாக நடத்தப்படும். இந்த பெறுகையின் மொத்த ஆகுசெலவு மதிப்பீடானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/2016(iii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
7. 2024 மார்ச் 11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கீழேயுள்ள 8 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு.

**J.A.M.P. Jayathilake,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வட மேல் மாகாணம்),**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**
**திகதி: 28.02.2024.**

# பத்துமுக்கு பதிலாக அவிஷ்க

பங்களாதேஷுக்கு எதிராக அடுத்த மாதம் நடைபெறவுள்ள மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் இருந்து உபாதைக்கு உள்ளாகி இருக்கும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க நீக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானுக்கு எதிராக அண்மையில் நடந்த மூன்றாவது டி20 போட்டியின் போது காலில் ஏற்பட்ட காயம் தீவிரம் இல்லாதபோதும் அவர் தொடர்ந்து வலியை உணர்வதாக தெரியவந்துள்ளது.




இந்நிலையில் டி20 குழாத்தில் நிசங்கவுக்கு பதில் ஆரம்ப வீரர் அவிஷ்க பெர்னாண்டோ இணைக்கப்பட்டுள்ளார். ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஆடிய அவிஷ்க 13 மாதங்களுக்கு முன்னரே கடைசியாக டி20 சர்வதேச போட்டியில் ஆடியிருந்தார்.

ஐ.சி.சி. தடையால் பங்களாதேஷுக்கு எதிரான முதல் இரு போட்டிகளில் வனிந்து ஹசரங்கவினால் ஆட முடியாத நிலையில் இலங்கை டி20 அணித் தலைவராக சரித் அசலங்க செயற்படவிருப்பதோடு மேலதிக வீரராக சுழற்பந்து வீச்சாளர் ஜெப்ரி வன்டர்சே அழைக்கப்பட்டுள்ளார்.




கொழும்பு ஆனந்த–நாலந்த கல்லூரிகளுக்கு இடையிலான 94 ஆவது மரூன்களின் சமர் மாபெரும் கிரிக்கெட் போட்டிக்கு தொழில்நுட்பத்தினால் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதி செய்யும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL பிளாட்டினம் அனுசரணையை வழங்க முன்வந்துள்ளது. அதற்கான அனுசரணை வழங்கும் நிகழ்வில் பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம். இந்த கிரிக்கெட் போட்டி எதிர்வரும் மார்ச் 2–3 ஆம் திகதிகளில் கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# நமீபிய வீரர் டி20இல் அதிவேக சதம்



நேபாளத்திற்கு எதிரான முக்கோண டி20 தொடரின் முதல் போட்டியில் நமீபியாவின் ஜான் நிகொல் லொப்டி ஈட்டன் டி20 சர்வதேச போட்டியில் அதிவேக சதம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

நேபாளத்தின் கிர்டிபுரில் நேற்று (27) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபிய அணிக்காக மத்திய வரிசையில் வந்த ஈட்டன் 33 பந்துகளில் சதம் பெற்றார்.

இதன்மூலம் நேபாள வீரர் குஷால் மலாலா 34 பந்துகளில் சதம்பெற்று படைத்த சாதனையை முறியடித்தார். ஈட்டன் மொத்தமான 36 பந்துகளில் 11 பௌண்டரிகள் மற்றும் 8 சிக்ஸர்களுடன் 101 ஓட்டங்களை பெற்றார். இதன்போது அவர் பௌண்டரிகளால் மாத்திரம் 92 ஓட்டங்களை பெற்றதும் டி20 இல் சாதனையாகும்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபிய அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களை பெற்ற நிலையில் பதிலெடுத்தாடிய நேபாள அணி 18.5 ஓவர்களுக்கு 186 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை சந்தித்தது.

# நீல் வாக்னெர் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து நியூசிலாந்து அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர் நீல் வாக்னெர் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நாளை (29) வெல்லிங்டனில் ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக அறிவிக்கப்பட்ட நியூசிலாந்து குழாத்தில் நீல் வாக்னெர் இடம்பிடித்த போதிலும், அவுஸ்திரேலியாவுடன் நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டிக்காக பெயரிடப்பட்ட இறுதிப் பதினொருவர் அணியில் அவர் இடம்பெறவில்லை.

மறுபுறத்தில் 2ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன் அவரை அணியில் இருந்து விடுவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே, அவுஸ்திரேலியாவுடன் நடைபெறவுள்ள 2 போட்டிகளிலும் நீல் வாக்னெர் இடம்பெற மாட்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதற்கான அறிவிப்பை நீல் வாக்னெர் வெளியிட்டுள்ளார்.



12 ஆண்டுகளாக நியூசிலாந்து அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் ஆடிய 37 வயதான நீல் வாக்னெர் இதுவரை 64 டெஸ்ட் போட்டிகளில் 260 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

## சர்வதேச செய்திகள்



# காசாவில் அடுத்த வாரம் போர் நிறுத்தம் ஒன்றுக்கு பைடன் நம்பிக்கை: ஹமாஸ் தொடர்ந்து பரிசீலனை

## இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்கள் தொடர்ந்து நீடிப்பு

காசாவில் அடுத்த வாரம் போர் நிறுத்தம் ஒன்றை எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியபோதும், முன்மொழியப்பட்டிருக்கும் திட்டத்தை ஹமாஸ் அமைப்பு தொடர்ந்து பரிசீலித்து வருகிறது.

போர் நிறுத்தம் ஒன்று தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தீவிரம் அடைந்தபோதும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதோடு, ஐந்து மாதங்களை எட்டும் இந்தப் போரில் உயிரிழந்த பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30,000ஐ நெருங்கியுள்ளது.

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்தில் படை நடவடிக்கையை நிறுத்துவதற்கு இஸ்ரேல் தயாராக இருப்பதாக பைடன் குறிப்பிட்டுள்ளார். காசாவில் போரை நிறுத்தி அங்கு பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை எட்டும் முயற்சியில் மத்தியஸ்தம் வகிக்கும் அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டாருடன் பிரான்ஸ{ம் ஈடுபட்டுள்ளது.

நியூயோக்கில் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்றிருந்த பைடனிடம், இந்த உடன்படிக்கை எப்போது ஆரம்பிக்கும் என்று கேட்டபோது, “வார இறுதியின் முடிவில் ஆரம்பிக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்” என்றார்.

“நாம் போர் நிறுத்தம் ஒன்றை நெருங்கி இருப்பதாகவும் இன்னும் அதனை அடையவில்லை என்றும் எனது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்னிடம் கூறினார். அடுத்த திங்கட்கிழமை நாம் போர் நிறுத்தம் ஒன்றை எட்டலாம் என்பது எனது எதிர்பார்ப்பு” என்று பைடன் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த வாரம் இடம்பெற்ற அவசர பேச்சுவார்த்தையை அடுத்து முன்வைக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்த முன்மொழிவு பற்றி ஹமாஸ் தரப்பு இன்னும் உத்தியோகபூர்வ பதிலை அளிக்கவில்லை.

இதில் எதிர்வரும் திங்கட்கிழமை போர் நிறுத்தம் ஒன்று எட்டப்படுவது பற்றிய பைடனின் கருத்து முன்கூட்டியதாக உள்ளது என்றும் கள நிலவரத்திற்கு பொருந்துவதாக இல்லை என்றும் ஹமாஸ் அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

மறைமுக பேச்சுவார்த்தைகளில் நிரப்பப்பட வேண்டிய பெரிய இடைவெளிகள் இன்னும் இருப்பதாக பெயர் குறிப்பிடாத அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்காவின் திட்டம்

இதில் முன்வைக்கப்பட்டிருக்கும் பரிந்துரையில் ஆறு வாரம் நீடிக்கக்கூடிய போர் நிறுத்தம் ஒன்றுக்கு திட்டமிடப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. இதன்போது ஹமாஸ் பிடியில் இருக்கும் 40 இஸ்ரேலிய பணயக்கைதிகளுக்கு பகரமாக இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் 400 பலஸ்தீனர்களை விடுவிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவின் ஓர் அங்கமாக காசா மருத்துவமனைகள் மற்றும் பேக்கரிகள் சீரமைக்கப்படுவதோடு காசாவுக்கு நாளுக்கு 500 வரையான உதவி லொறிகள் நுழைவதற்கு அனுமதிக்கப்படவிருப்பதாக அது தொடர்பில் தெரிந்த வட்டாரத்தை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் இராணுவ சேவையில் ஈடுபட முடியுமான வயதுடைய ஆண்கள் தவிர இடம்பெயர்ந்த அனைத்து பலஸ்தீன பொதுமக்களும் வடக்கு காசாவுக்கு திரும்புவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருப்பதோடு காசாவின் சனநெரிசல் மிக்க பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய படைகள் விலகிவிடும் என்றும் அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தூதுக் குழுக்கள் தொடர்ந்தும் கட்டார் தலைநகர் டோஹாவில் இருந்து வெவ்வேறாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படும் முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு மத்தியஸ்தர்கள் முயன்று வருகின்றனர்.

“ரமழா வரவிருப்பதோடு, அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பதற்கான கால அவகாசத்தை பெறும் பொருட்டு ரமழான் காலத்தில் (போர்) நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதாக இஸ்ரேலியர்கள் இணங்கியுள்ளனர்” என்று யு.எஸ். டீவி ஒளிபரப்புக்கு கருத்து வெளியிட்ட பைடன் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மத்தியு மில்லர், போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறியபோதும், முன்மொழியப்பட்டிருக்கும் இந்த புதிய உடன்படிக்கைக்கு ஹமாஸ் இணங்குவது பற்றி தெரியவில்லை என்றுள்ளார்.

இந்நிலையில் பலஸ்தீன பொதுமக்கள் இடையே செல்வாக்கு செலுத்துவதற்காகவே அமெரிக்கா இந்த போர்நிறுத்த முன்மொழிவை கசியவிட்டிருப்பதாக ஹமாஸ் அதிகாரியான ஒசாமா ஹம்தான் குற்றம்சாட்டியுள்ளார்.

அல் அரபி தொலைக்காட்சிக்கு பேசிய அவர், “பாரிஸ் கூட்டத்தின் வரைவு அமெரிக்க முன்மொழிவு ஒன்று என்பதோடு அது புதிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராக (இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின்) நெதன்யாகுவுக்கு மேலும் கால அவகாசம் வழங்குவதாக உள்ளது” என்று ஹம்தான் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வரவும், இஸ்ரேலிய முற்றுகையை நீக்கவும், கைதிகளை பரிமாற்றுவதற்கு முன் இஸ்ரேலிய கட்டுப்பாடுகள் இல்லாமல் காசா புனரமைப்பு திட்டத்தை ஆரம்பிக்கவும் ஹமாஸ் இன்னும் வலியுறுத்துகிறது என்றும் ஹம்தான் கூறினார்.

முன்னதாக காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்டு இஸ்ரேலியப் படை காசாவில் இருந்து முழுமையாக வாபஸ் பெற்று போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் ஹமாஸ் முன்வைத்த பரிந்துரையை “மாயை” என்று நெதன்யாகு நிராகரித்திருந்தார்.

எனினும் தற்காலிகமான போர் நிறுத்தம் ஒன்று பலஸ்தீனத்திற்கு சொந்தமான நாடு ஒன்றுக்கான திட்டத்தை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்று பைடன் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பலஸ்தீன தனி நாட்டை உருவாக்கும் இரு நாட்டுத் தீர்வை நெதன்யாகு நிராகரித்து வருகிறார்.

### 30,000ஐ நெருங்கும் உயிரிழப்பு

144 ஆவது நாளாக இஸ்ரேலிய படை காசா மீது நேற்று (27) நடத்திய சரமாரித் தாக்குதல்களில் மேலும் பல பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கில் காசா நகர், தெற்கில் கான் யூனிஸ் மற்றும் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டிருக்கும் ரபா நகரை பிரதானமாகக் கொண்டு இஸ்ரேல் வான், பீரங்கி மற்றும் கடற்படை படகுகள் மூலம் தாக்குதல் நடத்தியது.

ரபாவில் உள்ள குவைட் மருத்துவமனைக்கு அருகில் அல் சத்மா குடும்பத்திற்கு சொந்தமான வீட்டை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வான் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

காசா நகரில் திங்கட்கிழமை இரவு நடத்திய செல் தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர். மேற்கு நுஸைரத் அகதி முகாமின் மீது ஆளில்லா விமானம் மூலம் நடத்திய குண்டு வீச்சில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் குண்டுவீசி சென்ற பின் கல் கராராவில் உள்ள வீடு ஒன்றின் இடிபாடுகளில் இருந்து 5 பேரின் சடலங்களை சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் மீட்டிருப்பதாக வபா குறிப்பிட்டது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய 11 படுகொலை சம்பவங்களில் குறைந்தது 96 பேர் கொல்லப்பட்டு மேலும் 172 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 29,878 ஆக அதிகரித்திருப்பதோடு 70,215 பேர் காயமடைந்துள்ளனர். இதில் காணாமல் போயிருக்கும் 7,000க்கும் அதிகமானவர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் 70 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

காசா போரினால் ஆக்கிமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றம் அதிகரித்திருக்கும் சூழலில் அங்குள்ள அகதி முகாம் ஒன்றில் திங்கட்கிழமை இரவு இஸ்ரேலிய படைகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் பலஸ்தீனர்கள் மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு கூறியது.

மேற்குக் கரையின் டுபாஸ் சிறு நகருக்கு அருகில் பரா அகதி முகாமில் இடம்பெற்ற மோதலின்போது இஸ்ரேலிய படைகளின் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்தே இந்த மூன்று பலஸ்தீனர்களும் கொல்லப்பட்டதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கொல்லப்பட்ட மூவரில் ஒருவர் போராளியாக இருந்தபோதும் மற்ற இருவரும் தமது வீட்டில் இருந்தபோது ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகளுக்கு இலக்காகி இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படை தொடர்ந்து சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தி வருகிறது. காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் அங்குள்ள குடியேறிகளினால் குறைந்து 403 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

1967 இல் அரபு இஸ்ரேல் போரின் போது மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்தை ஆக்கிரமித்த இஸ்ரேல் அதில் கிழக்கு ஜெரூசலத்தை ஒருதலைப்பட்சமான தனது ஆட்புலத்திற்குள் இணைத்துக் கொண்டது. போர் நீடிக்கும் காசா மற்றும் இந்த ஆக்கிரமிப்பு நிலங்களை கொண்ட எதிர்கால சுதந்திர நாடு ஒன்றை பலஸ்தீனர்கள் நாடுகளின்றனர்.

# 68 சிறுவர்கள் உயிரிழந்த கலப்பட மருந்துக்கு 23 பேருக்குச் சிறை



உஸ்பகிஸ்தானில் மாசடைந்த இருமல் மருந்தால் 68 சிறுவர்கள் உயிரிழந்த விவகாரத்தில் 23 பேருக்கு சிறைத் தண்டை விதிக்கப்பட்டுள்ளது.

வரி ஏய்ப்பு, தரமற்ற அல்லது போலி மருந்தை விற்பனை செய்தது, பதவியைத் தவறாகப் பயன்படுத்தியது, கவனமின்மை, போலி ஆவணங்களைத் தயாரித்தல், லஞ்சம் கொடுத்தல் ஆகிய குற்றங்களை அவர்கள் புரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் மரியன் பயோடெக் நிறுவனம் தயாரித்த மருந்துகளை உஸ்பகிஸ்தானில் விற்பனை செய்த குராமேக்ஸ் மெடிக்கல் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் ராகவேந்திரா பிரதார் சிங்கிற்கு அதிகபட்சமாக 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. உயிரிழந்த சிறுவர்களின் குடும்பங்களுக்குத் தலா 80,000 டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

# புர்கினாவில் பள்ளிவாசல் தேவாலயத்தில் தாக்குதல்



புர்கினா பாசோவில் கத்தோலிக்க தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட அதே தினத்தில் பள்ளிவாசல் மீது இடம்பெற்ற தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

“கடந்த ஞாயிறு (25) அதிகாலை 5 மணிக்கு ஆயுதமேந்தியவர்கள் பள்ளிவாசல் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் பல டஜன் பேர் கொல்லப்பட்டுள்ளனர்” என்று பாதுகாப்பு தரப்பை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் காலைத் தொழுகைக்காக வந்த முஸ்லிம்களே கொல்லப்பட்டிருப்பதாக உள்ளூர் குடியிருப்பாளர் ஒருவர் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இதே தினத்தில் வடக்கு புர்கினா பாசோவின் தேவாலயத்தில் ஆராதனையில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்து 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். புர்கினா பாசோவின் மூன்றில் ஒன்றுக்கும் அதிகமான பகுதி இஸ்லாமியவாத கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்ற பிராந்தியத்தில் பல ஆயுதக் குழுக்களும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 28ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

# வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

A FULLY OWNED SUBSIDIARY OF NSB

## 2023 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுகள்

### 2023 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறான நிதி நிலைமைகள் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறை காலம் 31/12/2023இல் உள்ளவாறு | முன்னைய காலம் 31/12/2022இல் உள்ளவாறு |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 31,894 | 47,257 |
| மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | - | - |
| வங்கியிலுள்ள இருப்பு | 1,042,216 | 1,963,287 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | - |
| கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிச் சொத்துக்கள் | | |
| - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 630,953 | 796,327 |
| - கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள் | 6,075,046 | 4,426,049 |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | - | - |
| இலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | 202,497 | 102,925 |
| துணைக் கம்பனிகளில் முதலீடுகள் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களில் முதலீடுகள் | - | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 876,578 | 884,129 |
| ஆதன பயன்பாட்டு உரிமைகள் | 104 | 638 |
| ஆதன முதலீடுகள் | 204,977 | 204,977 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 0 | 1,184 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 25,052 | 19,654 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **9,089,315** | **8,446,427** |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவைகள் | - | 191 |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | - | - |
| - நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டது | | |
| - நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்டது | | |
| கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிப் பொறுப்புகள் | | |
| - வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தவேண்டியவைகள் | 418,862 | 464,579 |
| - ஏனைய கடன்பாடுகளுக்குச் செலுத்தவேண்டியவைகள் | 293,891 | 301,615 |
| குத்தகை பொறுப்புகள் | 133 | 798 |
| வழங்கிய கடன் பத்திரங்கள் | 73,169 | 73,555 |
| இளைப்பாறல் நலன்புரிகள் | 60,794 | 51,461 |
| நடைமுறையிலுள்ள வரி பொறுப்புகள் | 179,961 | 182,457 |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள் | 2,715 | 4,155 |
| ஏனைய ஏற்பாடுகள் | - | - |
| ஏனைய பொறுப்புகள் | 199,583 | 274,372 |
| துணை நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டியவை | - | - |
| **மொத்தப் பொறுப்புகள்** | **1,229,108** | **1,353,184** |
| **பங்குரிமை** | | |
| அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | 3,805,290 | 3,805,290 |
| நியதிச் சட்ட ஒதுக்க நிதியம் | 322,168 | 288,765 |
| ஏ.வி.வ. ஒதுக்கம் | 104,109 | 4,595 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய் | 4,904,854 | 4,270,807 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (1,276,214) | (1,276,214) |
| **பங்குதாரர்களுக்கான மொத்த உரிமை** | **7,860,207** | **7,093,243** |
| கட்டுப்பாடற்ற ஈடுபாடு | - | - |
| **மொத்த பங்குரிமை** | **7,860,207** | **7,093,243** |
| **மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புகள்** | **9,089,315** | **8,446,427** |
| **எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்** | **2,963** | **1,737** |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | |
| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | **95** | **104** |
| கிளைகளின் எண்ணிக்கை | **4** | **4** |

### 2023 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான வருமானக் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறைக் காலம் 01-01-2023 முதல் 31-12-2023 வரை | முன்னைய காலம் 01-01-2022 முதல் 31-12-2022 வரை |
|---|---|---|
| வட்டி வருமானம் | 1,435,040 | 1,119,715 |
| வட்டிச் செலவினங்கள் | (25,389) | (30,726) |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,409,652** | **1,088,989** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 346 | 330 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (17) | (29) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **329** | **301** |
| வியாபாரம் மூலமான தேறிய இலாபம்/ (நட்டம்) | - | - |
| இலாபம் அல்லது நட்டம் மூலமாக வடிவமைக்கப்பட்ட நிதியியல் கருவிகளிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்) | - | - |
| தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம் | 91,306 | 128,386 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **1,501,286** | **1,217,676** |
| பெறுமதி குறைப்பு கட்டணங்கள் | 98,816 | (73,199) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **1,600,102** | **1,144,476** |
| ஆளணிச் செலவுகள் | (237,928) | (281,206) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவுகள் | (9,468) | (10,760) |
| ஏனைய செலவினங்கள் | (89,689) | (81,186) |
| **நிதியியல் சேவைகள் மீதான VAT மற்றும் SSCL வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **1,263,017** | **771,324** |
| நிதியியல் சேவைகள் மீதான பெ.சே.வரி (VAT) | (212,454) | (140,670) |
| நிதியியல் சேவைகள் மீதான சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) | (29,258) | (4,808) |
| **VAT மற்றும் SSCL வரிக்குப் பின்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **1,021,304** | **625,847** |
| இணை மற்றும் துணை நிறுவன பங்குகளின் இலாபம் | - | - |
| வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) | **1,021,304** | **625,847** |
| வருமான வரிச் செலவினங்கள் | (353,241) | (180,696) |
| **காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)** | **668,063** | **445,150** |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | |
| பங்குரிமையாளர்கள் | **668,063** | **445,150** |
| **ஒரு பங்கின் மீது ஈட்டிய பங்கிலாபம்** | | |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை இலாபம் | 81 | 54 |

### 2023 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான விரிவான வருமானக் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | 01-01-2023 முதல் 31-12-2023 வரை | 01-01-2022 முதல் 31-12-2022 வரை |
|---|---|---|
| **குறித்த காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)** | **668,063** | **445,150** |
| **வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட விடயங்கள்** | | |
| வெளிநாட்டு செயற்பாட்டு மொழிபெயர்ப்பு மீதான பரிமாற்றல் வித்தியாசம் | | |
| காசுப் பாய்ச்சல் எல்லை மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | |
| கடன் கருவிகளிலுள்ள முதலீடுகள் மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டவை | | |
| இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம் | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் உள்ள கடன் கருவிகள் | | |
| கழி: வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை | | |
| **வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட பங்குடைமை கருவிகளின் முதலீடுகள் மீதான நியாயப் பெறுமதியின் மாற்றம் | 99,514 | (62,346) |
| இலாபம் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் மீது வங்கியின் சொந்த கடன் இடர்காப்பில் பகிர்ந்தளிக்கப்பட்ட நியாயப் பெறுமதியின் மாற்றம் | | |
| நலன்புரித் திட்டங்கள் சார்ந்தவை மீதான உண்மையான இலாபம் / (நட்டம்) | (613) | **(661)** |
| முன்னைய ஊழியர்களின் இளைப்பாற்று நலன்புரியின் மீள் மதிப்பீடுகள் | | |
| மேலதிக மீள் மதிப்பீடுகளின் மாற்றம் | | |
| இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம் | | |
| கழி: வருமானக் கூற்றில் மீள்வைக்கப்படாத ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை | | |
| **குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரியில்** | 98,901 | (63,007) |
| **குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம்** | **766,964** | **382,144** |

### அத்தாட்சிப்படுத்துகை:

இலங்கை சேமிப்பு வங்கியைச் சேர்ந்த தலைவர், பொது முகாமையாளர்/பிநிஅ மற்றும் நிதித் திட்டமிடல் முகாமையாளர் ஆகிய கீழ் கையொப்பமிடப்பட்ட நாங்கள் கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கிணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனையவை கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

**B.M. துஷ்யந்த பஸ்நாயக்க**
**(ஒப்பம்)**
தலைவர்
21-02-2024

**M.A. சுஜித் பெர்னாண்டோ**
**(ஒப்பம்)**
பொது முகாமையாளர்/பிநிஅ
21-02-2024

**H.K. எரஞ்சித் பத்மகுமார**
**(ஒப்பம்)**
சிரேஷ்ட நிதி திட்டமிடல் முகாமையாளர்
21-02-2024

### 2023 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிற்குரிய பங்குரிமை மாற்றங்களின் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | | ஒதுக்கங்கள் | | | | | மொத்தம் | கட்டுப் பாடற்ற வட்டி | மொத்த பங்குரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் | ஒதுக்கப் பட்ட மூலதனம் | நியதிகள் சட்ட ஒதுக்க நிதி | ஏ.வி.வ. ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்து வைக்கப்பட்ட வருவாய் | ஏனைய ஒதுக்கங்கள் | | | |
| **01/01/2023 அன்றுள்ளவாறான மீதி** | 820,447 | 2,984,844 | 288,765 | 4,595 | 889,976 | 4,270,807 | (2,166,190) | 7,093,243 | - | 7,093,243 |
| பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | | | | | |
| பருவத்திற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | 668,063 | - | **668,063** | - | **668,063** |
| ஏனைய பரந்தளவிலான வருமானம் (தேறிய வரியில்) | - | - | - | 99,514 | - | (613) | | **98,901** | - | **98,901** |
| **பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | - | **99,514** | - | **667,450** | - | **766,964** | - | **766,964** |
| பங்குடைமையாளர்களுடனான பரிவர்த்தனை/ நேரடியாக பங்குடைமையில் அங்கீகரிக்கப்படுகின்றன. | | | | | | | | | | |
| வழங்கிய பங்குகள் / ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் அதிகரிப்பு | | - | - | | - | - | - | - | - | - |
| பயன்படுத்தப்பட்ட பகிர்வு விருப்பங்கள் | - | - | - | | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட போனஸ் | - | - | - | | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட உரிமங்கள் | - | - | - | | - | - | - | - | - | - |
| காலப்பகுதியில் மாற்றப்பட்ட ஒதுக்கங்கள் | - | - | 33,403 | - | - | (33,403) | - | - | - | - |
| பங்குடைமையாளர்களுக்கான பங்கிலாபம் | - | - | - | | - | | - | - | - | - |
| **தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம்** | - | - | - | - | - | - | - | - | - | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடுகள் மீதான இலாபம் / (நட்டம்) (கிரய முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது) | - | - | - | | - | - | - | - | - | - |
| ஏனையவைகள் | - | - | - | | - | - | - | - | - | - |
| பங்குடைமையாளர்களுடனான மொத்தப் பரிமாற்றங்கள் | - | - | **33,403** | - | - | **(33,403)** | - | - | - | - |
| **31/12/2023 அன்றுள்ளவாறான மீதி** | **820,447** | **2,984,844** | **322,168** | **104,109** | **889,976** | **4,904,854** | **(2,166,190)** | **7,860,207** | - | **7,860,207** |

### 2023 டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பாய்வு

அ. வங்கி - 31/12/2023

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 31,894 | | | 31,894 |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | | | | - |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 1,042,216 | | | 1,042,216 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | | | - |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 630,953 | | | 630,953 |
| கடன் கருவிகள் | 6,075,046 | | | 6,075,046 |
| பங்குடைமை கருவிகள் | | | 202,497 | 202,497 |
| யுனிட் டிரஸ்ட் முதலீடுகள் | | - | | - |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | 7,780,108 | - | 202,497 | 7,982,605 |

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | | - |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - | - |
| கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள் | | | |
| - வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 418,862 | | 418,862 |
| - ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 293,891 | | 293,891 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 73,169 | | 73,169 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | 785,922 | - | 785,922 |

ஆ. வங்கி - 31/12/2022

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 47,257 | | | 47,257 |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | | | | - |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 1,963,287 | | | 1,963,287 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | | | - |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 796,327 | | | 796,327 |
| கடன் கருவிகள் | 4,426,049 | | | 4,426,049 |
| பங்குடைமை கருவிகள் | | | 102,925 | 102,925 |
| யுனிட் டிரஸ்ட் முதலீடுகள் | | - | | - |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | 7,232,920 | - | 102,925 | 7,335,845 |

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 191 | | 191 |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - | - |
| கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள் | - | - | - |
| - வைப்பாளர்களுக்குச் செலுத்தவேண்டியவை | 464,579 | | 464,579 |
| - ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 301,615 | | 301,615 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 73,555 | | 73,555 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | 839,940 | - | 839,940 |

### 2023 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறைக் காலம் 31/12/2023 | முன்னைய காலம் 31/12/2022 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 1,021,304 | 625,846 |
| **சீராக்கங்கள்:** | | |
| வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசல்லா விடயங்கள் | (153,474) | (4,215) |
| செயற்பாட்டு சொத்துக்களின் மாற்றங்கள் | (469,130) | 95,300 |
| செயற்பாட்டு பொறுப்புகளின் மாற்றங்கள் | (51,297) | (335,511) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | - | - |
| துணை மற்றும் இணை நிறுவனங்களின் இலாபத்தின் பங்கு | - | - |
| துணை மற்றும் இணை நிறுவனங்களின் பங்கிலாப வருமானம் | - | - |
| கீழ்நிலைக் கடன்களுக்கான வட்டிச் செலவினங்கள் | - | - |
| முன்னைய வருடத்திற்கான சீராக்கங்கள் | - | (95,904) |
| நலன்புரித் திட்டங்களை மையப்படுத்தி செலுத்திய பங்களிப்பு | (5,197) | (1,032) |
| செலுத்திய வரி | (357,176) | (314,751) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **(14,972)** | **(30,266)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறிகள், உபகரணங்களின் கொள்வனவு | (200) | (3,365) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான பெறுகைகள் | - | 18,897 |
| நிதி முதலீடுகளிலிருந்தான கொள்வனவுகள் | - | |
| முதிர்வின்போது விற்பனைக்குள்ள நிதி முதலீடுகளிலிருந்தான பெறுகைகள் | - | |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | - | (2,100) |
| துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் முதலீட்டுப் பெறுகைகளின் தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| துணை நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் | - | - |
| ஆதன முதலீடுகளின் கொள்வனவு | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தியவை)** | **(200)** | **13,432** |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| வழங்கப்பட்ட சாதாரண மூலதனப் பங்கிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட ஏனைய பங்குடைமை கருவிகளிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட துணை நிறுவனக் கடன்களிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனக் கடன்களின் மீள்செலுத்துகை | - | - |
| துணை நிறுவனக் கடன்களுக்குச் செலுத்திய வட்டி | - | - |
| கட்டுப்பாடற்ற ஆர்வங்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| தாய் நிறுவன பங்குதாரர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனைய பங்குரிமை கருவி உரிமையாளர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனையவை | - | - |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு (பயன்படுத்தியவை) | - | - |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | (15,172) | (16,834) |
| குறித்த காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 47,066 | 63,900 |
| **குறித்த காலப்பகுதியின் முடிவிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **31,894** | **47,006** |

### 2023 டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான வைப்புகளின் பகுப்பாய்வு

| ஆயிரம் ரூபாய்களில் | நடப்பு காலப் பகுதி 31-12-2023 | முன்னைய வருடம் 31-12-2022 |
|---|---|---|
| **உற்பத்தி ரீதியில்** | | |
| கோரல் வைப்புகள் | - | - |
| சேமிப்பு வைப்புகள் | 103,918 | 132,497 |
| நிலையான வைப்புகள் | 7,769 | 29,061 |
| பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDB) | 307,175 | 303,021 |
| **மொத்தம்** | **418,862** | **464,579** |

### 2023 டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான கடப்பாடுகள், எதிர்பாராதவைகள் மற்றும் பெறுமதி குறைப்பு, கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு

| ஆயிரம் ரூபாய்களில் | நடப்பு காலப் பகுதி 31-12-2023 | முன்னைய வருடம் 31-12-2022 |
|---|---|---|
| உற்பத்தி ரீதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | |
| உற்பத்தி வகை - உள்நாட்டு நாணயம் | | |
| மேலதிகப் பற்று | - | - |
| தவணைக் கடன்கள் | 675,253 | 851,438 |
| பெறவேண்டிய வாடகைக் குத்தகைகள் | 74,111 | 172,973 |
| கடன் அட்டைகள் | - | - |
| அடகுச் சேவைகள் | 29 | 63 |
| பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDP) | 940,418 | 952,326 |
| வீடமைப்புக் கடன்கள் | 12,842 | 15,401 |
| ஊழியர் கடன்கள் | 337,933 | 326,928 |
| **மொத்தம்** | **2,040,586** | **2,319,129** |
| நிலை ரீதியாக கடன்கள் மற்றும் முற்பணங்களின் பெறுமதி குறைப்பு | | |
| கழி: 1ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (8,511) | (22,152) |
| 2ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (23,457) | (43,099) |
| 3ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (1,377,664) | (1,457,551) |
| **கடன்கள் மற்றும் முற்பணங்களின் தேறிய பெறுமதி** | **630,953** | **796,327** |
| **காலப்பகுதிக்கான பெறுமதி குறைப்பின் நகர்வுகள்** | | |
| 1ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | **22,152** | **81,707** |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | (13,640) | (59,556) |
| **இறுதி மிகுதி** | **8,511** | **22,152** |
| 2ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 43,099 | 17867 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | (19,642) | 25,232 |
| **இறுதி மிகுதி** | **23,457** | **43,099** |
| 3ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 1,457,551 | 1,378,567 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | (67,978) | 101,374 |
| ஏனைய நகர்வுகள் | (11,908) | (22,390) |
| **இறுதி மிகுதி** | **1,377,664** | **1,457,551** |
| **மொத்த பெறுமதி குறைப்பு** | **1,409,633** | **1,522,801** |

### 2023 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டுக் குறிகாட்டிகள் (ஒழுங்குபடுத்தப்பட்ட அறிக்கையிடல் அடிப்படையில்)

| விடயங்கள் | 31/12/2023 | 31/12/2022 |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல் மூலதனப் போதுமை (ஆயிரம் ரூபாய்களில்)** | | |
| பொதுப் பங்குடைமை அடுக்கு 1 (Tier I) | 6,061,891 | 6,068,129 |
| அடுக்கு 1 (Tier I) மூலதனம் | 6,061,891 | 6,068,129 |
| மொத்த அடித்தள மூலதனம் | 6,086,897 | 6,068,129 |
| **ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)** | | |
| பொதுப் பங்குடைமை அடுக்கு 1 மூலதனம் (%) (ஆகக் குறைந்த தேவை 7%) | 164% | 165% |
| அடுக்கு 1 மூலதன விகிதம் (ஆகக் குறைந்த தேவை 8.5%) | 164% | 165% |
| மொத்த மூலதன விகிதம் (ஆகக் குறைந்த தேவை 12.50%) | 165% | 165% |
| அந்நிய விகிதம் (Leverage ratio) (ஆகக் குறைந்த தேவை 3%) | 68% | 73% |
| **ஒழுங்குபடுத்தல் திரவத்தன்மை** | | |
| நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் (ஆயிரம் ரூபாய்களில்) | 6,463,285 | 5,526,802 |
| நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் % (குறைந்த தேவைப்பாடு 20%) | 1289% | 954% |
| மொத்தக் கையிருப்பின் உயர் தரத்திலான திரவநிலைச் சொத்து - ரூபா ’000 | 6,829,632 | 3,015,200 |
| திரவநிலை முழுத்தழுவல் விகிதம் (%) (ஆகக் குறைந்த தேவை 100%) | 3661% | 8826% |
| தேறிய நிலையான நிதி விகிதம் (%) (ஆகக் குறைந்த தேவை 100%) | 221% | 181% |
| **சொத்துக்களின் தரம் (கடன் துறையின் தரம்)** | | |
| மொத்த செயற்படாத முற்பணங்களின் விகிதம் % (தேறிய ஐய வட்டி) | 44% | 42% |
| மொத்த செயற்படாத முற்பணங்களின் விகிதம் % (ஐய வட்டியினதும் ஏற்பாடுகளினதும் தேறிய வட்டி) | 1% | 1% |
| கடன் பெறுமதி குறைப்பு (கட்டம் 3) விகிதம் % | 4% | 5% |
| கட்டம் 3 கடன் விகிதம் % இற்கான பெறுமதி குறைப்பு (கட்டம் 3) | 90% | 87% |
| **இலாபத் தன்மை** | | |
| வட்டி எல்லை % | 19% | 15% |
| சொத்துக்களின் மீதான வருவாய் (வரிக்கு முன் %) | 12% | 7% |
| பங்குடைமை மீதான வருவாய் % | 9% | 6% |

**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி, இல. 265, வோட் இடம், கொழும்பு-07.**

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம், "லங்கா டெய்ரிஸ் (பிறைவட்) லிமிட்டட்" 11(5) ஆம் மற்றும் 8 ஆம் சட்ட பிரிவுக்கிணங்க **"லங்கா டெய்ரிஸ் லிமிட்டட்"** எனும் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.

**முன்னைய பெயர்** : **லங்கா டெய்ரிஸ் (பிறைவட்) லிமிட்டட்**
**பதிவு இலக்கம்** : **பிவி3397**
**அலுவலக முகவரி** : **வெலிசர, றாகம**
**புதிய பெயர்** : **லங்கா டெய்ரிஸ் லிமிட்டட**

சபை உத்தரவின் படி
H.K. புலத்வத்தை
கம்பனி செயலாளர்
லங்கா டெய்ரிஸ் லிமிட்டட்
வெலிசர,

27 பெப்ரவரி 2024

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
### போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| மட்டக்களப்பில் பார்குறுக்கு வீதியின் மேம்படுத்தல்கள் (130m) |
| மட்டக்களப்பில் குறுக்கு வீதி சூரிய ஒழுங்கையின் மேம்படுத்தல்கள் (90m) |
| செங்கலடி டிஆர்ஓ வீதியின் கொங்கிறீட் நடைபாதை (150m) |
| வாகரை, கன்டலடி, கடற்கரை வீதி கட்டம் 2 இன் கொங்கிறீட் நடைபாதை (200m) |
| கருவாக்கேனி, கனிஷ்ட பாடசாலை வீதியின் கொங்கிறீட் நடைபாதை (160m) |
| கிரான், விவேகானந்தா கல்லூரி வீதியின் கொங்கிறீட் நடைபாதை (160m) |
| மட்டக்களப்பில் சின்ன உப்போடை குளத்து வீதியின் மேம்படுத்தல்கள் |
| மட்டக்களப்பு, கோட்டைக்கல்லாறு, கொடிவாசல் உள்ளக வீதியின் அஸ்போல்ட் கொங்கிறீட் நிர்மாணம் |
| மட்டக்களப்பில் BT/ சக்தி வித்தியாலயத்தில் இன்டர்லொக் தரை நிர்மாணம் (456m) |
| மட்டக்களப்பு, கட்டம் 2 இல், 5ம் குறுக்கு வீதி லயன்ஸ் கிளப்பில் கொங்கிறீட் வடிகாலமைப்பு ஆரம்ப நிர்மாணம் (120m) |
| மட்டக்களப்பில் வந்தாறு மூலை உள்ளக வீதியின் மேம்படுத்தல் (420m) |

தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் மேற்படி வேலைக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.02.28 முதல் 2024.03.06 வரை RDA மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk ஐப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

Repeat Your Ad For Better Offers

### பெறுகை அறிவித்தல்
## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
### விலைமனுக்களுக்கான அழைப்பு
### (NCB) இறக்குமதிகள்

STATE PRINTING CORPORATION

கீழுள்ள பொருட்களின் வழங்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடம் இருந்து அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன, பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கோப்புக் குறிப்பு | அளவு (மெ./தொ) | உருப்படி | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|
| SPC/SUP/FI/001/2024/07 | 450 (±5%) | சுருள்களில் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அச்சு காகிதத்தின் பெறுகை / 750mm / 70(±2.5%) gsm | 1,800,000.00 |
| SPC/SUP/FI/001/2024/09 | 250 (±5%) | சுருள்களில் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அச்சு காகிதத்தின் பெறுகை / 750mm / 80(±2.5%) gsm | 1,000,000.00 |
| SPC/SUP/FI/001/2024/10 | 350 (±5%) | சுருள்களில் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அச்சு காகிதத்தின் பெறுகை /860mm / 70(±2.5%) gsm | 1,400,000.00 |
| SPC/SUP/FI/001/2024/04 | 300 (±5%) | சுருள்களில் இரு பக்க Coated Art Paper(Matt finished) இன் பெறுகை /230mm or 460mm or 690mm/ 120(±2.5%) gsm | 1,200,000.00 |

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (இறக்குமதி) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்திற்கான தகுதிக்கு பின்வரும் தகைமை அளவுகோல்களை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
   a. உற்பத்தியாளரின் அங்கீகாரம்/ அட்டோர்ணி தத்துவத்தின் மூலம் நிறுவனத்தின் அந்தஸ்தை உறுதி செய்தல்.
   b. செல்லுபடியான வர்த்தகப் பதிவு
3. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் 2024.03.08 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.
4. மீளளிக்கப்படாத கட்டணமாக தொகுதி ஒன்றுக்கு 5,000 ரூபாவை செலுத்தி 2024.02.28 ஆம் திகதி தொடக்கம் 2024.03.19ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் பாதுக்க, பணாலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், வழங்கல்கள் முகாமையாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
5. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்புகளை குறிப்பிட்டு 2024.03.20 ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பணாலுவ, பாதுக்க என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பாதுக்க, பணாலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் உள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.
6. விலைமனு மூடப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்காட்டி தினங்கள் வரை விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன, தலைவருக்கு செலுத்த முடியுமான, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாத வடிவத்தில் அல்லது ரொக்கப்பணத்தில் கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணை ஒன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி/ தொலைநகல் இலக்கத்தில் வழங்கல் முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்**
**பணாலுவ, பாதுக்க**
**2024.02.27**

SPC

## அஞ்சல் திணைக்களம்
### விலைமனுக்களுக்கான அழைத்தல்
### 25,000,000 எண்ணிக்கையான பணப் பற்றுச்சீட்டுக்களை அச்சடித்தல் மற்றும் வழங்கல் – 2024

Sri Lanka POST

1. பின்வரும் வகுதிகள் மற்றும் எண்ணிக்கையில் 25,000,000 எண்ணிக்கையான பணப் பற்றுச்சீட்டுக்களை அச்சடித்தல் மற்றும் வழங்கல் - 2024 – ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அஞ்சல் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | அம்சம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பணப் பற்றுச்சீட்டுக்கள் | 25,000,000 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
3. தகுதித்தன்மை தகவுத்திறன்:
   (அ) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி.
   (ஆ) கடந்த 10 வருட காலப்பகுதியில் எந்தவொரு அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தினாலும் விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
   (இ) கடந்த 2 வருடங்களில் முன்னைய வேலை தொடர்பாக வாடிக்கையாளர் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ஒப்புகைகள்.
4. 2024 மார்ச் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் அஞ்சல் மா அதிபருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 இ.ரூபாவை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுதாரரினாலேயே அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதிகளினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
